மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
கிடைக்கப்பெற்றது
30 JUL 1998
உரிய நடவடிக்கைக்காக
ஆணையாளர்

பொது சன நூலகம்
04 AUG 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சரிநிகர்
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 151 ஜூலை 23 - ஓகஸ்ட் 05, 1998 விலை ரூபா 10.00



# திருமலை : அரசின் மீனவர் குடியேற்றம் !

வடக்கு கிழக்கில் மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப் படுகிறார்களோ இல்லையோ மீனவர் குடியேற்றத் திட்டங்களை அமைத்து விட வேண்டுமென்பதில் அரசுக்குக் கொள்ளை ஆசை. அதில் ஒன்று தான் திருகோணமலை நகரமத்தியில் அமைந்துள்ள தில்லைநகர் என்ற இடத்தில் வாழ்ந்து வரும் மக்களை அகற்றி விட்டு அங்கு மீனவர் வீடமைப்புத் திட்டமொன்றை நிறுவ அரசு எடுத்த முயற்சி.

திருகோணமலையின் புறநகர்ப்பகுதிகளும், சூழவுள்ள நிலப்பரப்புகளும் திட்டமிட்ட குடியேற்றங்களாலும் அரச ஆசிகளுடன் கூடிய குடியேற்றங்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டது போதாதென்று உயர்ந்தபாடு என்றழைக்கப்படும் பத்தாம்குறிச்சி மீனவர்களால் தலைமுறை தலைமுறையாகப் பயன்படுத்தப்பட்டு வந்த கரைவலைப்பாடான தீர்த்தக்கடற்கரை அரசபடைகளின் ஆசியுடன் தற்காலிகமாக பெரும்பான்மையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுப் பத்து வருடங்கள் நிறைவேறி விட்டன.

இந்தப்பகுதி பேச்சளவில் நகரின் இதயமல்ல; சைவ மக்களின் தீர்த்தக் கடற்கரை என்பதால் அவர்கள் மத உணர்வின் இதயம்; பரம்பரையாக பல குடும்பங்கள் வாழக் காரணமாக இருந்த கரைவலைப்பாடு இருந்ததனால் பத்தாம் குறிச்சி மக்களின் உழைப்பின் இதயம்.

ஆனால், தீவிரவாதம் பேசும் நகரசபைத் தலைமை இந்த அடாத்தான குடியேற்றவாசிகளுக்கு வரிமதிப்பீட்டு இலக்கம் வழங்கியுளது வரிமதிப்பீட்டு இலக்கம் வழங்கி வரிகளைப் பெற்றுக்கொள்கின்ற சாதனை செய்யும் நகரசபை இவ்வரி மதிப்பீட்டின் மூலம் அடாத்தான குடியேற்றவாசிகளின் சட்டரீதியான இருப்புக்கு வழிகோலியுள்ளது என்பதை வசதியாக மறந்து விட்டிருக்கிறது.

இதேபோல் மட்டிக்களி கடற்பரப்புக்கு எதிரே உள்ள குப்பை மேட்டில் திடுதிடுப்பென்று கொட்டில்கள் தோன்ற ஆரம்பித்தன. உடனடியாக நகரசபை செய்த பணி அந்த கக்குப்பை மேட்டுக்கு வீதியொன்று போட்டு வீதிக்கு சிங்கள மக்கள் பாராட்டும்படியாகச் சிங்கள பெயர் சூட்டி வைத்ததுதான். இப்போது அந்தக் குப்பை மேட்டு மக்கள் தங்கள் வீட்டு முற்றத்தில் ஒரு லொறியைக் கூடக் கொண்டு சென்று நிறுத்துமளவுக்கு வசதியான பாதையுடன் இருக்கிறார்கள்.

இந்தப் பின்னணியில் தில்லை நகர்ப் பிரச்சினையை ஆராய்ந்தால் நகர சபை எந்தளவு தூரம் அப்பகுதி மக்களை அலட்சியப்படுத்தி வருகிறதென்பது விளங்கும்.

இந்நிலப்பரப்பில் சுமார் அரை நூற்றாண்டாக மக்கள் குடியிருந்து வருகிறார்கள். சிங்கள மக்கள் இங்கு வசிக்கின்ற போதிலும் பெரும்பான்மையானோர் தமிழர்களே. இந்த நிலப்பரப்பு அரசியல்வாதியொருவரின் குடும்பத்துக்குச் சொந்தமானதென்று வாய்வழியாக மட்டுமே கூறப்பட்டு வருகிறது.

இப்பகுதி மக்களை வெளியேற்ற அரசியல்வாதிகள் தரப்பில் பலமுறை பலவழிகளில் முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் எதுவுமே கைகூடவில்லை. இந்த அரசியல்வாதியின் செல்வாக்குக்குப் பல்லிளித்த சில உத்தியோகத்தர்களும் இந்த முயற்சியினால் துணை நின்றனர். எதுவுமே சாத்தியப்படவில்லை.

பிரேமதாச ஆட்சிக்காலத்தில் நடந்த ஜனாதிபதி நடமாடும் சேவையின் போது பொது மக்கள் இக்காணி சம்பந்தமாகத் தீர்க்கமான முடிவு கோரி நடமாடும் சேவைக்கு விடயத்தை எடுத்துச் சென்ற போது மேற்படி அரசியல்வாதியும் அவரது அடிவருடி அதிகாரிகளும் அலுவலக வாசலில் வைத்தே சமாளித்து விட்டனர்.

90 கலவரத்தின் பின்ன கூட இரு தடவைகள் இப்பகுதி மக்கள் அரசியல்வாதி தரப்பினரால் பகுதி பகுதியாகப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். தீர விசாரித்த பொறுப்பதிகாரி ''இன்னொரு தடவை இம்மக்களுக்கு பிரச்சினை கொடுத்தால் உன்னைத் தான் உள்ளே போடுவேன்'' என்று அந்த அரசியல்வாதியின் தம்பியை எச்சரித்தார். பின்னர் அந்தப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மாற்றலாகிச் சென்றதும் அப்பகுதி மக்கள் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டனர். இந்த மக்களே ''உங்களுடையதென்றால் உறுதியைக் காட்டுங்கள்; காணிக்கு விலை தருகிறோம் என்று கூறவே மறுநாள் உறுதியும் காணி வரைபடமும் கொண்டுவரப்பட்டது. பொலிஸ் நிலையத்தில் வைத்தே உறுதியையும் காணி வரைபடத்தையும் பரிசீலித்த சட்டத்தரணியொருவர் அவை இரண்டும் போலியானவை என்று தெரிவித்ததையடுத்து அந்தப் பொறுப்பதிகாரியும் அவர்களை எச்சரித்து அனுப்பி வைத்தார். அத்துடன் விடயங்கள் அமுங்கிப் போயின.

ஆனாலும் நகர சபையின் இன்றைய தலைமையோ, அது குறிபபிட்ட அரசியல்வாதியின் காணி என்ற சாட்டை வைத்துக்கொண்டு இந்தப் பகுதிக்கு அபிவிருத்தியெதையும் செய்யாது நாளைக் கடத்தி வருகிறது. டொக்டர் சிவானந்தம் நகரபிதாவாக இருந்த காலத்தில் இப்பகுதி செப்பனிடப்பட்டது. பாதைகள் திருத்தப் பட்டன. தெருவிளக்குகள் பொருத்தப்பட்டன. அந்தத் தலைமைக்கு இருந்த தைரியம் இந்தத் தலைமைக்கு இல்லாமல் போனது எப்படி என்று தான் இங்குள்ள மக்கள் நகரசபையைப் பார்த்துக் கேட்கிறார்கள்.

நகரசபைத் தலைவர் தேர்தலில் வாக்குக்கேட்க வந்தபோது தில்லை நகரைச் சொர்க்க நகராக்குவேன் என்ற பாணியில் இங்குள்ளவர்களிடம் வாக்குக் கேட்டார். நான்கு வருடங்களைக் கடந்து சந்திரிகாவின் அன்பளிப்பில் காலந்தள்ளும் நகரசபை இப்பதவிக்கு இன்றுவரை எதுவுமே செய்யவில்லை. ஆனாலும் தலைவரோ மனந்தளராத விக்கிரமாதித்தனைப்போல எவ்வித சலனமும் இல்லாமல் இந்த மக்களுக்கு இப்போதும் வாக்குறுதிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்.

குப்பைமேட்டுக்கு றோட்டுப்போட்டு வீதிவிளக்குப்போட்டுப் பெயர் சூட்டி மகிழ்ந்த நகரசபை - தீர்த்தக்கடற்கரையில் அடித்தள குடியேற்றத்துக்கு அனுமதி வழங்கிய நகரசபை - கோயில் காணிகளில் சண்டித்தனமாகக் குடியிருப்போரைப் போஷிக்கும் நகரசபை தமிழர்கள் தானே என்ற ஒரே காரணத்துக்காக ஒழுங்காக வரிசெலுத்தும் மக்களுக்கு எதையும் செய்யாது வாக்குறுதிகளை மட்டுமே இன்றுவரை வழங்கி வருவது இப்பகுதி மக்களின் ஆத்திரத்தைக் கிளறியுள்ளது.

நகரின் மத்தியில் நகரசபையால் அலட்சியப்படுத்தப்பட்ட பகுதியென்பதால் தானோ என்னவோ மீனவர் வீடமைப்பு நிறுவ அரசுக்கு ஆசை பிறந்தது. இப்பகுதி மக்களின் எதிர்ப்புணர்விலும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் பா.உ.வின் முயற்சியினாலும் இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளபோதிலும், நகரசபை இப்பகுதியைத் தொடர்ந்தும் புறக்கணித்து வந்தால் பொலிவற்ற பகுதியைப் பொலிவாக்குவேன் என்று அரசு கூறி மீண்டும் தலையிட முயலலாம்.

அரசின் திட்டம் வெற்றிபெற்றால் இந்த நகரசபை கைகட்டி வாய்பொத்தி சிங்கள மீனவக் கிராமத்துக்குச் சேவை செய்யாமலா போகும்?

நகரின் இனவிகிதாசாரம் மாற்றப் பெற்றால் முதல் ஆபத்து நகர சபை ஆசனங்களை அலங்கரிப்பவர்களுக்கும் அந்த ஆசை உடையவர்களுக்கும்தான் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

*-விவேகி*

# வவுனியாவில் சோகமயம் !

புளொட் இயக்க பா.உ. சண்முக நாதன் கண்ணிவெடியில் கொல்லப்பட்டதற்குக் புலிகளே காரணம் என்று அடித்துச் சொல்கின்றார்கள் அந்த இயக்கத்தினர்.

இது ஒரு உட்கொலையாக இருக்கலாம் என்ற சந்தேகம் பரவலாக எழுப்பப்பட்டதை மறுப்பதற்காக சற்று உரத்த குரலில் அவர்கள் பேசவேண்டியிருக்கிறது.

இறந்து போனவரைப் புகழ்வதும் அவரது சிறப்புக்களைப் பற்றிப் பேசுவதும் எமது மரபு தான்.

ஆனால், இந்தக் குரல் சற்று அதிகமாகப் பேசப்படும் போது தான் சகிக்க முடியாமல் போய் விடுகிறது.

அவர் ஏதோ மக்களுக்காக ஓய்வுறக்கமில்லாமல் இயங்கினார் என்பது போலக் கூறுவதை எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்?

இந்தியப் படை வந்த போது, தாம் அவர்களுடன் சேர்ந்து புலிகளுக்கு எதிராக செயற்படமாட்டோம் என்று கூறினார் என்பதையெல்லாம் கேட்கும் போது புல்லரிப்பதற்கு பதிலாக எரிச்சல் தான் ஏற்படுகிறது.

பா.உ. இறந்ததும் வவுனியாவில் உள்ள கடைகளை எல்லாம் மூடுமாறு மிரட்டி சோகம் கொண்டாட வைத்துவிட்டு 'வவுனியா சோக மயம்' என்று அறிவிப்பதாலும் மக்கள் மத்தியில் பொய்களை உண்மையாக்கி விட முடியாது.

சென்ற இதழ் சரிநிகரில் தான் இதே பா. உ. இவர்களால் கடத்தப்பட்ட இளைஞன் சுகிர்தராஜ் அவர்களை 'தப்பியோடி விட்டார்' என்று வாய் கூசாமல் கூறிய செய்தி வெளிவந்திருந்தது.

புளொட் இயக்கம் என்ன தான் சமாதானம், பாராளுமன்ற ஜனநாயகம் என்று புதுப்புது அவதாரங்களை எடுத்தாலும் அதன் பழைய இயக்கக் குணம் மாறவில்லை என்பதற்கும் வன்னி மக்களுக்கு செய்து வரும் சேவைக்கும் இது ஒரு உதாரணம்.

அவர் கொல்லப்பட்டதை யாரும் சரியான ஒரு நடவடிக்கை என்று சொல்லப் போவதில்லை. இத்தகைய நடவடிக்கைகள் எந்த மாற்றத்தையும் தரப்போவதும் இல்லை என்பதும் உண்மை தான்.

ஆனால், அரசியல் படுகொலைக் குற்றத்துக்கு உள்ளாகி விட்டதற்காக ஒருவர் திடீரெனப் புனிதமாகி விடுவதில்லை என்பதையும் மறந்து விட முடியாதல்லவா?

## மறக்கப்பட்டவரின் சோகம் சொல்ல....

கடந்த வாரங்களில் புலிகளால் கரும்புலித்தினமும், புளொட்டினால் வீரமக்கள் தினமும் அனுஷ்டிக்கப்பட்டது. போரின் தீயில் அழிந்து போன முகங்களை நினைவு கூருகின்றனர். தம் விடுதலைப் போரில் விதையாகி வீழ்ந்தவர்களை மரியாதைக்குட்படுத்துகின்றனர். நன்று நன்று. ஆனால், இவர்களின் இச்செயல்கள் எமக்குள் மேலும் சில கேள்விகளை எழுப்புகின்றனவே. இந்த மரியாதை கூறல்களில் விடுபட்டவர்களை நினைத்துப்பார்க்க வைக்கின்றனவே. விடுதலை எனும் தீர்மானத்தையே மூச்சாகக் கொண்டு இயக்கங்களில் இணைந்து உட்கட்சிப் படுகொலைகளினால் இல்லாது ஒழிக்கப்பட்டவர்களை யார் நினைவு கூருவது? புளொட்டில் இணைந்து உட்கட்சி வேறுபாடுகளால் அழிக்கப்பட்டவர்களை புளொட் நினைவு கூர முன்வருமா? உபதலைவர் உட்பட பலரை உட்கட்சி வேறுபாடுகளால் விலாசம் இல்லாமலாக்கிய புலிகள் அவர்களின் சாவைப் பற்றி என்ன கூறுகின்றனர்? ஆகக் குறைந்தது அவர்கள் ஏன், யாரால் கொல்லப்பட்டார்கள் என்பதையாவது தெரிவித்து சாவிற்கு கொடுக்கப்படும் குறைந்த மரியாதையையாவது தரலாமே? பல சந்தர்ப்பங்களில் சிலர் இறந்து போய்விட்டனரா இல்லையா என்பதைக் கூட அறிவிக்கத் தயாராக இல்லாதபோது ஏனையவர்களிற்கு செய்யப்படும் மரியாதை எந்தளவு தூரத்திற்கு உண்மையாக இருக்கப்போகின்றது எனும் கேள்வி எழும்புவது தவிர்க்க முடியாததாகின்றதே. இவர்களை மட்டுமல்ல, இயக்கங்களில் இணையாது ஆனால், போராட்டத்தில் நேரிடையாக இறந்த பொதுமக்களின் விபரங்களாவது வெளிவருமா? உதாரணமாக 1984இல் கைதடி சந்தி பௌசர் குண்டு வெடிப்பில் இறந்த அந்தச் சாரதியைப் பற்றி எந்த விதமான விபரமும் இல்லை. இப்படி மறக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? இதில் இன்னொரு பிரிவு; எவராலும் நினைவு கூரப்படாதவர்கள் உள்ளனர். இந்தியப் படை காலத்தில் வலுக்கட்டாயமாக ஈ.பி.ஆர்.எல்.எப்பிலும் ஏனைய இயக்கங்களிலும் சேர்க்கப்பட்டு பின் புலிகளின் வருகையின் போது அழிக்கப்பட்ட அந்த அப்பாவிகளின் பெயர்களை யார் நினைவு கூருவர்? ஒவ்வொரு இயக்கமும் தமிழீழம், விடுதலை, பாராளுமன்ற அரசியல் என்பவற்றிற்கும் அப்பால் வெறும் சொந்த நலனிற்காக; அந்த தலைமைப்பீட நலனிற்கு சார்ந்து அதன் கொள்கைக்கு ஒட்டி இறந்தவர்களையே நினைவு கூருவதும் அம்மரணங்களையே போற்றி வழிபடுவதுமே வரலாறாக போகின்றது. வேண்டும் என்றே மறக்கப்படும் இந்த மக்களின் தியாகம் சொல்ல சோகம் சொல்ல எவர் முன்வருவா?

## கண்ணீரில் செய்யும் அரசியல்!

ஈ.பி.டி.பி யினர் வடக்கு மக்களின் நிவாரணம் குறைக்கப்பட்ட புதிதில் சொல்லிய சொல் ஒன்றை அறிந்து புல்லரிச்சுப்போட்டன். அதை அரசு நீக்காவிடில்; குறைப்பைத் தவிர்த்து வழக்கம்போல நிவாரணம் கொடுக்காவிடில் தாம் அரசிற்கு வழங்கிய வரும் ஆதரவை, அவசரகால சட்டம் பற்றிய தம் நிலைப்பாட்டை மாற்றவேண்டி வரும் என அக்கட்சி கூறியிருந்தது. அதுவும் அதன் தலைவரே கூறியிருந்தார். ஆனால் அரசு அப்படி எதுவும் செய்யவில்லை. குறைப்பு குறைப்புத்தான். (No Comments) எனும் ரீதியில் இருந்துவிட்டது. நானும் இந்த முறை அவசரகாலச்சட்டம் மீதான வாக்கெடுப்பின்போது ஈ.பி.டி.பி யினர் ஆவேசமாக எதிர்ப்பினம் என்று பார்த்துக் கொண்டு நின்றால்..... அதைப் பற்றிய சிலமனே இல்லாமல் கையை உயாத்தி ஆதரிச்சு நின்றிச்சினம். என்னே ஒரு கடமை விசுவாசம்! வாக்குறுதியை நிறைவேற்றாமல் விடுவதில்தான் எவ்வளவு அக்கறை. நான் நினைக்கிறேன். அவையள் சொன்ன அந்த விடயத்தை ஞாபகத்தில் கூட வைத்திருக்க மாட்டினம் என்று. அடுத்த முறையும் கீழ்த்தரமான குறுக்குவழியில் வந்து பாராளுமன்ற கதிரையை நூறு, இருநூறு வாக்குகளால் நிரப்பவேண்டுமே. இதற்கிடையில், மோசமான சகல இராணுவ அடக்குமுறைக்கும் துணைபோகும் அந்த அவசரகால சட்டத்திற்கு ஈ.பி.டி.பி. வாலாட்டிக் கொண்டு அதன் விளைவான செம்மணி புதைகுழிகளை தோண்டிப் பார்க்க அரசிடம் முறையிடுவதுதான் வேடிக்கை. நான் கிள்ளுவன், தொட்டிலையும் ஆட்டுவன் நீ பேசாமல் இரு என அரசிடம் சொல்லியிருப்பார்கள் போல. தம் பிள்ளைகளின் செய்தி அறியாது மனம் பேதலித்து நிற்கும் அந்த அன்னைமார்களின், தந்தைமார்களின் கண்ணீரும், சோகத்திலும் அரசியல் செய்யும் இவர்கள் திருந்துவது என்பதும் ஒரு போதுமே நடக்காமலே போய்விடுமோ?

## ஒத்துப்பாடு ஜனநாயகமென...

கடைசியில் எப்பாடுபட்டாவது மாகாண சபைத்தேர்தலை ஒத்திப்போடுவதை கநியாயப்படுத்தி ஆகவேண்டிய நிலையில் அரசு இருக்குது. அதன் பிரச்சார ஊதுகுழல்கள் பொதுமக்களின் முடிவு இதுதான் என ஒரு மாயத்தோற்றத்தை உண்டுபண்ணி அதற்குள்ளேயே நாட்டை அமுக்கப் பார்க்கின்றன. இவற்றைப் பார்த்தால் வரும் சிரிப்பை எப்படித்தான் அடக்க முடியுமோ தெரியவில்லை. எதைச் சொல்லலாம் எனப்பார்த்துக் கொண்டிருந்த அரசிற்கு ஜே.வி.பியில் இருந்து பிரிந்து போய் 1989 காலப்பகுதியில் அதன் உறுப்பினராக இருந்த ஒருவரை தலைவராகக் கொண்ட 'ஜன விமுக்தி சகயோக பெரமுன'வின் பத்திரிகை மாநாடு நல்ல ஒரு வாய்ப்பாகப் போச்சு. ஜே.வி.பியை அவ் அமைப்பு குறைகூறி அதிகாரம் எதுவும் இல்லாத மாகாண சபைத்தேர்தலிற்கு ஜே.வி.பி. போட்டியிடத் துடிக்குது. அதைவிட யுத்தம் எவ்வளவு முக்கியம் என கூறியிருக்கிறது. அதை அரசின் பிரச்சார சாதனங்கள் தூக்கிப் பிடிச்சு செய்த விளம்பரம்தான் சிரிப்புக்கிடமானது.

இவ் அமைப்பின் பேட்டியை புரிந்துகொள்பவர்கள் அரசின் இன்னொரு ''கூட்டு''த்தான் இது எனப் புரிந்து கொண்டு இருப்பர். இவ் அமைப்பினர் ஒட்டிய சுவரொட்டியில் ஐ.தே.க, புலிகள், ஜே.வி.பி. மூன்றையும் ஒரே அணியினர் எனக்கூறியிருந்தது. வந்த புதிதில் இவ் அரசு தானே வாய்திறந்து இப்படி புலிகளுடன் அதன் எதிர்ப்பாளர்களை சமப்படுத்திக்கூறியது. இப்போது அதற்கு தன்னுடைய இந்தப்பொய்யை நம்பமாட்டார்கள் எனும் பயம் வந்துவிட்டதோ தெரியவில்லை. இன்னொரு அமைப்பிற்குள் நின்று தன் முகத்தை மறைத்து கூறுகிறது. எந்த ஒரு எதிர்ப்பையும் புலிகளுடன் இணைத்து, அதன் மூலம் பயங்கரவாத முத்திரை குத்தமுயல்வது ஒரு சாதாரண விடயமாக பார்க்கக்கூடிய விவகாரம் அல்ல. இத்தகைய செயல் புலிகளுடன் இணைத்து பேசப்பட்ட அமைப்பை பேரழிவிற்குட்படுத்தமுனையும் ஒரு முயற்சியின் அங்கமாகவே கொள்ளவேண்டும். அரசின் வேடிக்கையான நடவடிக்கைகளில் ஒன்று என்னவென்றால், புலிகள் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுப்பவர்களை அழித்தொழிக்கின்றனர் என குறை கூறிக்கொண்டு அந்த ஜனநாயக அம்சமான தேர்தலையே நடாத்த பின்னிற்பதுதான். வாழ்க அதன் ஜனநாயகம்!

கா.சு.தீரன்

## மூதூர் வைத்தியசாலை :

# வைத்தியர்களை நியமிப்பது யார்?

மூதூர் வைத்தியசாலை தகுதி பெற்ற மருத்துவர்களின்றியும், போதிய மருந்துகள், மருத்துவ வசதிகள் இன்றியும் மக்களை அல்லல்படுத்திக்கொண்டிருக்கிறது. வசதிகள் அற்று தனித்த ஓர் இடமாக ஒரு புறம் கடலுக்கும் மறுபுறம் கரடுமுரடான நீண்ட பாதைக்கும் அப்பால் இருக்கும் மூதூரில், பொதுவான மக்கள் வசதிகள் குறைவென்றாலும் அத்தியாவசியத் தேவையான மருத்துவ வசதிகள் குறைவு மக்களை மிகவும் பாதிக்கச் செய்கின்றன.

முன்பு எம்.பி.பி.எஸ். தகைமையுடன் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய அனஸ் அவர்களின் தீவிர வைத்தியசாலைக் கண்காணிப்பு, ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பன அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு கஷ்டமாகவும் தங்களின் மனம் போன வேலை முறைமைக்கு சவாலாகவும் இருந்ததால், அவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஆர்ப்பாட்டம் செய்து மாற்றலாக்கிவிட்டனர்.

அவரின் மாற்றத்திற்குப் பின் தகுதிவாய்ந்தவர்கள் இல்லாத நிலையில் இழுபறிப்பட்டுக்கொண்டிருக்கிறது வைத்தியசாலை. பின்னர் ரஷ்யாவில் வைத்திய கற்கை முடித்த மாவனல்லையைச் சேர்ந்த ஷாகிர் தம்பதிகள் டி.எம்.ஓ, எல்.எம்.ஓ.வாக பணியாற்றி வந்தனர். இவர்களின் காலத்தில் மக்கள் ஓரளவு திருப்தியான சேவையைப் பெற்று வந்தனர். இவர்களும், அண்மையில், மாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். புலிகள் இவர்கள் இருவரிடமும், மூன்று லட்சம் கப்பம் கோரியதாலேயே இவ்வாறு இவர்கள் செல்ல வேண்டியேற்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. பயங்கரவாதப் பிரதேசமல்லாத வேறு இடங்களில் உழைக்கக் கூடிய இவர்கள் இங்கிருந்து சேவையாற்றிய போதும் கூட புலிகளால் இவ்வாறான கோரிக்கைக்குள்ளாகியிருந்தது ஒரு விசனிக்கத்தக்க விடயமே.

இவர்களும் மாற்றலாகிப் போன பின்னால் மூதூரைச் சேர்ந்த எம்.பி.பி.எஸ். தகைமையுடைய ஓரிருவர் தங்கள் சொந்த ஊரில் கடமையாற்ற விருப்பம் தெரிவித்திருந்தனர். எனினும் அதற்கும் தடையாக புலிகளின் கோரிக்கை அமைந்திருக்கிறது. அவ்வாறு வரும் உள்ளூர் வைத்தியர் எவரும் ஒரு லட்சம் தர வேண்டும் என தெரி[...]கப்பட்டிருப்பதால் அவர்களும் வந்து சேவையாற்றத் தயங்குகிறார்கள்.

உள்ளூரில் தனியார் வைத்திய நிலையங்களை அமைத்து வைத்தியத் தேவையை நிறைவேற்றி வந்த மூதூர் பிரதேச வைத்தியர்கள் சிலரும் அண்மைக்காலத்தில் புலிகளால் சகல தரப்புகளுக்கும் அவர்களின் உழைப்பு மட்டங்களுக்கு ஏற்ப விடுக்கப்பட்ட பணக் கோரிக்கையை அடுத்து வெளியேறியுள்ளனர்.

இவர்கள் போனதன் பின்னரும் பல நெருக்குதல்கள் ஏற்பட்டன. பொதுவாகப் பலர் இன்றும் கூட திருப்தியான வைத்திய சேவைகளுக்கு சீரற்ற கடற்போக்குவரத்துக்கு மத்தியிலும், திருமலை தள வைத்திய சாலைக்கே செல்லுகின்றனர்.

அண்மைக்காலமாக மூதூர் வைத்தியசால்லக்கு முன்னால் இயங்கும் தனியார் மருத்துவ நிலையம் திருமலையிலிருந்து மகப்பேற்று வைத்தியர் உட்பட பல தகுதி வாய்ந்த வைத்தியர்களை அழைத்து ஓரளவுக்குச் சேவையாற்றி வருகின்றது. எனினும் இது மூதூரையும் அதனைச் சூழ உள்ள பல கிராமங்களையும் சேர்ந்த மக்களுக்குப் போதுமானதல்ல.

இவ்வாறான மூதூர் வைத்திய நிலைகளிடையே வைத்தியசாலை வெற்றிடத்தை நிரப்ப தற்போது ஏ.எம்.பி. தரத்திலான தம்பதிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மூதூருக்கு அண்டிய கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களின் வைத்திய நடவடிக்கையும் போதுமானதாக இல்லை. எம்.பி.பி.எஸ் தரத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று, நான்கு பேர் சகல மருத்துவ வசதிகளுடன் பணியாற்ற வேண்டிய தேவையிலிருக்கிற வைத்தியசாலைக்கு இவர்கள் இருவரது சேவையும் மட்டுப்படுத்தப்பட்டதே. பல நோயாளர்களை திருமலை வைத்தியசாலைக்குச் செல்லுமாறு இவர்கள் பணிக்கிறார்கள். கர்ப்பிணித் தாய்மார்களின் விடயத்தில் கவனம் போதாது என்றே குறை கூறப்படுகிறது.

இது போக மூதூரில் கடமையாற்ற வரும் வைத்தியர்கள் வைத்தியசாலை விடுதியிலேயே தங்கள் தனியார் மருத்துவமனையையும் நடாத்தி உழைப்பை மேற்கொள்கின்றனர்.

இருந்தும் இங்கு வந்து சேவையாற்றுபவர்களை எவரும் முற்றிலுமாக குறை கூற முடியாது. தகுதி பெற்ற வைத்தியர்களை நியமிக்காததும், மருத்துவ வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தாததும், அரசுசார் உயர் மட்டத்தவரின் அல்லது இது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்காத பிரதேச அரசியல்வாதிகளின் குறை என்றே சொல்ல வேண்டும். அத்துடன் வடக்கு கிழக்கின் சில பிரதேசங்களின் தங்கள் அச்சுறுத்தல் மூலம் பொது மக்களின் வாழ்வை சிக்கலுக்குள்ளாக்குகின்ற புலிகளின் குறை என்றும், இதனைச் சொல்ல வேண்டும்.

இந்தக் குறைகளை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து நீக்கி மூதூர் மக்களின் வைத்தியச் தேவையை சீரிய நிறைவேற்ற முன்வந்து ஒத்துழைக்க வேண்டும்.

நடக்குமா?

-ரிஷி

# ஜே.ஆர் = சந்திரிகா!

'யுத்தம் என்றால் யுத்தம், சமாதானம் என்றால் சமாதானம்' முன்னைனாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் புகழ் பெற்ற வாசகங்கள் இவை.

யூலைக் கலவரம் வெடித்து, நாடு பூராவும் தமிழ் மக்கள் மீதும் அவர்கள் சொத்துக்கள் மீதும் தாக்குதல் நடந்து கொண்டிருந்த வேளையில், தமிழர்களை இந்த நாட்டை விட்டே விரட்டுவோம் என்ற நோக்கத்துடன் நடந்த காடைத்தனங்களை சிங்கள மக்களின் 'உணர்ச்சிகளின் வெளிப்பாடு' என்று அறிவித்ததோடல்லாமல், தமிழ் மக்களை நோக்கி 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்று அறைகூவல் விடுத்தார் அவர்.

இது நடந்து பதினைந்து ஆண்டுகள் முடிந்து விட்டன.

அந்த யூலைக் கலவர வடுவின் காரணமாக தீவிரமடைந்த யுத்தம் இன்னும் ஓயாமல் நடந்து கொண்டிருக்கிறது.

'சமாதானத்தைக் கொண்டு வருவோம்' என்ற சூளுரையுடன் ஆடுட்சிக்கு வந்த புதிய ஜனாதிபதி சந்திரிக்காவும் இன்று அதே வார்த்தைகளைத் திருப்பிச் சொல்லியிருக்கிறார்.

மீரிகமவில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது நமது ஜனாதிபதி இந்த மிரட்டலை விடுத்திருக்கின்றார்.

அவரது பேச்சு புலிகளுக்கு எதிரான, புலிகளுக்கு கூறுவதாக அமைந்திருந்த போதும் அதன் விளைவுகள் தமிழ் மக்களுக்கு எதிரான மிரட்டல்களாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

நாட்டின் 30 வீதமான தேசிய வருமானம் யுத்தத்திற்கு செலவாகிறது என்றும் அக் கூட்டத்தில் அவர் தெரிவித்திருந்தார். அவர் ஆட்சிக்கு வரும் போது யுத்தச் செலவை குறைக்கப் போவதாகக் கூறிக் கொண்டுதான் ஆட்சிக்கு வந்தார். ஆனால் யுத்தத்தை தொடங்கி, யுத்தச் செலவை அதிகரித்ததைத் தவிர வேறெதையும் அவர் செய்யவில்லை. இந்த புள்ளிவிபரத்தை ஜனாதிபதி அவர்கள் எங்கிருந்து பெற்றுக் கொண்டாரோ தெரியவில்லை. யுத்தத்திற்கான செலவாக அதுமட்டுமல்ல, பாதுகாப்பு வரி மற்றும் அந்நிய உதவிகள் என்றெல்லாம் சேர்க்கப்படும் நிதிக்கு அளவு கணக்கில்லை. தவிரவ் யுத்தத்தில் கொட்டப்படும் வேகத்தைப்பார்த்தால் இந்த புள்ளிவிபரம் சரியாக இருக்கும் என்று தோன்றவில்லை. இந்த ஆண்டுத் தொடக்கத்திலேயே இருந்த புள்ளி விபரம் இது.

புலிகளின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் இருந்த மக்களில் 85 சதவீதமான மக்களை, நாட்டின் தேசிய வருமானத்தில் முப்பது வீதத்தினை கடந்த மூன்று வருடங்களாகச் செலவு செய்து முயன்றதன் பலனாக ஜனாதிபதி அவர்கள் தமது கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வந்துவிட்டதாகப் பெருமையுடன் இக் கூட்டத்தில் அறிவித்திருக்கின்றார்.

இந்தப் புள்ளி விபரமும் அமைச்சர் அனுரத்த அவர்கள் அளித்த புள்ளி விபரம் தான். அச்சடிக்கப்பட்ட இலங்கை தேசப்படத்தில் நிறந்தீட்டி 85 வீதத்தை மீட்டெடுத்துள்ளதாக அவரும் அவரது பாதுகாப்பு அமைச்சும் கூறியதை அப்படியே ஒப்பித்திருக்கிறார் ஜனாதிபதி.

தகவல்களைப் பொய்யாக தருபவர் அனுரத்த என்று ஏற்கெனவே பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் குற்றம் சாட்டியிருப்பதை உறுதிப்படுத்துவது போலத்தான் அவரது வரை படங்கள் இருக்கின்றன.

பிரபாகரனுக்கு காடு மட்டுமே எஞ்சியுள்ளதாகவும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

உண்மையில் இன்னமும், ஜனாதிபதி சொல்வது போல பிரபாகரனுக்கும் புலிகளுக்கும் இருப்பது வெறும் காடு தான் என்றால், எஞ்சியிருப்பது 15வீதம் பிரதேசம் தான் என்றால், ஏன் தெற்கிலே தேர்தல் நடாத்த பாதுகாப்பு கொடுக்க முடியாது என்று சொல்கிறார் அமைச்சர் அனுருத்தர்?

இன்னும் ஒருபடி மேலே போய், தேர்தல் நடாத்தினால் தான் யுத்தத்திலிருந்து ஒதுங்கி விடுவேன் என்று வேறு மிரட்டியும் இருக்கிறார்.

ஆனால் ஜனாதிபதியோ இதையெல்லாம் கணக்கிலெடுத்ததாகத் தெரியவில்லை.

அவர் நாடு பூத்துக் குலுங்குவதாக நம்பிக் கொண்டிருக்கிறார்.

கடந்த காலத்தைப் பற்றியும் ஐ.தே.க. அரசாங்கத்தின் ஊழல்களைப் பற்றியும் பேசிப் பேசியே மக்களை எல்லாவற்றையும் நம்ப வைத்துவிடலாம் என்ற நினைப்பு அவருக்கும் அவரது அரசாங்கத்தினருக்கும்.


ஆனால், தேர்தலை நினைத்தால் தான் கிடுகிடு நடுக்கம் வருகிறது போலும்.

இதனால் தான், ஜே.ஆர். பாணி யுத்தமும் சமாதானமும் பற்றி அவரும் பேசத் தொடங்கியுள்ளார் போலும். யுத்தம் என்றால் என்ன, சமாதானம் என்றால் என்ன இரண்டுமே, இந்த அரசாங்கத்திற்கும் அதை சூழ நின்று ஆலவட்டம், கொடி பிடிக்கும் பரிவாரங்கட்கும் வருமானம் தரும் விடயங்கள் தான்.

இரண்டையும் வைத்து வியாபாரம் செய்யும் வல்லுனர்கள் அவர்கள்.

ஆக, ஜனாதிபதி எதற்கும் தயார் என்று சொன்னால் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது!

○



01431348 S.M.O.D.ADDL.SEC. 596 P01 JUL 13,'98 17:15

P.O. Box 372
Telephones 430369 - 9, 430370 - 9
My No. SMOD/129/10/K
Your No.

රාජ්‍ය ආරක්ෂක අමාත්‍යාංශය, අංක 15/5, බලදක්ෂ මාවත, කොළඹ 03, ශ්‍රී ලංකාව

பாதுகாப்பு அமைச்சு, இல 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03, இலங்கை

MINISTRY OF DEFENCE, No. 15/5, Baladaksha Mawatha, Colombo 03, Sri Lanka

Date 13 July, 1998

Mr. V Thirunavukkarasu,
Nava Sama Samaja Party,
143, Kew Road,
Colombo 2.

SRISKANDARAJAH JEYABALAKRISHNAN

Reference your letter dated 23rd June 1998 requesting Defence Ministry clearance to release Mr. Sriskandarajah Jeyabalakrishnan from Vavuniya Welfare Centre to join their parents in Colombo.

The matter was investigated through the committee appointed for this purpose and it has been revealed that this family is from Jaffna but not from Colombo. As you are aware, present situation in Jaffna is quite satisfactory for a person to get his education in a Jaffna college. Therefore, you are kindly requested to instruct Mr. Sriskandarajah Jeyabalakrishnan to go to Jaffna instead of coming to Colombo.

If he is in agreement, Resettlement and Rehabilitation Authority of the North will take necessary action to provide him transport facilities up to Jaffna.

M.S. Wickramarachchi
Additional Secretary
for Secretary Defence

# போ, யாழ்ப்பாணம்!

ஸ்ரீஸ்கந்தராஜா ஜெயபாலகிருஷ்ணன் கொழும்பில் உள்ள தனது பெற்றோர், சகோதர, சகோதரிகளுடன் ஒன்று சேருமுகமாக வவுனியா நலன்புரி நிலையமொன்றில் தற்காலிகமாக உள்ளார் (அதாவது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்) இவரது பெற்றோரும், சகோதர, சகோதரிகளும் கொஞ்சக் காலத்துக்கு முன்பே கொழும்பில் வந்து நி[...]கவே தங்கியுள்ளனர்.

இவரது ஏனைய சகோதர, சகோதரிகள் அனைவரும் கொழும்பில் கல்வி கற்று வருகின்றனர். இவரும் தனது கல்வியைத் தொடரும் முகமாகவும், தனது குடும்பத்தாருடன் ஒன்று சேருமுகமாகவும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கோரி ந.ச.ச.க. அரசியல் குழு உறுப்பினர் வ.திருநாவுக்கரசு ஊடாகக் கோரிக்கை விடுத்திருந்தார். இதற்குப் பதில் அனுப்பியுள்ள பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எஸ்.விக்ரமாரச்சி தமது பதிலில் இவ்வாறு தெரிவித்துள்ளார்:

"இவ் விடயம் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் விசாரணைகளினூடாக, இக் குடும்பம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒன்றேயன்றிக் கொழும்பைச் சேர்ந்த ஒன்றல்லவெனத் தெரியவருகிறது. மேலும் கல்வி பயில விரும்பும் ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரியொன்றில் கல்வி பயில கூடிய போதிய திருப்திகரமான நிலமை யாழ்ப்பாணத்தில் நிலவுகிறது, எனவே ஸ்ரீஸ்கந்தராஜா ஜெயபாலகிருஷ்ணனைக் கொழும்புக்கு வருவதற்குப் பதிலாக யாழ்ப்பாணத்துக்குச் செல்ல வழிநடத்துங்கள்" என்ன அற்புதமான பதில்!

"இலங்கைப் பிரஜை ஒருவருக்கு தான் வாழ விரும்பும் ஒரு பிரதேசத்தில் வாழ உரிமை இருக்கிறது' என்று அடிக்கடி கூறித் 'தமிழர்களின் தாயகக்' கோரிக்கையைத் தொடர்ந்து எதிர்த்து வரும் அரசாங்கத்தின் பதில் இது.

அப்படியானால் ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அந்த விதி செல்லுபடியாகாதா?

அவர் விரும்பும் பகுதியில், அவரது குடும்பத்துடன் சென்று வாழும் அடிப்படை மனித உரிமை அவருக்கு மட்டும் மறுக்கப்படுவது ஏன்?

அவர் ஒரு தமிழர் என்பதாலா?

ஆக, தமிழருக்கு உரிய இடம் வடக்குத் தான் என்று அரசாங்கம் தீர்மானித்து விட்டதா? அப்படியானால் புலிகளின் தமிழீழக் கோரிக்கையை மட்டும் ஏன் தான் அரசாங்கம் எதிர்க்கிறதோ?

எஸ்.ஆர்


கே.எஸ். சிவகுமாரனின்

இரு நூல்களின் அறிமுகம்

அறிமுக உரைகள்

தெளிவத்தை ஜோசப்

அ.தேவகௌரி

சி.வன்னியகுலம்

சூரியகுமாரி பஞ்சநாதன்

நிகழ்ச்சித் தொகுப்பு

புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்

காலம்

ஓகஸ்ட் முதலாம் திகதி சனி மாலை 4.00 மணிக்கு

இடம்

பெண்கள் கல்வி ஆய்வு மையம்

58, தர்மராம வீதி, கொழும்பு-06

# பிறக்காத குழந்தைகளுக்காக...

அரசும் புலிகளும் மிகத் தீவிரமாக யுத்தம் புரிந்து கொண்டிருக்கும் இவ்வேளை சமாதானத்திற்கான தேவையும், தேடலும் முன்னெப்போதுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

அரசு "யுத்தம் என்றால் யுத்தம் சமாதானமென்றால் சமாதானம்" என்று போர் புரிந்து கொண்டிருக்கிறது.

புலிகளிடத்தில் சமாதானத்திற்கான எந்த அறிகுறியும் தற்போது இல்லை. இப்படி இரு தரப்பினரும் இருக்க மூன்றாம் தரப்பான அப்பாவிப் பொது மக்கள் மிக இன்னல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் போர்க்கால இருப்பு மிகத் துயரமானது.

இன்னும் துயரமென்னவென்றால் இவர்களின் பெயரிலேயே இரு தரப்பும் யுத்தம் புரிந்து கொண்டிருப்பது.

ஆக இப்போது சமாதானத்தின் தேவையை பலர் அதிகம் உணரத் தலைப்பட்டுவிட்டார்கள்.

போரில் சம்பந்தப்பட்டவர்களின் சமாதானம் என்பது இப்போதென்ன எப்போதைக்கும் சாத்தியமில்லை என்றாகிவிட்ட நிலையில், சமாதானத்தை மக்கள் தரப்பிலிருந்து ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை பலருக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதற்கான தீவிர செயற்பாட்டில் சில அரச சார்பற்ற நிறுவனங்களும் இறங்கி தங்களின் பங்களிப்பை செய்து வருகின்றன. இதில் ஒரு அங்கமாக "மேர்ஜ்" அமைப்பின் பிரச்சாரப் பிரிவு போரில் நேரடித் தாக்கங்களுக்கு உட்பட்டு வரும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் மத்தியில் சமாதானத்தின் தேவையை வலியுறுத்தி, எவ்வாறு மக்கள் தரப்பிலிருந்து சமாதானத்திற்கான அழுத்தத்தை வழங்கலாம் என்பதை நோக்காகக் கொண்டு பல இடங்களில் மக்கள் ஒன்று கூடல்களை நடாத்தி வருகிறது.

இவ்வாறான ஒன்று கூடல்களில் இரண்டு கடந்த 18-07-98 அன்று வாழைச்சேனையிலும், சிங்கபுர எனும் எல்லைப்புற கிராமத்திலும் நடைபெற்றது.

"மேர்ஜ்" ஒருங்கிணைப்பாளர் ஜோசப்பும், பேச்சாளரும் தேசியக் குழு உறுப்பினருமான சிவகுருநாதனும் அலியாரும் (மேர்ஜ் தேசியக் குழு உறுப்பினர்) இவற்றில் கலந்து கொண்டனர்.

வாழைச்சேனை ஒன்று கூடலில், சிவகுருநாதன், இனப்பிரச்சினையில் வரலாற்றுச் சுருக்கத்தை விளக்கப்படங்களுடன் பேசி, இனியும் இறந்த கால இன முரண்களை வைத்துக்கொண்டு பகைமை பாராட்டி வாழாது மனிதாபிமான ரீதியில் அடிப்படை மனித உணர்வுகளுடன் ஏன் வாழக் கூடாது என்ற கேள்வியை எழுப்பிப்பேசினார்.

ஆனால் மக்கள் வரலாற்றை மறக்கத் தயாரில்லை.

இன முரண்பாடுகள், வரலாற்றில் திட்டமிட்டே நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றன. தமிழ்த் தரப்பு போராளிகளோ, சிங்களத் தரப்போ, ஏன் எங்களை நசுக்குகின்றன? நாங்கள் அவர்களுக்கு என்ன செய்தோம் இது தான் முஸ்லிம்களின் சார்பில் கேட்கப்பட்ட கேள்வி.

இப்படித்தான் சிங்கபுர சிங்கள மக்களும் கேட்டார்கள். "எல்லோரும் ஏன் அப்பாவியான எங்களைத் தாக்குகிறார்கள்?"

இது தான் பொது மக்களின் கேள்வி.

உண்மைதான். போரிடும் தரப்புக்களை விட மிக மோசமான அழிவுகளை ஏன் மக்கள் எதிர்கொள்கிறார்கள்?

யுத்தம் மக்களை ஏதோ ஒருவகையில் உயிர்த்தெழவும் செய்திருக்கிறது.

எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்குகிறார்கள். விமர்சிக்கிறார்கள். சமாதானம் எப்படி வர முடியும் என்பதை அனுபவ ரீதியாக ஆக்ரோஷமாகத் தெரிவிக்கிறார்கள்.

கிழக்கில் புலிகளாலும் ஏனைய தமிழ்க் குழுக்களாலும் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் முஸ்லிம் மக்கள் இன்னமும் அச்சம் தான் தெரிவிக்கிறார்கள்.

"தற்போது இராணுவம் இல்லாவிட்டால், நீங்கள் எங்களை எங்காவது பொலன்னறுவையில் உள்ள அகதி முகாமில் தான் சந்தித்து உங்கள் சமாதானத் தூதை எத்தி வைக்க வந்திருப்பீர்கள்." என்றார் முஸ்லிம் அன்பர் ஒருவர்.

சிங்கபுரவில் ஒருவர், "இப்போது எங்கள் சொந்த இருப்பிடங்களை விட்டு இங்கே வந்திரக்கிறோம். இன்னும் கொஞ்ச நாட்களில் வெலிக்கந்த, பிறகு பொலன்னறுவை, குருநாகல் என்று எங்காவது முகாம்களில் தஞ்சமடைய வேண்டியிருக்கும்" என்றார்.

ஆக, இருப்புப் பற்றிய அச்சம் எல்லாரையும் சூழ்ந்திருக்கிறது. அது ஏன் என்பதற்கான காரணங்கள் மக்களுக்குத் தெரியவில்லை. தெரிந்தவர்களுக்கு புரிய வைக்க முடியவில்லை.

இந்த இரண்டு மக்கள் சந்திப்புக்களிலும் சமாதானத்தை விட அவர்கள் எதிர்பார்க்கும் அத்தியாவசியத் தேவைகள் நிறைய இருக்கின்றன. அது தான் பொருளாதாரத் தேவை அல்லது, உயிர் வாழ்வதற்கான தேவை.

"மக்கள் பட்டினியால் கிடக்கிறார்கள். அவர்களுக்கு தற்போதைய தேவை உணவு தான். சமாதானமல்ல". இது பலரின் அங்கலாய்ப்பு.

"பத்தாயிரம் ஏக்கருக்கும் அதிகமான எங்கள் நிலம், பயிர் செய்ய முடியாமல் இருக்கிறது உங்களால், சமாதானத்தை கொண்டுவர முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். முடிந்தால் புலிகளுடன் பேசி எங்களுக்கு பயிர் செய்ய அனுமதி பெற்றுத் தாருங்கள்." என்று கோரினார் வாழைச்சேனைவாசி ஒருவர்.

"எங்களுக்குப் பெயர் விவசாயிகள் ஆனால் இப்போது எங்களிடம் சாப்பாட்டுக்கு அரைக்கொத்து அரிசி கூட இல்லாத நிலை."-சிங்கபுர விவசாயி ஒருவர்.

இது தான் வடக்கு கிழக்கு வாழ் பொது மக்கள் பெரும்பாலாரது வாழ்க்கை சமாதானம் எல்லோருக்கும் அவசியமானதாயிருந்தாலும் இந்த மக்களுக்கு அதை விடத் தேவையானது உணவு, உடை உறையுள், மருத்துவம், கல்வி போன்றவை.

"அடிப்படை இவை இருந்தாலே போதுமே. நாம் ஏன் சச்சரவு படுவான்". இது அவர்களின் எதிர்பார்க்கை.

"ஆனால் சமாதானம் இருந்தால், இதெல்லாம் கிடைக்கும் தானே" இது இவர்களின் நியாயம்.

" சண்டை பிடிப்பவர்கள் தானே சமாதானப்படவேண்டும். அவர்களிடம் சொல்லாமல் அமைதியாய் இருக்கும் எங்களிடம் ஏன் சொல்கிறீர்கள்" என விரக்தியுடன் வினவினார் ஒருவர்.

மக்கள் சக்தியின் மகத்துவம் குறித்து கூறிய பேச்சாளர், அழுத்தங்களைப் பிரயோகித்து பலவற்றைச் சாதிக்க முடியும் என்றார்.

"அதற்கான முன்முயற்சிகளாய் இவை போன்றவற்றை நாம் எம் எல்லைக்குட்பட்டவரை செய்தால் என்ன?" இது இவர்களால் முன்வைக்கப்பட்ட கேள்வி.

என்னதான் இருப்பினும் சமாதானத்தின் தேர்வையே அவர்கள் உணர்கிறார்கள். ஆனால் அது எப்படி ஏன் என்பதை சமாதனப் பிரச்சாரகர்களை விட அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

"தத்துவார்த்த ரீதியில் சமாதானம் வராது நடைமுறைகளை உணர்ந்து அதற்கேற்ப அணுகும் போதே ஓரளவுக்கேனும் சமாதானம் சாத்தியப்படும்" என்பதே பலரின் அபிப்பிராயம். அத்துடன் முக்கிய தரப்புக்கள், மக்கள் மீது கரிசனை கொள்ளவிடின் சமாதானம், கானல் நீர் தான்.

சமாதானத்தை ஏற்படுத்தக் கோரும், யுத்தத்தை நிறுத்தக் கோரும் இவ்வாறான மக்கள் ஒரு லட்சம் பேரின் கையெழுத்துக்களைப் பெற்று அரசுக்கும் புலிகளுக்கும் அனுப்பும் வேலைத்திட்டமொன்றையும் மேர்ஜ் பிரச்சாரப் பிரிவு மேற்கொள்ளவுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசியல்வாதிகளால் வாக்கு வேட்டைக்குப் பயன்படுத்தப்பட்டு நடுத்தெருவில் விடப்பட்டிருக்கும் சிங்கபுர மக்கள் மேர்ஜ் போன்ற அமைப்புக்களில், நல்ல நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். "எப்படியிருப்பினம் அங்கிருந்து எங்களைப் பார்த்துப் பேசவாவது நீங்கள் வந்திருக்கிறீர்களே" என்று ஆறுதல் தெரிவிக்கிறார்கள் பல மைல்கள் நடந்து கலந்து கொண்ட சிங்கபுர வாசிகள்.

இன்னும் சிலர் "இது என்.ஜீ.ஓ. பம்மாத்து" என்று முனுமுனுக்கவும் செய்கிறார்கள்.

எப்படியிருப்பினும் சமாதானத்துக்காக எல்லோரும் ஏதோ ஒரு வகையில் உழைக்க வேண்டியிருக்கிறது. தனி நபர்களூடாக, பாடசாலை மாணவர்களூடாக ஊர்வாசிகளினூடாக என இனங்களுக்கிடையேயான சமாதான உறவுகள் சமாதான விரும்பிகளால் எதிர்பார்க்கப்படுகிறது.

வாழைச்சேனையில் சிலர் குறிப்பிட்டது போல் சம்பந்தப்பட்ட தரப்பினரை சமாதானத்துக்கு இழுத்து வருவது தான் பயன்மிக்கதாயிருக்கும்.

எப்படியிருப்பினும் இதற்கான முன்னெடுப்புக்களை எடுத்துவரும் சமாதான அமைப்புகள் மக்களின் தேவையை உணர்ந்து, அவர்கள் எதிர்பார்க்கிற வகையில் செயல்படுவது ஆக்கபூர்வமாய் இருக்கும். நாம் ஒன்றைச் சொல்ல, மக்கள் ஒன்றை எதிர்பார்க்க, கடைசியில் ஒன்றுமில்லாமல் போக...

கடைசியாய் ஓர் இள வயதுப் பெண் பிள்ளையின் (நஹ்ழா திராணி-அவுஸ்திரேலியா) சமாதான ஏக்கம் பற்றிய கவிதை ஒன்றை பொதுவாய் சொல்லி வைக்கலாம்.

இன்னுமே பிறக்காத
குழந்தைகளுக்காகவும்
அழுது கொண்டிருக்கிற
மழலைகளுக்காகவும்,
வறுமையிலும், விரக்தியிலும்
சிக்குண்டிருக்கிற
இளைஞர்களுக்காகவும்
அமைதியிலும் சமாதானத்திலும்
ஆசை வைக்கிறேன்.
வயோதிபர்கள். வேதனைகளிலிருந்து
விடுபடுவார்கள் என்றும் நான்
நம்புகின்றேன்....
அனைத்து மனிதர்களினதும்
படைப்புக்களினதும்,
ஒற்றுமை உள அமைதி
சந்தோஷத்திற்காக நான்
அமைதியிலும் சமாதானத்திலும்
மேலும்...மேலும்...
நம்பிக்கை வைக்கிறேன்.

-எம்.கே.எம்.எஸ்

---

# பெண்கள் அமைப்பு தேர்தல் களத்தில் !

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்குமுகமாக நுவரெலியா, தமிழ், சிங்கள கிராமிய பெண்கள் சம்மேளனம், தனது பெண் செயற்பாட்டாளர்களை தேர்தல் களத்தில் இறக்கியுள்ளது. பெண்கள் அமைப்புகளாலும் பெண்ணிலைவாதிகளாலும் உரத்து குரலெழுப்பப்பட்டு வரும் இவ்விடயம், இவ்வமைப்பினால் செயற்பாட்டு வடிவத்தை அடைவது வரவேற்கத்தக்கதாகும். பெரும்பாலும் பெண்களைக் கொண்ட ஒரு வேட்பாளர் பட்டியலை தாக்கல் செய்திருக்கும் இந்தச் சம்மேளனத்தின் தலைவியான விமாலி கருணாரத்ன அவர்களுடனான சிறிய பேட்டி ஒன்றை இங்கே தருகிறோம்.

*பேட்டி: ரத்னா*

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த இவ் அமைப்பு பேச்சளவில் மட்டுமன்றி செயற்பாட்டு ரீதியிலும் பல நடவடிக்கைகளை எடுத்த வருகின்றது, எனலாம்.

**இத் தேர்தலில் பெண்கள் என்ற ரீதியில் நீங்கள் போட்டியிடக் காரணம் என்ன?**

குறிப்பாக, கொள்கை திட்டமிடல் நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பினை அதிகரித்தல் வேண்டும் என்பதற்காகவும், அரசியல் கட்சிப் பட்டியலில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கு முகமாகவும், சிங்கள, தமிழ், முஸ்லிம் விவசாய, தொழிலாளர், கிராமிய பிரதிநிதித்துவம் அரசியல் மேடைக்கு வரவேண்டும் என்பதற்காகவும் இம் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் தீர்மானத்தை எடுத்தோம்.

**போட்டியிடுவதன் காரணமாக முகம் கொடுக்கும் சிக்கல்கள், நெருக்கடிகள் ஏதுமிருப்பின் . . . ?**

இது வரை தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டது ஆண்களே. இன்று நாம் பெண்கள் என்ற வகையில் இவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இன்று எமது அரசியல் மேடையில் இருக்கும் பெண்கள், பாதுகாப்பின்மைக்கும், பிற அரசியல் வாதிகளின் பயமுறுத்தல், சேட்டைகள் என்பனவற்றுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

மற்றும், சாதாரண குடும்பத்திலிருந்து போட்டியிட வந்ததன் காரணமாக அவர்கள் நிதி நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். அத்தோடு அரசியல் ஆதிபத்தியத்தைக் கொண்டிருக்கும் நபர்கள், அரசியல் அவர்களது உரிமையெனக்கருதி, எமது செயற்பாட்டாளர்களை விலக்கிக் கொள்ள நிர்ப்பந்தப் படுத்தியுள்ளனர். விசேடமாக, வலப்பனை, ஹங்குரங்கெத்தை தேர்தல் தொகுதியை குறிப்பிடலாம்.

**உங்களது இந் நடவடிக்கை தொடர்பாக பெண்கள் காட்டும் ஆர்வம் எப்படியுள்ளது?**

இது வரை அரசியல் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாக இருந்ததினால், பெண்கள் பிரச்சினைகள் சரியாகப் பேசப்பட வில்லை எனினும், இன்னும் அவர்களது பிரதிநிதிகள் அவர்களுக்காக முன் வருவதன் காரணமாக, அவர்கள் தமக்கு சிறப்பான எதிர்காலமொன்றுள்ள தென கருதுகின்றனர்.

**இத்தேர்தலில் நீங்கள் மத்திய மாகாணத்தில் மட்டும் போட்டியிடுவதன் காரணமென்ன?**

சிங்கள, தமிழ் கிராமிய பெண்கள் சம்மேளனம் இந்த வலயத்தில் அமைந்துள்ளமை மற்றும் இம் மாகாண மக்களின் ஆதரவு எமக்கு உள்ளமை.

**நீங்கள் சமர்ப்பித்துள்ள வேட்பாளர் பட்டியலில் ஆண்களின் பெயர்களும் அடங்கியுள்ளதற்கான காரணம் யாது?**

சிங்கள, தமிழ் மக்களுக்கு சேவைபுரியும் மற்றும் சேவை புரிய எண்ணும் ஏழைக் குடும்பங்களை சேர்ந்த இளைஞர்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என எண்ணினோம். குறிப்பாக, இவர்களை பலமான பிரசித்தி பெற்ற கட்சிகள் கண்டு கொள்ளாததனையும் கூறலாம்.

**எமது நாடு பெண் ஜனாதிபதியை கொண்டிருக்கின்றது. ஏலவே, பெண் பிரதமரையும் கொண்டிருந்தது. என்ற போதிலும் பெண்களுக்கு இதனால் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டதாக சொல்லமுடியாது. என்று கூறப்படுகிறது. உங்களது இந்நடவடிக்கை எனக் கருதுகின்றீர்கள்?**

பெண்களது கருத்துக்கள், நோக்கங்கள் குறிப்பிடத்தக்க வேறுபாட்டுக்குள்ளாகியுள்ளதென்றே நான் கருதுகிறேன். கீழ் மட்ட வகுப்பினைச் சேர்ந்த பெண்கள் இம்மாற்றத்திற்குள்ளாகியுள்ளனர். இது தொடர்பாக அவர்கள் உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றனர் எனலாம்.

**மத்திய மாகாணத்தில் தமிழ், சிங்கள கிராமிய பெண்கள் சம்மேளனத்தின் சார்பாக போட்டியிடும் அபேட்சகர்கள்.**

| பெயர் | ஆண்/ பெண் | வயது | தொழில் |
|---|---|---|---|
| 1. விமாலி கருணாரத்ன | பெண் | 37 | தமிழ்.சி.கி.பெ.ச. தலைவி |
| 2. நஹோமி ஜோன் | பெண் | 24 | தமிழ்.சி.கி.பெ.ச. செயலாளர் |
| 3. சி.ஜெரீனா | பெண் | 25 | தமிழ்.சி.கி.பெ.ச. பொருளாளர் |
| 4. யமுனா உதயகுமாரி | பெண் | 22 | சூழல் தொடர்பாளர் |
| 5. பால அம்பிகா சுப்பிரமணியம் | பெண் | 31 | சமூக தொடர்பாளர் |
| 6. மல்காந்தி கரந்தவெல | பெண் | 37 | சமூக செயற்பாட்டாளர் |
| 7.தமயந்தி ராஜபக்ஸ | பெண் | 25 | சமூக செயற்பாட்டாளர் |
| 8. சிராணி பிரியங்கிகா | பெண் | 30 | சமூக செயற்பாட்டாளர் |
| 9. கருணாவதி மெனிக்கே | பெண் | 52 | சமூக செயற்பாட்டாளர் |
| 10. கமலாவத்தி மெனிக்கே | பெண் | 50 | சமூக செயற்பாட்டாளர் |
| 11. ஏஞ்சலா பரிமளாதேவி | பெண் | 29 | சமூக செயற்பாட்டாளர் |
| 12. கோபால கிருஷ்ணன் | ஆண் | 28 | ஆசிரியர் |
| 13. புவனேக்க அபேசிறி | ஆண் | 31 | ஆசிரியர் |
| 14.சந்தனி சந்தியா குமாரி | பெண் | 31 | வங்கி முகாமையாளர் |
| 15. எம். ஜயசேன | ஆண் | 38 | விவசாயி |
| 16. சந்தனம் சந்திரசேகர் | ஆண் | 29 | தொழிலாளி |
| 17. சீரன் சிவபெருமான் | ஆண் | 38 | விவசாயி |
| 18. எட்வர்ட் அலக்சாண்டர் | ஆண் | 38 | விவசாயி |

# பொ.ஐ.மு. வின் இரட்டைப் படுகொலை !



நிர்சேயுதப்பாள்:

மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கு வேட்பாளர் பட்டியலைத் தாக்கல் செய்யும் வேலை மிகவும் மந்த கதியிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தேர்தலுக்கான ஆரவாரங்கள் எதுவும் இல்லை. ஆளும் பொ.ஐ.மு.க்கான வேட்பாளர் பட்டியலில் தேர்தலை தீவிரமாக முன்னின்று நடாத்தும் சக்தி வாய்ந்தவர்களை நியமிப்பதற்குப் பதிலாக பலவீனமானவர்களே நியமிக்கப் பட்டுள்ளனர். குறித்த தேதியில் தேர்தல் நடக்கப் போவதில்லை என்ற விடயம் வரவர உறுதியாகி வருகிறது. ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான விக்கிரமசிங்க தனது கட்சியினரிடம் தேர்தல் வேலைகளில் ஈடுபட வேண்டாம் என்று அறிவித்து விட்டார்.

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் எல்லோரும் இது தொடர்பாக மௌனம் சாதிக்கின்றனர். அமைச்சர் பீரிஸ் அவர்கள் தேர்தல் பிற்போடப்படுவது குறித்து என்ன நிலைமைகள் எழக்கூடும் என்று நாடிபிடித்துப் பார்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மகாநாயக்க தேரர்களுடன் பேசி அவர்களது ஆதரவையும் வென்றெடுத்துள்ளார். பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தொடர்ச்சியாக தேர்லுக்கு எதிராகவே கருத்து வெளியிட்டு வந்துள்ளது மட்டுமல்லாமல், இப்போது அரசாங்கம் தேர்தலை நடாத்துமானால் தான் பாதுகாப்புக்கான பொறுப்பில் இருந்து விலகிவிடுவேன் என்று மிரட்டியும் உள்ளார். (அத்துடன் அவர் தீவிரமாக யுத்தத்தை நடாத்தும் தமது முயற்சியில் தீர்வுத்திட்டத்தை மூர்க்கமாக எதிர்க்கும் சோபித்த தேருடன் கை கோர்த்துக் கொண்டுள்ளார்.)

இந்த நிலையிலும் தேர்தல் நடக்கும் என்ற நம்பிக்கையுடன் அதில் ஈடுபடும் நோக்குடன் பட்டியலைச் சமர்ப்பித்துள்ள சில கட்சிகள் தேர்தல் நடக்காது என்ற அச்சம் எழுந்ததன் காரணமாக தமது ஆட்சேபனையைத் தெரிவித்து வருகின்றன. ஆயினும் அரசாங்கம் கடைசி நேரத்தில் தேர்தலை நடத்தாமல் பின்போட்டு விடும் என்ற அபிப்பிராயமே கிட்டத்தட்ட அனைத்துக் கட்சிகளிடையேயும் நிலவுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் ஆட்சிக்கு வந்து அதாவது ஜனாதிபதியாகப் அவர்கள் பதவி ஏற்று கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் முடிந்து விட்டன. 1995ஜுலை மாதம் 15ம் திகதிக்கு முன்பாக ஜனாதிபதி முறையை முடிவுக்குக் கொண்டு வந்து விடுவோம் என்று அவர் அறிவித்திருந்தார். அவரது 'பட்டாபிஷேக' விழாவன்று அவர் இவ்வாறு பலத்த கரகோஷத்தின் மத்தியில் அறிவித்தது தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பாகியது.

ஆனால், அதன் பிறகு மூன்று ஜுலை 15கள் ஓடிப் போய் விட்டன. ஜனாதிபதி பதவியினைத் தூக்கியெறியும் எந்த முயற்சியிலும் அவர் இறங்கியதாகத் தெரியவில்லை. பதிலாக, ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களையும் வசதிகளையும் அவர் நன்கு பயன்படுத்தி வருகிறார். எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தவும் அல்லது பிளவு படுத்தவும் அவர் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி வருகிறார். ஜனாதிபதி' மாளிகையில் இருக்க மாட்டேன் என்று கூறி கொள்ளுப்பிட்டியிலுள்ள அலரி மாளிகையில் குடியிருக்க வந்த ஒன்றைத் தவிர அவர் ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தாத எந்த இடமும் இல்லை எனலாம்.

குறிப்பாக, எதிர்க்கட்சியினர் மீது விசாரணைகளை நடாத்தவென அவரால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் எண்ணிக்கைக்கு அளவே இல்லை.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழுச் சட்டம் ஐ.தே.க.அரசாங்கத்தின் போது, ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டமாகும். இந்தச் சட்டம் திட்டமிட்டு அன்று எதிர்க்கட்சியிலிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளைப் பறிப்பதற்காக கொண்டு வரப்பட்ட ஒரு சட்டமாகும். இது அரசியலமைப்புச் சட்டத்தில் வேறொருவருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறிக்கும் ஜனநாயக விரோதப் பண்புகள் கொண்ட ஒரு சட்டம் ஆகும் என்று அப்போது விமர்சிக்கப்பட்டது. அன்றைய எதிர்க் கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் இந்தச் சட்டம் ஒருவருக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையையும் மறுக்கிறது என்று சுட்டிக் காட்டியிருந்தார்.

இச்சட்டம், சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களது குடியுரிமையைப் பறித்து அவரை அரசியலிலிருந்து உதைத்து விரட்டியது. இதனை அன்று எதிர்த்த அதே கட்சியைச் சேர்ந்தவர்களால் அதே சட்டம் இன்று ஐ.தே.கட்சிக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஒரு சர்வாதிகாரியாக செயற்பட எந்த ஜனாதிபதி பதவியைப் பயன்படுத்தினாரோ அதே ஜனாதிபதி பதவியை குறித்த காலக் கெடு முடிந்து மூன்றாண்டுகளுக்கு மேலாகியும் வெக்கமின்றி தக்க வைத்துக் கொண்டு தங்களை 'ஜனநாயகத்திற்காகவும் சமாதானத்திற்காகவும்' யுத்தம் செய்பவர்களாகக் கூறிக் கொள்கின்றனர் இன்றைய ஜனாதிபதியும் அவரது சகாக்களும். இந்த ஜனாதிபதி பதவி ஒருபுறம் இருக்க, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக என்று ஒரு 'தீர்வுப் பொதியை' இந்த அரசாங்கம் முன்வைத்தது. அதுகூட நீண்ட இழுத்தடிப்புகட்கும் பொய்யுரைகட்கும், காலந்தப்பிப்போன பல காலக்கெடுக்களுக்கும் பின்னர் முன்வைக்கப்பட்டது. பிறக்கும் போதே ஊனமுடன் பிறந்த இந்த 'தீர்வுப் பொதி' என்ற சிசு மகாநாயக்க தேரர்கள், சிங்கள மகாசபையினர் மற்றும் இன்னோரன்ன இனவாதிகளது ஆலோசனைகளின் பேரில் பேராசிரியர் பீரிஸ் அவர்களால் பல்வேறு சத்திர சிகிச்சைகட்குள்ளாக்கப்பட்டு கடந்த ஆண்டு இறுதியில் ஒரு உயிரற்ற வெற்றுப் பிண்டமாகி விட்டது. அந்த வெற்றுப் பிண்டத்தை வைத்துக் கொண்டு பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்று ஒரு 'மலையாள மந்திரவாதி'யைப்போல கண்கட்டி வித்தை காட்ட தயாராகிக் கொண்டிருந்தார் அமைச்சர் பீரிஸ்.

அதே வேளை சமாதானத்தை நிலைநாட்ட யுத்தம் என்று கூறி யுத்தத்தில், யுத்த அரக்கன் ஒன்றையும் இந்த அரசாங்கம் உருவாக்கி விட்டது. அந்த அரக்கன் யாக குண்டத்தில் இருந்து எழுந்து, யாகம் செய்தவர்களை விழுங்க முற்பட்டுவிடுகின்ற வெறியுடன் ஆடத் தொடங்கி விட்டதும், அதை ஆசுவாசப்படுத்துவதற்காக முழு அமைச்சரவையையும் முழுநாட்டு மக்களையும் ஏமாற்ற சகல இனவாதப் புரோகிதர்களுடனும் இணைந்து கொண்டது.

விளைவு, செத்துப் போய் வெற்றுப் பிண்டமாகவேனும் இருந்து பேசப்பட்டுக் கொண்டிருந்த 'பொதி' காணாமல் போய் விட்டது.

கூடவே, ஜனநாயகம், சமாதானம் போன்ற எல்லா மந்திரங்களும் போயொழிந்து விட்டன. இரத்த வாடை வீசும் யுத்தம் என்றால் யுத்தம் சமாதானம் என்றால் சமாதானம் என்ற பேச்சுக்கள் பலத்து ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

'மாகாண சபை தேர்தல்' என்ற குரலும் இந்த வெறிக் கூச்சல்களுக்கு மத்தியில் கீச்சுக் குரலாகக் கேட்டது. ஆனால் அது கூட மெது மெதுவாக மறைந்து விட்டது.

தேர்தலை நடாத்துவதற்கு அரசாங்கம் முன்வந்ததே ஒரு மோசடி, தீர்வுப் பொதியை முன்வைத்ததைப் போல, இப்போது அதை பிற்போட பின்கதவால்' முயற்சிப்பதோ அதைவிடப் பெரிய மோசடி. இந்த மோசடியைக் கூட, அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஜனாதிபதி தேர்தல் நடாத்தப்படும் என்று ஆசை காட்டுவதன் மூலம் மூடிமறைத்து விட்டு பழைய அதே ஜனநாயக வேடத்துடன் செயற்பட முயன்று வருகிறது.

ஆயினும் அதன் ஜனநாயக முகமூடி மெல்ல மெல்லக் கிழிபட்டு அதன் மக்கள் விரோத, இனவாத கோர முகம் தெரிவாக்கப்பட்டு வருவதை அதனால் தடுக்க முடியவில்லை.

வடக்கிலே சமாதான யுத்தத்தின் புண்ணியத்தால் அறுநூறுக்கும் மேற்பட்டோர் காணாமல் போனதும் இன்னொரு அறுநூறுக்கும் மேற்பட்டோர் விசாரணை இன்றி தடைமுகாம்களிலும் சிறைகளிலும் தடுத்து வைக்கப் பட்டிருப்பதும் பற்றி வேண்டியளவு பேசியாயிற்று.

வேண்டியவர்களுக்கெல்லாம் மகஜர்கள் கொடுத்துக் கேட்டாயிற்று.

ஜனாதிபதியிடம் கூட கேட்டாகி விட்டது. பதில் ஒன்று தரப்படும். விரைவில், மூன்று மாதத்தில் ஆறு மாதத்தில் தகவல் தருவோம் என்று.

ஆனால் இன்று வரை எந்தத் தகவலும் இல்லை - யாரிடமிருந்தும்.

ஆனால், செம்மணிச் சுடலையில் நாநூறு சடலங்கள் புதைக்கப்பட்ட செய்தி மட்டும் பேரிடியாக வந்து இறங்கியது.

இந்தச் செய்தி குறித்து ஒரு அதிர்ச்சிச் செய்தி தானும் அரசதரப்பில் இருந்து வெளியிடப் படவில்லை. அது மௌனம் சாதிக்கிறது.

ஆக, இந்த மௌனம், அரசாங்கத்திற்கு தெரியத் தான் இக் குழிகள் நிரப்பப்பட்டனவா என்ற சந்தேகத்தைக் கிளப்புகின்றன.

புலிகளிடமிருந்து 85வீதமான நிலத்தை விடுவித்ததாக ஜனாதிபதி கூறிப் பெருமைப்படுகிறார் ஆனால், இந்தப் புதைகுழிகள் குறித்து ஒரு வார்த்தை அவர் பேசவில்லை. எம்பிலிபிட்டிய குழிகளுக்கு இருந்த அரசியல் ரீதியான முக்கியத்துவம் இவற்றுக்கு இல்லை என்பதா அல்லது கொல்லப்பட்டவர்கள் தமிழர்கள் தான் என்ற காரணமா இந்த மௌனத்திற்கு காரணம் என்ன?

இவையெல்லம் அரசாங்கத்தின் முகமூடியைக் கிழித்துக் காட்டும் நிகழ்வுகள்...

யுத்தம் முதலில் சமாதானத்தை கொன்றது. சமாதானத்திற்காக யுத்தம் என்ற முழக்கத்துடன் அரசாங்கம் யுத்தகளத்தில் குதித்த போதே இந்தப் படுகொலை நிகழ்ந்து விட்டது.

இப்போது யுத்தத்திற்காக தேர்தலை பின்போடும் முயற்சி நிறைவேறுமானால் இரண்டாவது கொலையும் வெற்றிகரமாக நிறைவேறி விடும். இவர்கள் உயர்வானதாகப் பீற்றிக் கொள்ளும் 'ஜனநாயக'த்தின் கொலை தான் அது. ஏற்கனவே அது கைகால் வெட்டப்பட்ட நிலையில் குற்றுயிராய்க் கிடக்கிறது. இந்தத் தேர்தல் பின்போடுகையுடன் அதுவும் முடிந்து விடும்.


இறுதியில் எஞ்சப் போவது என்ன?

யுத்த அரக்கனின் ஆதிக்கத்தில் அடிமையாக்கப்பட்ட ஒரு இன மக்களும், ஓராயிரம் புதைகுழிகளும் தானா?

இது தான், 17 ஆண்டுகால காட்டாட்சியிலிருந்து விடுபடத் துடித்த மக்களுக்குக் கிடைத்துள்ள எதிர்காலமா?

இதற்கான பதில் மக்களிடம் நிச்சியமாக இருக்கும். அந்தப் பதில் இவர்களுக்கெல்லாம் நிச்சியமாக இனிப்பாக இருக்கப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்!

# சொல்வதைத்தவிர வேறு வழியில்லை...


ஞாயிறு தினக்குரல் 19 ஜூலை 1998

**யாழ்ப்பாண இஸ்லாமிய நண்பனுக்கு பழம் பண்டிதரின் பகிரங்கக் கடிதம்**

அன்புச் சோதரா!
வணக்கம்
நலம். உன்நலம் வேண்டி அன்றாடம் பிரார்த்தித்தபடி நான்.
எம் தாய் மண்ணில் ஒருமித்து நாம் வாழ்ந்த நாட்களை எண்ணிப்பார்க்கிறேன்.
எத்தனை மகிழ்ச்சியான நாட்கள் அவை.
பொங்கல் திருநாளில் எங்கள் வீட்டு சக்கரைப் பொங்கலை நீ ருசி பார்த்ததும்
''ரம்சானுக்கு'' உன் வீட்டில்
மணக்க, மணக்க நான்
''புரியாணி'' உண்டதும்.....
நேற்றுப்போல இருக்கிறது.
எனக்கும், உனக்கும் இருந்த நெருக்கம் எம் இரு இனங்களுக்கும் இடையில் இல்லாமல் போனது விதியின்
பிழை.
இன்று நீ எங்கோ! நான் எங்கோ!
''பதி எழு அறியாப் பழங்குடியாய்'' நீங்களும் நாங்களும் வாழ்ந்த மண்ணும்,
...னையும் இன்று இடிந்து,
...தைந்து...
...ப் குடிகொண்டாற்போல் பேதலித்துக் கிடக்கிறது.
...ன்மேல் உங்... ...க்குக் கோபமாயிருக்கும்.

**வ**ரலாற்றில் ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட, வஞ்சிக்கப் பட்ட மக்களின் நலனில் அக்கறையுள் ளோர் என வெறும் வேசம் போட்டுக் கொண்டு முதலைக் கண்ணீர் வடிக்கும் வேசதாரிகள் காலப்போக்கில் மக்கள் முன் சாயம் வெளுத்து, உண்மைச் சொரூபம் வெளிப்பட்டு இருந்த இடமும் தெரியாமல் அழிந்து போய் விட்டிருக்கிறார்கள். அவர்கள் மூக்கால் சிந்தும் முதலைக் கண்ணீருக் கும், அவர்கள் கொண்டுள்ள உள்ளார் ந்த் அரசியலுக்கும் அடக்கப்பட்ட மக்கள் மத்தியில் மாத்திரமல்ல, தமது சொந்த இனத்தின் மக்கள் மத்தியிலும் எந்த அர்த்தமும் இருந்ததில்லை.

இலங்கை அரசியல் வரலாற்றிலும் கூட தமிழ் சிங்கள மக்களிடையே இனப்பிரச்சினை கூர்மையடைந்ததன் பின்பு - ஒடுக்கி வைக்கும் சக்திகளாக வும் அதற்குப் பக்கபலமாகவும் அல்லது அவ்வரசியலுக்கு சார்பா னவர்களாகவும் இருந்து கொண்டு தமிழ் மக்களைப் பார்த்து அவர்களின் பெயரில் அக்கறை கொண்டுள்ளதாக முதலைக் கண்ணீர் வடித்தோர் இன்று எங்கே? வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் மாத்திரம் அவர்கள் வாழ நேர்ந்திருக்கிறது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ரணசிங்க பிரேமதாச, லலித் அத்துலத்முதலி, காமினி திசாநாயக்கா, சந்திரிகா என பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப் போகிறேன் என மார்தட்டி நின்ற சந்திரிகா இன்று ஜனாதிபதி கதிரையில் அமர்ந்து கொண்டு ஜே.ஆரின் பாணியில் ''யுத்தமென் றால் யுத்தம். சமாதானமென்றால் சமாதானமென'' வீறாப்புப் பேசுகி றார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தல்,

ஜனாதிபதித் தேர்தல் காலங்களில் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு தான் இவர் கண்ணீர் வடித்தார் என யாரேனும் இன்னும் நம்புவார்களெனில், அவர்களை விட முட்டாள்கள் யாரும் இருக்க முடியாது!

1985க்குப்பின் வடக்கு கிழக்கில் ஏற்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக் கிடையேயான அரசியல் முரண்பாடு கள், அக்கால தமிழ் ஆயுதக்குழுக்க ளின் இராணுவ அராஜகம், அரசியல் என்பவற்றுடன் தொடர்புடையது என்பது மிக முக்கியமானதாகும். கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக நிலவிவரும் இராணுவ, அரசி யல் மையவாத சூழல்களில் எழுந்த புதிய சூழல்களும், இரத்தக்களரி களும் புது அரசியல் முனைப்புகளும் முதலில் நன்கு உணரப்பட்டு அடையா ளம் காணப்படல் வேண்டும்.

இக் காலம் தந்த விளைவுகளாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம்:

1. கிழக்கில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இஸ்லாம் என்ற மத அடையாளத்திற்காக மாத் திரம் பள்ளிவாசல்கள் தொடக் கம் நடைபாதைகள் வரை இனப்படுகொலை செய்யப் பட்டமை.
2. வடக்கில் பாரம்பரியமாக வாழ் ந்து வந்த 70ஆயிரம் முஸ்லிம் கள் இஸ்லாமியர் என்ற மத அடையாளத்திற்காக மாத்திரம் தங்கள் மண்ணிலிருந்து துரத்தி அடிக்கப்பட்டமை.



## பழம் பண்டிதரின் 'விதி'!

அபூநிதால்

3. வடக்கு கிழக்கில் முஸ்லிம் களுக்குச் சொந்தமான குடியி ருப்பு நிலங்கள், வயல்காணி கள், மேய்ச்சல் தரைகள், வியாபார ஸ்தலங்களிலிருந்து முஸ்லிம்கள் அப்புறப்படுத்தப் பட்டமை.
4. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தொடர்ச்சி யாக நடைபெற்ற தமிழ் - முஸ் லிம்களுக்கிடையேயான கலவ ரங்களும் இருபக்க இழப்புக ளும், அழிவுகளும்.
5. முஸ்லிம்களுக்கான தனித்து வமான அரசியல் ஸ்தாபனத் தின் உருவாக்கமும் - அதற் கான அங்கீகாரமும்.
6 வடக்கு கிழக்கு வாழ் முஸ் லிம்களின் ஒரு தனித்தேசமான கட்டமைப்பும், அதன் வெளிப் பாடுகளும்.

இவ்விளைவுகள் கடந்த கால வடக்கு கிழக்கு வரலாற்றில் எழுந்து நிற்கும் யதார்த்தமாக உள்ள போது இவ் விளைவுகளை கருத்திற் கொள்ளாது கண்ணை மூடிக்கொண்டு ''சோதரா'' என விளித்து தமிழரோ, முஸ்லிமோ எழுதுவதனால் மட்டும் யதார்த்தம் அழிந்துவிட மாட்டாது!

பொங்கலுக்குச் சென்று பொங்கலை ருசி பார்ப்பதும், ரம்சான் பண்டி கைக்குச் சென்று புரியாணியை ருசி பார்ப்பதும் இரண்டு தேசங்களினதும், இனங்களினதும் சமத்துவத்திற்கு உத்தரவாதமாகாது! அது பழம் பண்டிதருக்குப் போதுமானதாகவிருக் கலாம். இருதேசங்களின் அரசியலில் அது வெறும் பண்டிகை உண்டி உறவாகவே கொள்ளப்படும்.

இன்னும் நாம் கடந்த காலங்களை விட்டு நகராத 'பழம் பண்டிதர்' களாகவே மட்டும் இருக்கிறோமா அல்லது நடப்புச் சூழலை மதிப்பிட்டு உண்மைகளின் பக்கம் உரைகல்லாக இருக்கிறோமா என்பது இங்கு அவசியமாகிறது.

சிங்கள - தமிழ் ஒற்றுமையைக் காட்டுவதற்கு சிங்கள இனவாதிகள், சிங்களவரான 'அஜித்குமார'' தமிழ ரான தேவிகாவை காதலிப்பதைக் காட்டுவதைப் போல, (இங்கும் மேலாதிக்க சிந்தனை தான்! ஆண் சிங்களவராகவே இருப்பார்) தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையேயான நல்லுறவைக் காட்ட பொங்கல் - ரம்சான் உண்டி பரிமாறுவ தையும், முஸ்லிம்கள் இந்துக் கோயில் களில் நடைபெறும் தீப்பாளையம் திருவிழாக்களுக்கு செல்வதையும் காட்ட முற்படுகின்றனர்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா தொடக்கம் இன்றைய ரத்வத்தை வரை கதிர்காமம் தொடக்கம் நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் வரை சென்று வழிபட்டு நெற்றியில் பொட்டும் வைத்துக் கொண்டு தமிழர்களை அழித்து வந்தவர்கள் தான், அழித்து வருபவர்கள் தான். இவ் அடையாளங் கள் நான் உங்கள் நண்பன், உங்கள் பிரச்சினைகளை ஏற்றுக்கொள்கிறேன் எனச் சொல்வதல்ல. சிங்களவர்க ளுக்குள்ளும், தமிழர்களுக்குள்ளும், முஸ்லிம்களுக்குள்ளும் இப்படியான வேசதாரிகள் நிறையவே உண்டு.

அண்மைய தினக்குரல் பத்திரிகையில் (19.7.1998) பழம்பண்டிதர் என்ற பெயரில் 'யாழ்ப்பாண இஸ்லாமிய நண்பனுக்கு' என்றொரு கடிதம் பிரசுரமாகியிருந்தது. இக்கடிதம் யாழ் முஸ்லிம்களுக்குச் சொல்ல வருவ தென்ன?

உண்மையில் வடக்கு கிழக்கு தமிழ் ஆயுதக்குழுக்களுக்கும், முஸ்லிம்க ளுக்குமிடையே வெடித்தெழும்பிய முரண்பாட்டின் பிரதான காரணம் முஸ்லிம்களது மத, அரசியல் தனித்து வத்தை மறுத்ததே என்பது பிரதான மானது. வடக்கு முஸ்லிம்கள் மீது அக்கறை கொண்ட பழம் பண்டிதராக வெற்றுக் கண்ணீர் வடித்துக் கொண்டு அத்துலத் முதலியின் குரலில் வடக்கு முஸ்லிம்களுடன் சிநேகம் கொள்ள முனைகிறார் பழம் பண்டிதர். (சிநேகம் கொள்ள முதல் ஒரு முறை புத்தளம் சென்று உப்புக்களரிகளில் ஓலைக் குடிசைகளில் அகதிகளாய் வாழும் முஸ்லிம்களைப் போய்ப் பார்த்து வந்தால் என்ன?)

உண்மையில் இக்கடிதத்தை எழுதிய வரின் அரசியலும், அவர் கொண் டுள்ள முஸ்லிம் விரோதமும் அவரின் எழுத்துக்களின் ஒவ்வொரு வரியின் ஊடாகவும் அழுத்தமாய் ஒலிக்கின் றன. பொன்னம்பலம் ராமநாதன், ஆறுமுகநாவலர், யோகேந்திரா துரைசாமி வரிசையில் மீண்டுமொரு பழைய பண்டிதர். முஸ்லிம்களின் மத அடையாளத்தை மறுதலித்து தமிழர் கள் என முஸ்லிம்களை அடையாளப் படுத்தச் சொல்வதன் பின்னணியை, அரசியலின் ஊடாக நன்கு புரிந்து கொள்ளல் வேண்டும்.

இக்குரலை நாம் அடையாளம் காண பழைய பண்டிதரின் (தினக்குரல்) பழைய கடிதமொன்றும் உதவும். முன்னைய பத்தி ஒன்றில் இந்தியா இந்துக்களுக்கு மட்டும் தான் சொந்த மானது என எழுதியிருந்தார். அப்படியானால் இந்தியாவின் ஆங்கிலேயருக்கெதிரான முதல் சுதந்திரப் போராளி திப்பு சுல்தான் தொடக்கம் இன்று பி.ஜே.பி. தூக்கிக் கொண்டாடும் அணுகுண்டு விஞ்ஞானி அப்துல்கலாம் வரை இந்துக்களா? இல்லையே. இந்திய தேசத்தில் அவர்கள் இந்தியர்களா கவும் மத தனித்துவத்தில் அவர்கள் முஸ்லிம்களாகவுமே இருக்கின்றனர்.

பழம்பண்டிதரின் கடிதம் சொன்ன முக்கியமான கருத்துகளுக்கு பழம் பண்டிதரின் பாணியில் கேள்வியாக வும் பதிலாகவும் சில குறிப்புக்கள் இங்கு எழுதப்படுகிறது.

***பழம்பண்டிதர்***- *''அன்றைய சூழ்நிலை யில் இருந்த அரசியற் குழப்பத்தில் என்ன நடக்கிறது என்று ஏதும் தெரியாத நிலையில் நாங்கள்''*

**அபூநிதால்** - பழம் பண்டிதர் ஒரு அந்தகனாய் இக்காலத்தில் இருந்திருப்பார். அல்லது கம்பன் சொல்லும் காவியத்தில் வரும் ராமனாய் காட்டில் வனவாசம் இருந்திருக்கக் கூடுமோ?

***பழம்பண்டிதர்***- *''ஏன் பிழை நடந்தது? எங்கு பிழை நடந்தது? எதுவும் தெரியவில்லை. யார் குற்றம் என்பதே அனைவரினதும் கேள்வி''*

**அபூநிதால்**- இன்னுமா எங்கு பிழை நடந்தது என்பது தெரியவில்லை? ''நாங்கள் தவறிழைத்து விட்டோம்! மீண்டும் முஸ்லிம்களைச் சொந்த இடத்தில் குடியேற்றுவோம்'' என பிரபாகரன் வாயால் சொன்ன பின்புமா யார் குற்றமிழைத்தது என்று புரியவில்லை. (அன்ரன் பாலசிங்கம் பி.பி.சி. பேட்டி உட்பட.)

***பழம் பண்டிதர்***- *''தலைமுறை தலைமுறையாய் நம் மண்ணில் நீங்கள் வாழ்ந்த போதும், வாழ்ந்த மண்ணோ டும் மக்களோடும் இரண்டறக் கலக்காதது உங்கள் முதல் குற்றம். தனித்துவம் பேணுவதாய் நினைத்து தனித்தே வாழ்ந்தீர்கள். தமிழ் மக்களு டனான உங்கள் வாழ்வு எப்போதும் தாமரை இலைத் தண்ணீராகவே இருந்தது. இந்துக்களும் கிறிஸ்த வர்களும் தமிழர் என்ற அடையா ளத்தில் ஒன்றிணைந்த போது நீங்கள் அதனை ஏற்காது உங்களை இஸ்லா மியர் என் இனம் காட்டவே விரும்பி னீர்கள். இதனால் உங்களை சுயநலமி கள் எனக் காட்டிற்று''*

**அபூநிதால்**- தண்ணீரும் தண்ணீரும் கலப்பது போல் கலக்கச் சொல்கிறாரா இல்லை தேனும் தண்ணீரும் - போல் கலக்கச் சொல்கிறாரா? (அடுத்த கடிதத்தில் விளக்குவாரா பண்டிதர்?)

பண்டிதரே இக்கலத்தல் வியாபாரம். 1954 தொடக்கம் 1985 வரை நடந்தது தான். இக்கலத்தலின் பின் முஸ்லிம் கள் இருந்த இடமும் தெரியாமல் போனது தான் மிச்சம். நாங்களும் இதில்தான் கலந்திருக்கிறோம் என கற்பூரம் அணைத்து சத்தியம் செய்த பின்னரும் ஏற்கவில்லையே! ஏற்க மறுத்ததன் பின்னர் நாங்கள் நாங்க ளாக எங்களை ஒரு தனிப்பாத்திரத் தில் கலக்காமல் வைத்துக் கொண் டோம்!

இது சுயநலமா? அல்லது எங்களுக்கு வரலாற்றில் ஏற்பட்ட அடையா ளத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் இருப்பின் வெளிப்பாடா?

தமிழரசுக் கட்சி தொடக்கம் தமிழ் இயக்கங்கள், விடுதலைப் புலிகளின் கப்டன் பாறுக்வரை உயிர்கொடுத்து சிறை சென்று வாழ்ந்தோம். மடிந் தோம்.

நீ வேறு, நான் வேறு என எங்களைக் கொன்றது, அழித்துத் துரத்தியது நாங்களா பண்டிதரே! வடக்கு கிழக் கில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு உயிர், பொருளை அர்ப்பணித்த முஸ்லிம்களை இலகுவில் ஏன் மறந்து போனீர்?

***பழம்பண்டிதர்***- *''உலகம் முழுவதும் விரிந்துள்ள ''இஸ்லாமியப் பலம்'' தம்மைக் காக்கும் எனும் தைரியமும் எல்லோரும் எப்போதும் எமக்கு பணிந்து தான் ஆக வேண்டுமெனவும் தப்புக் கணக்குப் போட்டனர்.''*

**அபூநிதால்**- சவூதி, ஈரான், ஈராக் வந்து எங்களைக் காக்குமென நாங்கள் எப்போதாவது அறிக்கை விட்டிருக்கிறோமா? ஆகக்குறைந்தது பொம்மை வெளியில் உதைபந்தாட் டப் போட்டிகளில் ஏற்பட்ட சிறுசிறு சச்சரவுகளில் கூட ஈரான், சவூதி, ஈராக் போன்ற அரபு நாடுகளைக் காட்டிப் பயமுறுத்தியிருக்கிறோமா?

எங்களை விடுதலைப்புலிகள் வெளி யேற்றிய பின்பும், கிழக்கில் இனப்படு கொலை கட்டவிழ்த்து விடப்பட்ட பின்பும் பிரபாகரனை கைது செய்வ தற்கு அல்லது விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு ஈரான், சவுதி, ஈராக் இராணுவம் வரப்போகிறது என ஒரு வார்த்தை தானும் சொல்லியிருக் கிறோமா? இல்லையே.

யார் தப்புக் கணக்குப் போட்டது. நாங்களா? இந்தியாவைக் காட்டி நீங்கள் ஜே.ஆரைப் பயமுறுத்தவில் லையா? இந்தியா வரும் என்பதைச் சொல்லி, வந்து நடந்தவைகளை மறந்து விட்டீர்களா? இந்தியாவின் கனவு மயக்கத்தில் பண்டிதர் இருந்தார். இருக்கின்றார். உந்தக் கனவின் பிதற்றலால் தான் ''யாழ்ப்பாண வாசம்'' பண்டிதருக்கு மறுக்கப்பட்டது என்பதை நானா சொல்லித் தெரிய வேண்டும்? அது தேசத்துரோகமென தம்பிமாரே சொல்லியிருப்பார்களே.

***பழம்பண்டிதர்***- *அருகிலிருக்கும் தமிழ் நாட்டில் சமயத்தில் இஸ்லாமி யர்களாகவும் பண்பாட்டில் தமிழர்களாகவும் உங்கள் இனத்த வர்கள் வாழும் வாழ்வுக்கு என்ன சொல்லப்போகிறார்கள்.*

**அபூநிதால்**- தமிழ் நாட்டில் எங்கேயாவது ஒரு மசூதிக்குள் புகுந்து நூற்றுக் கணக்கானோரை தமிழ் இராணுவம் படுகொலை செய்ததா? முஸ்லிம் சிப்பாய் என்பதற்காக வேறுபடுத்தி வீதிகளிலும், காடுகளி

→19

# இரண்டுங்கெட்டான் நிலை அரசுக்கு!



அரசாங்கத்துக்கு எதிர்ப்பைக்காட்டத் தேர்தல் வழியில் இடங்கிடைக்காவிடின் எதிர்ப்பு அணிகள் போராட்ட வழியை நாடிப்போகத் தொடங்கும். தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொள்வர். தொழிலாளர்கள் தொழிற் போராட்ட முன்னணியில் ஒன்றுதிரள்வர். அனைத்து ஒடுக்கப்படும் பிரிவுகளும் பல்வேறு வெகுஜனநடவடிக்கைகளில் ஈடுபடும்.

மாகாண சபைத் தேர்தலைப் பின்போட வேண்டும்! காரணம் யுத்தத்தை அர்ப்பணிப்புடன் நடத்துவதற்காகவாம்! இக்குரல் மகாநாயக்க தேரர்களால் எழுப்பப் பட்டாலும், அது எதுவித சந்தேகத்துக்கும் இடமின்றி ''பயங்கரவாத விரோத'' இயக்கத்தினரது தான் என்பதை நான் உறுதியாக அறிவேன். அன்று இருந்த தேசபக்த (தேஷப் பிரேமி) மக்கள் இயக்கத்தின் உண்மையான உரிமையாளர்களும், குத்தகைக்காரர்களும் வேறு யாருமல்ல. இன்றைய இப்பயங்கரவாத விரோத இயக்கத்தின் சம்பிக்க ரணவக்க உட்பட சிலரே தான்! இன்று நடத்தப்பட்டுக் கொண்டு இருக்கும் தமிழ் இனப் படுகொலை யுத்தத்தின் பெரும் அடி தடிக்காரர்களும், தொலை நோக்காளர்களும் கூட இவர்களே தான். திருட்டுத்தனமாக யுத்தத்தினைத் தீர்மானித்து, நடத்தும் சக்திமிக்கவர்களாக இவர்கள் மாறும் போது முழுச் சமூகத்தினதும் ஜனநாயக உரிமைகள் அழிக்கப்பட்டுவிடும் என்பதில் சந்தேகமே இல்லை!

''பயங்கரவாத விரோத இயக்கம்'' உண்மையிலேயே ஒரு ''இடதுசாரி விரோத'' இயக்கமாகும். இன்னொரு விதத்தில் சொல்வதானால் அது ஒரு ''ஒடுக்கப்படுபவர்கள் விரோத இயக்கமாகும்''. இதனால் யுத்தத்துக்காக இடதுசாரி அணிகள் தமது உரிமைகளையும், தொழிற்சங்க உரிமைகளையும் குழிதோண்டிப் புதைக்க வேண்டும் என்று அவர்கள் பேசுவது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்றே.

மாகாண சபைகளைப் பின்போடுமாறு இவர்கள் கோருவதற்கு ஒரு காரணம், அத்தேர்தலின் மூலம் இடதுசாரிகள் பலமடையும் வாய்ப்பு உள்ளது என்பதாகும். இடதுசாரிகள் ஒன்று சேர்ந்து ஒரே பட்டியலில் போட்டியிட்டாலும், இல்லாவிடினும் இடதுசாரிகள் எல்லா மாவட்டங்களிலுமே வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது.

எனவே, இவ்விடயமும் இத்தேர்தலைப் பின்போடக் கோருவதற்கு ஒரு காரணம் என்பதில் சந்தேகமில்லை.

அன்று ஜே.ஆர். பொதுத்தேர்தலைப் பின்போடத் தீர்மானித்த வேளை அதிகமாக எதுவும் சொல்லவில்லை. எதுவித தயக்கமும் இன்றிப் பொல்லால் அடித்ததைப் போல் நேரடியாகவே நக்சலைட்காரர்களும், மார்க்சியவாதிகளும் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட இடமுள்ளதால் தேர்தலைப் பிற்போடுகிறோம் என்று சொன்னார்.

இன்றோ அவ்வாறான நேரடியான கதையேதும் இல்லை. அத்தோடு இப்பிற்போடுகைக்கு நிர்ப்பந்தங்களைக் கொடுத்துவருவதெல்லாம் யுத்தசார்பு அணிகளே. இவ் அணிகள் மிகவும் மோசமானவை எனச் சந்திரிகாவே ஏற்றுக்கொள்கிறார். இது எவ்வளவு தூரத்திற்கு போயிருக்கிறதென்றால், அவரது கண்ணில் மண்ணைத் தூவி விட்டு அவரது புகைப்படங்களை வைத்துக் கொண்டே தமது காரியங்களைச் சாதித்து விடுகிறார்கள் என அவரே ஏற்றுக் கொண்டார். அவ்வாறு ஜனாதிபதியின் புகைப்படங்களை மட்டும் வைத்துக் கொண்டு தமது பிரச்சாரங்களை அவர்களால் செய்ய முடியும் என்றால், அவர்களால் செய்ய முடியாதது தான் என்ன? அரசாங்கத்தின் பெரும் புள்ளிகளாலேயே பிடிக்க முடியாதபடி பத்திரிகையாளர்களுக்கு (துப்பாக்கி) வேட்டு வைப்பதும், அடி, உதைகொடுப்பதும் இந்த யுத்தசார்பு சக்திகளேயாகும் என்பது பற்றி எனக்குச் சந்தேகமே இல்லை. சந்திரிகா சொன்னபடி இம்மோசடிச் சக்திகளை ஒடுக்குவது கஷ்டமானது தான். இந்த அணிகள் பலப்படுமாயின் சந்திரிகாவையும் தூக்கி எறிந்து விட்டுத்தான் முன்செல்லும் என்று நான் தொடர்ந்து சொல்லி வருகிறேன்.

மின்சார சபை வேலைநிறுத்த நேரத்தின்போதும், யுத்தமொன்று நடந்து கொண்டிருக்கும்போதும் இவ்வாறான ஒரு போராட்டம் நடாத்துவது சரியானதல்ல என்று தான் அவர் சொன்னார். அப்போது மின்சார சபை ஊழியர்களின் குடும்பங்கள், பிள்ளைகளைக் கடத்திச் சென்றவர்களும் இந்த யுத்தசார்பு சக்திகளே தான்! வங்கி, தபால், துறைமுக, புகையிரத ஊழியர்கள் ஆகிய எல்லா ஒடுக்கப்பட்ட பிரிவினரதும் போராட்டங்களுக்கும் எதிராக இந்த யுத்தம் பற்றிய தர்க்கமே முன்வைக்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாது, சமூர்த்தி முன்னோடிகளைப் போலவே, பல்வேறு தனியார் நிறுவன ஊழியர்களின் போராட்டங்களின்போதும், அவர்களுக்கு எதிராக இந்த யுத்தத் தர்க்கம் கீழிருந்து எழுந்தது. இப்போது தனிப்பட்ட பிரபுக்கள் தமது சுரண்டல் சக்கரத்தை முன்னோக்கி·நகர்த்திச் செல்வதற்கு ஏதுவாக இந்த ''யுத்தத்தில் செய்யப்பட வேண்டிய அர்ப்பணிப்பு'' பற்றிய தர்க்கத்தை முன்வைக்கிறார்கள். முழுச் சமூகமுமே இராணுவமயப்படுத்தப்பட்டு, மக்களிடமிருந்து பலாத்காரமாக வேலைவாங்கும் நிலைமை உண்டாகும் வரைதான் இந்த நிர்வாகிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம், யுத்தம் காரணமாக எந்தத் தொழிலாளர் கோரிக்கைகளுக்குமே உதவி தராததால் பிரபுக்கள் இப்போது அரண்மனைப் பறவைகள் போல் இருக்கின்றனர்.

கடந்த காலம் பூராவும் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் ஒடுக்கப்பட்ட மக்களை, அரச . முதலாளித்துவ புனர் நிர் மாணங் களின் புண்ணியத்தால் தான் திருப்திப்படுத்தி வந்தனர். அன்று, அரசசேவை மற்றும் கூட்டுத்தாபனம், கூட்டுறவு, ஊழியர் சபை ஆகிய நடவடிக்கைகளுக்கூடாக மக்களின் கோபத்தைத் தணித்து அவர்களை சொஸ்தப்படுத்தி வைத்திருந்தனர். இப்போது உலக வங்கியின் ஆலோசனையின் மீது அரச முதலாளித்துவ நலன்புரி மானியங்களை இல்லாதொழிக்க தொடங்கியதன் பின்பு, மக்களைக் கட்டுப்படுத்துவதென்பது எந்த முதலாளித்துவ ஆட்சிக்கும் இலேசான காரியமல்ல.

அதனாலேயே இளைஞர்களை யுத்தப் பிரயத்தனங்களில் பங்களிப்புச் செய்வதைக் காண முதலாளித்துவ வாதிகள் விரும்புகின்றனர். நலன்புரி மானியங்களுக்குச் செலவழித்த பணத்தில் இராணுவத்தைப் பலப்படுத்துவதனால் இவ் அனைத்து வேலைகளையும் அவ்வப்போதே விரைவாகச் செய்து கொள்ள முடியும் என அவர்கள் நினைக்கிறார்கள்.

உண்மையிலேயே இப்போது நடைபெறுவதும் அதுவே தான். அன்று அரச சேவைகள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு ஆகியன பற்றிக் கண் வைத்துக்கொண்டிருந்தவர்களுக்கு என்ன நடந்தது? அவர்களில் பெரும்பாலானோர் இப்போது இராணுவத்தில் சேர்ந்துள்ளனர். நலன்புரி மானியச் செலவுகள் இப்போது யுத்தச் செலவாக மாறியுள்ளன. இதற்கிணங்க இளைஞர், யுவதிகள் கடும் ஆட்சியொன்றினுள் அகப்பட்டுள்ளனர். பெருந்தொகையினர் கொல்லப்படுகின்றனர். பெருமளவானவர் அங்கவீனர்கள் ஆகின்றனர். இப்போ சந்திரிகா சொல்வது போலவே யுத்தச் செலவீனங்களை ஈடுசெய்ய எல்லா அரச சொத்துக்களையும் ஏலத்தில் விடுகின்றனர் அவை சிறுசிறு தேசியக் கொம்பனிக்காரர்களுக்கன்றி சிறந்த தரத்திலுள்ள உலக சொறிமுட்டையினர்க்கும், அமெரிக்க, பிரான்சிய, ஆங்கிலேய, ஜேர்மனிய, ஜப்பானிய பெருங் கொம்பனிகளுக்குமே கொடுக்கப்படுகின்றன. இதனால் நாட்டின் முழுப் பொருளாதாரமுமே பல்தேசிய சொறி முட்டையினர்க்குப் பலியாகி வருகிறது. நாட்டை யுத்த சட்டத்தின் கீழ் கொண்டு நடத்தும் நிலை உருவாகிவருகிறது.

தேர்தல் நடத்தப்படுமானால், நாடு பூராவும் கூட்டங்கள் மூலமாக இந்நிலைமை வெளிப்பட்டுவிடும். விஷேடமாக இடதுசாரி மேடைகளினூடாக யுத்தம் பற்றியும், அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களின் இயலாத்தன்மையும் வெளிவரும் இதனைத் தணிக்கை செய்வது கடினமாகும். எழுதுவதை நிறுத்தினாலும், வாய்களைச் சுற்றி வேலிகள் போட முடியாது தானே. மறுபுறம் தமிழ் மக்களின் வாக்குகளை இப்போது எப்படியும் அரசாங்கத்தால் பெற்றுக் கொள்ள முடியாது. இப்போது தொண்டமான் கூட தனியான வேறு ஒரு முன்னணிக் கூடாகவே போட்டி போடத் தயாராகிறார். அரசாங்கத்திடமிருந்து அன்னியப்பட்டுள்ள தமிழ் மக்களின் அருகே செல்ல வேறு வழியில்லை. அவ்வாறு தொண்டமான் தொழிற்பட்டாலும் பொ.ஐ.முயின் ஏனைய தலைவர்களுக்குத் தமிழ் மக்களுக்குச் சொல்ல எதுவுமில்லை. ''தமிழ் இனப்படுகொலை யுத்தத்துக்கு வாக்களியுங்கள்!'' எனக்கேட்பதா? செய்யக்கூடிய ஒரே விடயம் அதிகாரதைப் பாவித்துப் பெட்டிகளை நிரப்புவது மட்டும்தான். பெருந்தோட்டப்புறங்களில் அதுவும் எளிதானதல்ல.

இப்போது எல்லா இடங்களிலும் குண்டுகள் வெடிக்கின்றன, மின்மாற்றிகள், தொலைபேசி மத்திய நிலையங்கள் ஆகிய அனைத்து செயல்திறன் மிக்க இடங்களுமே தாக்குதலுக்குள்ளாகியுள்ளன. அரசாங்கத்தின் அமைச்சர்கள் எல்லோருமே இப்போது இவ்வாறான இலக்குகளாக மாறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

விஷேடமாக யுத்தத்தில் பங்களிப்புச் செய்யும் அமைச்சர்கள் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தத் திட்டங்கள் போடப்பட்டிருக்கலாம். அதனாலும் இப்போது தேர்தல் அரசாங்கத்துக்குத் தேவையில்லாது இருக்கும் யுத்தம் காரணமாக ஏற்படுத்தப்பட்ட இந்நிலைமையிலிருந்து என்றாவது தான் மீண்டுவர முடியுமென அரசாங்கம் நினைக்கிறதா?

யுத்தசார்பு சக்திகள் 'யுத்தத்தில் வெற்றி பெறும் வரை யுத்தச் சட்டத்தினால் முழு நாட்டையும் ஆட்சி செய்யு' மாறே கூறுகிறார்கள். தேர்தல்கள் மட்டுமன்றி கூட்டங்கள், ஊர்வலங்கள், கண்காட்சிகள், நடனங்கள், பாடல்கள் எல்லாவற்றையுமே நிறுத்திவிட்டு யுத்தம் புரிய வேண்டுமென்றே சம்பிக்க ரணவக்க சொல்கிறார். முழு நாட்டையுமே ஒரே மயானத்தைப் போல வெள்ளைத் துணியால் சுற்றிவைக்கவே இவ் அணியினர் கோருகின்றனர்.

யுத்தத்துக்கு போன பின்பு இக்குரல் இப்போது வர, வரப் பலப்பட்டு வருகிறது. அது மட்டுமல்ல, அரசாங்கத்தின் எல்லா உயர் மட்டத்தினருமே யுத்தவாதிகள் கூறுவது சரியானது என நினைக்கின்றனர். யுத்தத்தில் வெல்லும் வரை இதேபோல் அதிகாரத்தைப் பாவித்து முழுநாட்டையுமே இறுக்கிப் பிடித்துக் கொண்டு இருப்போம் என்ற கருத்து இப்போது அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரமுகர் மனதிலும் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு அது தேன் போன்ற மிகவும் இனிமையான கருத்தாகும். யுத்தவாதிகள் இப்போது இதனை நன்கு புரிந்து வைத்துள்ளனர். அதனால்தான் அதனை அளவு தெரிந்து ஓதி, ஓதிக்கொண்டு போகிறார்கள். ஆனாலும், இந்தத் தேனினுள் விழுந்த சீனி எறும்புபோல தேன் பாத்திரத்தினுள்ளேயே சாக வேண்டி வரும் என்பது சிலருக்கு மட்டுமே நினைவுக்கு வருகிறது.

அரசாங்கத்தினுள்ளே உள்ள இடதுசாரிகளுக்கும் அது விளங்குமாயிருந்தால் அது பெரிய வியடமாகும்.

தேர்தலைப் பின்போடுவதற்கு எதிராக அமைச்சர் பட்டிவீரக்கோன் பெரும் சட்டத் தர்க்கங்களை வைத்திருந்தார். ஆனாலும், அடுத்துத் தேர்தலை அரசாங்கம் பின் போட்டால் அதனை நியாயப்படுத்தப் பெரும் சட்டத் தர்க்கங்களை ஏற்படுத்த முடியும். அல்லது ''இப்போது இனி என்ன செய்ய?'' என்று கூறி அமைதியாக இருக்கவும் முடியும்.

இதற்கு முன்பும் பட்டி வீரக்கோன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் தனியான யோசனைகளைக் கொண்டும் வந்துள்ளார். ஆனால், அவ் எதிர்ப்பைக் கணக்கெடுக்காது சந்திரிகா முன்செல்லும் போது அமைதியாகியும் உள்ளார்.

நகர பிதா கரு ஜயசூரிய இரவு என்னை அழைத்து இத் தேர்தல் பின்போடும் யோசனை பற்றிக் கூறும் போதே ஏதாவது உடன்பாட்டுக்கு வர நிர்ப்பந்தம் அவருக்கும் ஏற்பட்டுள்ளது என எனக்குத் தோன்றுகிறது. ''ஜனாதிபதி தேர்தலை விரைவிலேயே தருகிறேன். அதுவரை தேர்தலைப் பின்போட ஒன்று படுங்கள்.....'' என்று மேல்மட்டத்திலிருந்து யோசனை தெரிவிக்கப்படலாம்.

யுத்தத்துக்குச் சார்பான முதலாளித்துவக் கட்சியொன்றுக்கு அவ்வாறான யோசனையொன்றை எதிர்ப்பது கஷ்டமானது. மகா சங்கத்தினரும் இதனைக் கோருகின்றனர். இவ்வேலைக்கு உடன்படுமாறு ரணில் விக்ரமசிங்ஹ முயற்சி செய்வதாக எனக்குத் தோன்றுகிறது. ஆனாலும் ஐ.தே.கவின் கீழ் அணிகளை இதற்கு உடன்பட வைக்கச் சிரமமாயிருக்கும்.

ஆட்சி அதிகாரத்தின் நல்ல பங்குதாரராக ஆகாது இவ்வாறான ஒன்றுக்கு உடன்படுவதால் அக்கட்சியிலுள்ள செயற்பாட்டாளர்களுக்கு பலன் என்ன? தமக்கு அடி, தடி கொடுக்க அழைக்கும் அரசாங்கமொன்றுக்கு முன்று கொடுக்க அவர்கள் எப்படியும் விரும்பமாட்டார்கள். ஆனால், அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது பற்றி பல யோசனைகள் வந்தாலும் கரு ஜயசூரியவும், ஊர்வலத்துடன் ஒன்று சேர்ந்து கொள்வார் என்றே எனக்குத் தோன்றுகிறது.

ஆனாலும், தேர்தலைப் பின்போட்டால் சிவில் யுத்தமொன்று நாடு பூராவும் இதனைவிட வேகமாகப் பரவுவதை மட்டும் தடுக்க முடியாது.

அரசாங்கத்துக்கு எதிர்ப்பைக் காட்டத் தேர்தல் வழியில் இடங்கிடைக்காவிடின் எதிர்ப்பு அணிகள் போராட்ட வழியை நாடிப்போகத் தொடங்கும். தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொள்வர். தொழிலாளர்கள் தொழிற் போராட்ட முன்னணியில் ஒன்று திரள்வர். அனைத்து ஒடுக்கப்படும் பிரிவுகளும் பல்வேறு வெகுஜனநடவடிக்கைகளில் ஈடுபடும். அரசாங்கத்தின் பக்கத்திலிருந்து பார்த்தால் இது சரியாக ''வீடு சென்றால் மனைவி சாவாள்; இடைநடுவில் நின்றால் நீ சாவாய்'' போன்ற நிலைமையாகும்.

*நன்றி லக்பிம 19980628*

*நசசக பொதுச்செயலாளர்*
*விக்ரமபாகு கருணாரத்ன.*
*தமிழில் : சி.செ.ராஜா*

# தமிழ்ப் பெண்களுக்கெனத் தனியான பெண்கள் அமைப்பு ?



## ஒரு விவாதத்திற்கான முற்குறிப்புகள்

அண்மையில் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் ''பால் நிலையும் சமூகக் கோட்பாடுகளும்'' என்ற பொருளில் இரு நாள் ஆய்வுக் கருத்தரங்கொன்றை நடாத்தியது. இருநாட்களும் பெண்கள் தொடர்பான சுமார் 12 கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. அவை பற்றிய கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன. பெண்ணியச் சிந்தனைகள் தொடர்பான விழிப்புணர்வை ஊட்டுவதில் இக்கருத்தரங்கு பெரும் பங்கு ஆற்றியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

எனினும், தமிழ்த் தரப்புப் பெண்களின் முக்கிய ஆய்வுக்குரிய விடயங்களான தமிழ்ப் பெண்களுக்கெனத் தனியான பெண்கள் அமைப்புத் தேவையா?, தமிழ்ப் பெண்களுக்கான அமைப்பின் அரசியல் எவ்வாறு இருக்க வேண்டும், பல்வேறு பிரிவினரையும் கொண்ட தமிழ்ப் பெண்கள் மத்தியில் பொதுவான பெண்கள் அமைப்பைக் கட்டுவது எப்படி? என்பவை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமை முக்கிய குறைபாடென்றே கருத வேண்டும்.

இந்த வகையில் இம்மூன்று விடயங்களை ஒட்டியே இக்கட்டுரை தன் கவனத்தைக் குவிக்க முனைகின்றது.

### *இலங்கையில் தமிழ்ப்பெண்களுக்கெனத் தனியான பெண்கள் அமைப்பு அவசியமா?*

இது விடயத்தில் ஒரு சாரார் இனரீதியாகப் பெண்களைப் பாகுபடுத்தாது, இன அடையாளங்களைத் துறந்த நிலையில் முழு இலங்கைக்கும் பொதுவான பெண்கள் அமைப்பே தேவை என்ற கருத்தினை முன்வைக்கின்றனர். பெண்ணிய ஆய்வாளர் சுல்பிகா ஆதம் போன்றவர்களிடம் இக்கருத்து மேலோங்கிய நிலையில் காணப்படுகின்றது.

மறுசாரார் இன்று சமூகம் என்ற அளவில் இலங்கை மக்கள் சிங்களத் தேசம், தமிழ்த் தேசம் என இரு தேசங்களாகப் பிரிவுற்றுள்ளனர்; தமிழ்த்தேசம் தனது நிகழ்ச்சி நிரலில் தேச விடுதலைப் பிரச்சினையையே முதன்மை நிலையில் வைக்க வேண்டியுள்ளது. தமிழ்த் தேசத்தினுள் செயற்படும் எந்த சமூக சக்திகளுக்கும், எந்த அரசியல் இயக்கங்களுக்கும் இந்தக் கடப்பாடு உள்ளது. தமிழ்ப் பெண்களுக்கும் இது பொருந்தும். சிங்களத் தேசத்திற்கும் தேசிய இனப்பிரச்சினையை முதன்மை நிலையில் வைக்க வேண்டிய கட்டாயம் இல்லை. இவர்கள் இரண்டாம் மூன்றாம் நிலைக்குக்கூட இதனைத் தள்ளி விடுகிறார்கள். எனவே தமிழ்ப் பெண்களுக்கென தனியான பெண்கள் அமைப்புத் தேவை என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. தேச விடுதலையில் ஆர்வமுள்ளவர்களும், தேச விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் இக்கருத்தினை முன்வைக்கின்றார்கள்.

உண்மையில் இந்நிகழ்வு இடதுசாரி அரசியலில் ஏற்கெனவே நடைபெற்று விட்டது. இதனால்தான் ஜே.வி.பி. உடனான பேச்சுவார்த்தையின் போது, நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன ''இன்று இடதுசாரிகள் தமிழ் இடதுசாரிகள், சிங்கள இடதுசாரிகள் என இருவகையிலான நிலையிலேயே உள்ளனர். இது வரலாற்றுப் போக்கின் தவிர்க்க முடியாத இயல்பு'' எனக் குறிப்பிட்டார்.

என்னுடைய கருத்தும் தமிழ்ப் பெண்களுக்கெனத் தனியான பெண்கள் அமைப்பு வேண்டும் என்பதாகவே உள்ளது. இக்கருத்தினை வலியுறுத்தும் இன்னொரு அம்சம் தமிழ்ப் பெண்கள் எதிர்நோக்கும் சில விஷேட பிரச்சினைகளுக்கான தீர்வு, தேசவிடுதலைக்கான தீர்விலேயே தங்கியுள்ளது என்பதாகும். இதற்கான தீர்வுகள் கிட்டக்கூடிய நிலையில் தமிழ்ப்பெண்களுக்கெனத் தனியான அமைப்பு இருக்குமாயின் மட்டுமே அவர்களால் தங்களுக்கான தீர்வையும் அதில் வலியுறுத்த முடியும்.

தனியான அமைப்புத் தேவை என்பதற்காக வேறு இனங்களின் பெண்கள் அமைப்புடன் இணைந்து வேலை செய்யக்கூடாது என்பது இதன் அர்த்தம் அல்ல. தமிழ்ப் பெண்களுக்கும் ஒரு சர்வதேச கடமை இருக்கிறது என்ற வகையில் இனம் கடந்து, நாடு கடந்து, உலகளாவிய ரீதியிலும் பொது வேலைத்திட்டத்தில் அவர்கள் பங்குபற்றத் தான் வேண்டும். இதற்காகச் சிங்களப் பெண்கள் அமைப்புக்களுடனோ, முஸ்லிம் பெண்கள் அமைப்புக்களுடனோ அல்லது வேறு நாடுகளின் பெண்கள் அமைப்புக்களுடனோ கூட்டணி அமைத்துக் கொள்வதில் எந்தவிதத் தவறும் கிடையாது. ஆனால், தனது தேசத்திற்குள்ளான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தனியான அமைப்பு அவசியமாக உள்ளது.

### *தமிழ்ப்பெண்களுக்கான அமைப்பின் அரசியல்*

இது மிகவும் முக்கியமானது. இது பற்றிய சரியான ஆய்வோ, தேடலோ, விவாதமோ ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் நடைபெறாததும், தமிழ்ப் பெண்களுக்கான அரசியலை முழுமையாக இதுவரை வெளிப்படுத்தாததும் மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகும். தமிழ்ப் பெண்கள் மத்தியில் நிலவும் பல்வேறு பிரிவினரைக் குறிப்பாக மத, சாதி, பிரதேச, வர்க்கப் பிரிவினரையும் கவனத்தில் எடுத்து

தமிழ்ப் பெண்களுக்கெனப் பொதுவான அரசியல் கொள்கையை உருவாக்குவது அவசியம். அதுவும் இப்பிரிவினரில் மிகவும் விளிம்பு நிலையில் உள்ள தலித் பெண்கள் தொடர்பாக சிறப்பான கவனம் எடுத்தல் அவசியமாகும். தலித் பெண்களுக்கெனச் சிறப்பான ஏற்பாடுகள் இல்லாமல் அவர்களின் மேல்நோக்கிய அசைவை நினைத்தும் பார்க்க முடியாது. ஏனெனில், ஒரு தமிழ் தலித் பெண்ணைப் பொறுத்தவரை அவள் இனம், சாதி, பால், வர்க்கம் என நான்கு வகையான ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுபவளாக இருக்கிறாள். (பெரும்பான்மையான தலித் பெண்களை உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்தவர்களாகக் கொள்வது - வரன்முறையான ஆய்வு இல்லாவிடிலும் - பொருத்தமானதே.) தமிழ்ப் பிரதேசத்தில் குடாநாடு தவிர்ந்த ஏனைய இடத்தில் வாழும் தலித் பெண், பிரதேச ஒடுக்கு முறை என்ற ஐந்தாவது ஒடுக்குமுறைக்கும் உள்ளாக வேண்டிய நிலை உண்டு.

இந்தியாவில் பாராளுமன்றத்திற்கும், சட்ட மன்றத்திற்கும், பெண்களுக்கு 33 வீத இட ஒதுக்கீடு தேவை என்ற மசோதா கொண்டு வரப்பட்ட போது, இதில் முஸ்லிம்களுக்கும், பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கும் தனிப்பங்கு தேவை என்ற கோரிக்கை எழுந்துள்ளதை நாம் இது விடயத்தில் நினைவு கொள்ளல் வேண்டும்.

அரசியல் கொள்கை வகுப்பில் இன்னொரு பிரதான விடயம் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான கொள்கையையும் அது உருவாக்க வேண்டும் என்பதாகும். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு காண வரும் போது அளிக்கப்படுகின்ற அதிகாரத்தில் பெண்களின் பங்கு எவ்வளவு இருக்க வேண்டும் என்பதையும் தீர்மானிக்க வேண்டும். இந்த வகையில் அரசியல் நிறுவனங்களில் பெண்களின் பங்கு பெண்களுக்கான அடிப்படை உரிமைகள், பெண்களின் நலன்சார்ந்த திட்டங்கள் என்பன பற்றியும், கவனத்தில் கொண்டு அரசியற்கொள்கையை உருவாக்க வேண்டும்.

உண்மையில் மேற்கூறியவற்றை கவனத்தில் எடுத்து அரசியற் கொள்கை வடிவத்தை உருவாக்குவது என்பது இலகுவானதல்ல. தமிழ்ப் பெண்களில் உள்ள ஒவ்வொரு பிரிவினரதும் அரசியல் அபிலாஷைகள் என்ன? பொதுவான கொள்கைகளின் கீழ் அடக்கப்படக் கூடிய அபிலாஷைகள் எவை? விளிம்பு நிலைக்குரிய பெண்களுக்குரிய முன்னுரிமைகள் எவை? போன்றவற்றினை நீண்ட தேடலுக்கூடாக அடையாளம் கண்டு புறநிலையான ஆய்விற்கும் விவாதத்திற்கும் அவற்றை உட்படுத்தியே தீர்மானகரமாக, அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கொள்கையை உருவாக்க முடியும்.

### *தமிழ்ப் பெண்களுக்கான அமைப்பு*

இது தமிழ்ப்பெண்களின் சமூக உருவாக்கம் எவ்வாறு உள்ளது என்பதுடன் தொடர்புடையது. ஏற்கெனவே கூறியது போல தமிழ்ப் பெண்களில் மத, சாதி, பால், பிரதேச, வர்க்கப் பிரிவுகளாக சமூக சக்திகள் உள்ளமையினால், அவர்கள் அனைவரையும் சமத்துவமாக இணைத்த ஐக்கிய முன்னணியாகத் தமிழ்ப் பெண்கள் அமைப்பு இருப்பது அவசியமாக உள்ளது. இவ்வாறு சமத்துவமான ஐக்கிய முன்னணி அமையும் போதே உருவாகும் பெண்கள் அமைப்பு தமிழ்ப் பெண்களின் அனைத்துப் பிரிவினரதும் நலன்களைப் பிரதிபலிக்கும் அமைப்பாக அமையும். பெண்களின் பல்வேறு பிரிவினரும், ஊக்கமுடன் செயற்படும் போக்கும் அப்போதே உருவாகும். தலைமையும் இப்பிரிவினரது கூட்டாக அமைவது அவசியமாகும். ஒரு குறிப்பிட்ட பிரிவு சக்திகளின் பிரதிநிதிகளின் தலைமையில் இல்லாமல் அப்பிரிவினரது நலன்களைப் பேணுவது கடினமானது என்பதையே வரலாறு எமக்குக் காட்டியுள்ளது. தலித்துக்கு மட்டுந்தான் தலித் உணர்வு இருக்குமா? என்ற கேள்விகள் இங்கு எழலாம். அவரால் மட்டும் தான் தலித்தினுடைய பிரச்சினைகளை உணர்வு பூர்வமாகப் புரிந்து கொள்ள முடியும் என்பதே உண்மை நிலை.

பொதுவாக இவ்வாறான பொது அமைப்புகளில் ஆதிக்க சக்திகள் தலைமைக்கு வருவது இலகுவானது. ஆனால், விளிம்பு நிலை மக்கள் தலைமைக்கு வருவதுதான், மிகமிகச் சிரமமானது. நாம் அதற்குரிய வழி வகைகளைக் கண்டாக வேண்டும். அதற்கேற்ற வகையில் அமைப்பு வடிவத்தையும், அமைப்பு விதிகளையும் உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

ஒரு அமைப்பின் வெற்றிக்கு அதன் இலக்கு, இலக்கு நோக்கிய கொள்கை, கொள்கையை வென்றெடுக்கக்கூடிய வேலைத்திட்டம், வேலைத்திட்டத்தினை முன்னெடுக்கக்கூடிய அமைப்பு வடிவம், அமைப்பினை இயக்குவதற்கான ஒழுங்குவிதிகள், வழிகாட்டும் தலைமை என்பன உயர்ந்த தரம் உடையதாக இருக்க வேண்டியது அவசியமாகும். பெண்கள் அமைப்பினை உருவாக்கும் போது இவை எல்லாவற்றையும் கவனத்தில் எடுப்பது அவசியமாகும்.

இன்னோர் விடயத்தையும் இங்கு நாம் குறிப்பிட வேண்டும். அது ஒரு அமைப்பிற்கும், அரசு சார்பு நிறுவனங்களுக்குமுள்ள தொடர்பு பற்றியது. துரதிருஷ்டவசமாக இலங்கையில் பெரும்பான்மையான பெண்கள் அமைப்புகள் அரசு சார்பற்ற நிறுவனங்களாகவே உள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கெனத் தனியான பண்புகளும், தனியான இயங்கு விதிகளும் உள்ளன. அவை ஒரு போராடும் அமைப்பல்ல. மாறாக, உதவி செய்யும் நிறுவனங்களேயாகும். அவை மக்களிடம் தங்கி நிற்கும் நிறுவனங்களும் அல்ல. உதவி வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களில் தங்கி நிற்கின்றவையாகும்.

இதனால், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒரு எல்லைக்கு அப்பால் பெண்களுக்காகப் போராடும் நிறுவனங்களாக இருக்கப் போவதில்லை. ஆனால், போராட்டத்திற்குத் துணையான நிறுவனங்களாக இருக்கலாம். எனவே பெண்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அப்பால் சுயாதீனமாக பெண்கள் அமைப்பைக் கட்டுவதே சரியானதாக இருக்கும். இவ்வமைப்பின் வழிகாட்டலில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெறுவதில் தவறில்லை.

மாறாக, அரச சார்பற்ற நிறுவனங்களையே புரட்சிகர நிறுவனமாக நம்பிச் செயற்படச் சென்றவர்கள் அதற்குப் பலியானதே நவீன வரலாறு. புரட்சிகர சக்திகளின், புரட்சிகர உணர்வை மழுங்கடிக்க உருவாக்கப்பட்ட நிறுவனங்களே அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற கருத்து இந்த வகையில் மிகைப்படுத்தப்பட்டஒரு கருத்தல்ல.

இவ்வாறு கூறுவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் பெண்கள் பிரச்சினையில் எதுவுமே செய்யவில்லை என்பது அர்த்தமல்ல. பெண்களுக்கான சுயாதீன அமைப்புகள் பலமாக இல்லாத நிலையில் பெண்கள் பிரச்சினை பற்றிய விழிப்புணர்வை அரச சார்பற்ற நிறுவனங்களே ஊட்டின என்பதை மறுதலிக்க முடியாது.

இறுதியாக எனக்குத் தெரிந்த வகையில் பெண்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள்பற்றி சிலவற்றைச் சுட்டிக் காட்டியுள்ளேன். இவை முடிந்த முடிவல்ல. விவாதத்திற்கான தொடக்கமாகவே இதனைக் கருதுகிறேன். இதுபற்றி ஆழமான தேடலையும், ஆய்வையும், விவாதத்தையும் ஆரம்பிப்பது அவசியம். தமிழ்ச் சூழலில் செயற்படும் ஒரேயொரு மாற்றுப் பத்திரிகை என்ற வகையிலும், சரிநிகர் இதற்கான களத்தினை அமைத்துக் கொடுக்கும் என நம்புகின்றேன்.

**-பரந்தாமன்**

# மலையகத் தமிழரா இந்தியத் தமிழரா எப்படி அழைப்பது ?

அ.லோரன்ஸ்

(இறுதிப் பகுதி)

### மலையகம் என்ற பெயரின் வரலாற்றுப் பின்னணி

1960ம் ஆண்டுகளிலேயே ''மலையகம்'' என்ற பெயர் அடிபடத் தொடங்கிவிட்டது. 1960களின் பின் ''மலையகம்'', ''மலைமுரசு'' என்ற பெயர்களில் பத்திரிகைகள் வெளிவரத்தொடங்கிவிட்டன. மலையக மக்கள் தம்மை ''மலையகத் தமிழர்'' என்று அழைத்துக் கொள்ள விரும்புவதை வெளிப்படுத்துவது போல் 1970களில் மலையகத்தில் இளைஞர் அமைப்புகளும், வெகுஜன அமைப்புகளும் உருப்பெற்றன. இதில் இரா. சிவலிங்கம் தலைமையில் உருவாகிய ''மலையக இளைஞர் முன்னணி'', வி.எல்.பெரேரா, சத்தி பாலையா தலைமையில் உருவாகிய ''மலையக மக்கள் பேரவை'', சாந்திகுமார் மரியதாஸ் ஆகியோர் தலைமையில் உருவாகிய ''மலையக மக்கள் இயக்கம்'', பி.ஏ.காதர், விரி. தர்மலிங்கம், ஏ.லோரன்ஸ் ஆகியோர் தலைமையில் உருவாகிய மலையக வெகுஜன இயக்கம், தமிழ் கல்வி அமைச்சராக மத்திய மாகாணத்தில் கடமையாற்றிய வி.புத்திரசிகாமணி, திவ்யராஜன், நேருஜி ஆகியோர் தலைமையில் உருவாகிய ''மலையக ஐக்கிய இளைஞர் முன்னணி'' போன்ற இயக்கங்கள் இப்பெயரை மலையக மக்கள் விரும்பியதன் வெளிப்பாடாகவே உருப்பெற்றுள்ளது. ஆகவே, மலையகத்தில் இளைஞர் அமைப்புகள், வெகுஜன ஸ்தாபனங்கள், பெண்கள் அமைப்புகள் என்பன ''மலையகம்'' என்ற பெயதரக் கொண்டே உருவாகியது. ஏன் மலையகத்தில் உருவாகிய தீவிரவாத அமைப்புகள் கூட ''மலையக விடுதலை இயக்கங்கள்'' என்ற பெயரைக்கொண்டே அழைக்கப்பட்டன.

ஆகவே, இளைஞர்கள் நடுத்தர வயதினர், முதியோர், படித்தவர்கள், பெண்கள் என்ற பாகுபாடு இல்லாமல் ''மலையகத் தமிழர்'' என்று தம்மை அடையாளம் காட்டினர். இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய மலையகத் தமிழர் கூட இலங்கையில் மலையகத்தில் வாழும் மலையகத் தமிழ் மக்களை இன்னும் மலையகத் தமிழர் என்றே அழைக்கின்றனர். தமிழகத்தில் இன்று தாயகம் திரும்பியோர் மத்தியில் வெளிவரும் நூல்களில் சஞ்சிகைகளில் மலையகத் தமிழர் என்ற சொற்பதத்தையே பாவிக்கின்றனர்.

இலங்கை - இந்திய காங்கிரஸ் என்ற அரசியல் ஸ்தாபனம் உருவாகினாலும் மலையகத் தமிழர்களின் வாக்குரிமை 1948ம் ஆண்டு பறிக்கப்பட்ட பின் இந்திய என்ற பதத்தைக் கொண்டு அரசியல் ஸ்தாபனங்கள் உருவாகவில்லை. மிக அண்மைக்காலத்தில் உருவாகிய இந்திய சமுதாய பேரவை என்ற கொழும்பு வாழ் முதலாளிகளை பிரதிநிதித்துவப்படுத்திய அமைப்பைத் தவிர வேறு அமைப்பு ஒன்றும் உருவாகவில்லை. இந்த அமைப்பு தோட்டத்தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. தொண்டமான் இதன் தலைவர் என்று சொல்லப்பட்டாலும், தோட்டத் தொழிலாளர்கள் யாரும் இவ்வமைப்பில் அங்கத்தவராக முன்வருவதில்லை. தோட்டத்தொழிலாளர்கள் தொண்டமானை இ.தொ.கா. தலைவராகவும் மலையகத் தமிழராகவும் மதிக்கின்றனர்.

### இந்திய வம்சாவளியினர் என்ற பதம்

இந்நாட்டில் வாழும் இந்திய வம்சாவளியினரை அதாவது பெரும் முதலாளிகளையும் அவர்களின் இந்திய நலன்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. இந்திய வம்சாவளியினர் என்னும் போது சிந்து மார்வடிகள் நாட்டுக்குக் கோட்டை செட்டிகள், கொழும்புச் செட்டிகள், பரத குலத்தினர், கைதராமணி, இந்திய பாய்மார்கள் ஆகியோரைக் குறித்து நிற்கிறது.

இந்திய சமுதாய பேரவை என்ற அமைப்புக்கூட மலையக மக்கள் பெரும்பான்மையாக வாழும் நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை மாவட்டத் தோட்டத்தொழிலாளர்களை குறித்து நிற்கவில்லை. மாறாக, இந்திய வம்சாவளி முதலாளித்துவ வர்க்க பிரதிநிதிகளை குறித்து நிற்கிறது. மலையகத் தமிழர் என்ற பதம் 80வீதமான தோட்டத் தொழிலாளர்களையும், மற்றும் பிறதொழிற் துறையில் ஈடுபட்டுள்ள மலையக புத்திஜீவிகள், படித்தவர்களை குறித்து நிற்கின்றது. மக்கள் விடுதலை முன்னணியின் ''இந்திய விஸ்தரிப்பு வாதம்'' என்ற வகுப்பில் கூறப்பட்டவர்கள். மேற்படி வசதிபடைத்த முதலாளிகளேயாவார். ஆனால், ஜே.வி.பி. காரர்கள் மாறாக, தோட்டத்தொழிலாளர்களை சுட்டிக்காட்டி இந்திய விஸ்தரிப்பு வாதிகள் என்று கூறியது அவர்களுக்கு இருந்த இனவாத கண்ணோட்டத்தின் காரணமாகும்.

தமிழகத்தின் 4 கோடி மக்கள் வாழ்ந்தும் கூட அவர்கள் இன்று கூட தம்மை இந்தியத் தமிழர் என்று கூறுவதில்லை. தம்மை தமிழ்நாட்டுக் காரன், தென்னகத்தை சேர்ந்தவ என்று தான் கூறுகின்றனர். தமிழகம், தென்னகம் என்றே அழைக்கின்றனர். தம்மை இந்திய என்று அல்லது இந்திய வம்சாவளியினர் என்றோ அழைப்பதில்லை.

### இந்திய தமிழர் என்ற பதம் உத்தியோக ரீதியான பதமா?

இந்தியத் தமிழர் என்ற பதத்தின் மூலமே, நாம் அடையாளம் காட்டுகின்றோம். அது எமது இனத்தை குறிக்கும் உத்தியோக பூர்வமான பதம் என்று சிலர் வாதிக்கின்றனர். இப்பதம் 1911ம் ஆண்டு குடிசன கணீப்பீட்டின் பின் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் இது மலையக மக்களின் சம்மதத்துடன் பாவிக்கப்படவில்லை. பிரித்தானியர்கள் எம்மீது அக்கறை கொள்ளாதபடியால் இப்பெயரில் அக்கறைக் கொள்ளவில்லை. ஆனால், பெரும்பான்மை மக்களும் மற்றும் இந்நாட்டின் மலையக மக்கள் தவிர்ந்த ஏனைய சிறுபான்மையினர் கூட நாம் இந்தியாவிற்கு திரும்பிப்போகவேண்டியவர்கள். எனவே, இவர்கள் இந்திய தமிழர்கள் என்று அழைக்கப்படுவது சிறந்தது என எண்ணினர். எனவே, இந்திய தமிழர் என்ற சொல் எமது அபிலாஷைக்கு புறம்பாக பாவிக்கப்பட்ட பெயராகும். இந்த பிறப்பு சான்றிதழ் போன்றவற்றில் இந்தியர், தமிழர் என்று பாவிக்கப்பட்டாலும் கூட அது மாற்றப்படக்கூடியது. முஸ்லிம் மக்களினது பிறப்பு சான்றிதழில் அண்மைக்காலம் வரை அவர்களது தேசிய இனத்தை உணர்ந்த மறக்கள என்றே குறிப்பிடப்பட்டது. ஆனால் மிக அண்மைக் காலத்தில் பாராளுமன்றத்தில் பிறப்பு, பதிவுச் சட்டத்திற்கு ஓர் திருத்தம் கொண்டு வரப்பட்டு ''மறக்கள'' என்பதற்கு பதிலாக ''இலங்கை சோனகர்'' என்று அறிமுகப்படுத்தப்பட்டது. ஆகவே, இலங்கையில் உத்தியோகபூர்வமான ஆவணங்களில் மலையகத் தமிழர் என்று குறிப்பிடப்படவேண்டும் என்று பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வருவது செய்யக்கூடாத விடயமல்ல. முஸ்லிம் மக்களுக்கு செய்தகாரியத்தை மலையக மக்களுக்கு செய்யக் கூடாது என்பதல்ல. இது சாத்தியமாகக் கூடியதே. உத்தியோகபூர்வமான ஆவணங்களில் குறிப்பிட்ப்படுவது போலவே வேலைவாய்ப்பிலும் எமது விகிதாசாரத்திற்கும் ஏற்ப மலையகத் தமிழருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஆகவே, மலையகத் தமிழர் என்ற பதத்தை உத்தியோகபூர்வமான மாற்ற முயற்சிக்காமல் இந்திய வம்சாவளி தமிழர் என்ற பதத்திற்காக குரல் கொடுப்பது பத்தாம்பசளித் தனமாகும். பொதுவாக இலங்கையில் வாழும் இனங்கள் பற்றி நூல்களிலோ, அல்லது பொதுவான கூட்டங்களிலோ குறிப்பிடப்படும்போது, சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் அல்லது பேகர் பர்கர் என்று முன்னால் ஜனாதிபதி பிரேமதாச குறிப்பிடுவர் என்றே குறிப்பிடப்படுகின்றார்கள். மலையக மக்கள் பற்றி குறிப்பிடப் படுவதில்லை. ஆயிரக்கணக்காக வாழும் பறங்கியர் பற்றி புள்ளிவிபர நூல்களில் உத்தியோகபூர்வமாக குறிப்பிடப்படும்போது, மலையகத் தமிழ் மக்கள் தொடர்பாகப் பாவிக்கப்படும் பதம் தொடர்பாக ஓர் ஆய்வை செய்தால் கூட அது 80%மாக மலையகத் தமிழர் என்ற சொல்லை பயன்படுத்துவதை வெளிப்படுத்தும் ஆய்வு நூல்கள், சஞ்சிகைகளில், கட்டுரைகளில் மலையகத் தமிழர் என்ற சொல் பயன்படுகிறது. மலையக மக்கள் தவிர்ந்த ஏனைய இனத்தினர் கூட தற்போது மலையகத் தமிழர் என்ற சொல்லையே பாவிக்கின்றனர். மலையகத் தமிழர் என்று குறிப்பிடவிரும்பாத இந்தியாவிலிருந்து வந்த தமிழர்கள் குறைந்த விதத்தினராக இருக்கலாம். ஆனால், பெரும்பான்மையான மலையகத் தமிழரையே சிந்திக்கலாம். மலையக தோட்டத்தொழிலாளர்களோடு இணைந்து மலையகத் தமிழர் என்று கூறவிரும்பாதவர்களைப் பற்றி நாம் கூடுதலாக அலட்டிக் கொள்ள முடியாது. ஆகவே, இறுதியாக இன்று மலையக மக்களின் அபிலாஷை அவர்களது இனத்துவம், தனித்துவம், தன்னடையாளம், கலாசாரம் அவர்கள் வாழும் பிரதேசம் என்பவற்றின் தனித்துவம் பாதுகாக்கப்படுவது மிக அவசியமாகும். இதன் மூலமே இவர்கள் உரிமையும் அவர்களது பிரதேசமும் பாதுகாக்கப்படும். ஆகவே, மலையக மக்கள் எழுச்சிக்கு இந்த மண்ணோடு இணைந்த மலையகத் தமிழர் என்ற பெயர் ஒரு தூண்டுகோலாகவும் எழுச்சியை ஏற்படுத்தும் பேராகவும் அமைவதோடு, இந்திய வம்சாவளி தமிழர் என்ற பெயரைவிட தர்க்க ரீதியானதாகவும், விஞ்ஞானபூர்வமானதாகவும், யதார்த்தமானதாகவும் அமையும். ○

# செம்மணிகளும் புதைகுழிக்க முடியாத உண்மைகளும்

— சு.வில்வரத்தினம் —

போர் காலப்புழுதி செம்மணியின்
புதைகுழிகளை மறைத்திருக்கலாம்
தமிழ் அரசியலார் கண்களையுமா
கசக்கிக் கொள்கிறார்களே புதிதாய்

தூக்குத் தீர்த்தவன் வாய் அவிழும் வரையில்
தம் குரலை எங்கு இவர்கள்
அடகுவைத்து இழந்தார்கள்.

கேட்கலாமல்லவா?
கிழியக் கிழியக் கேட்பதற்கு
கேள்விகள் இன்னும் உள்ளன கைவசம்
வேண்டாம் வாயை மூடிக்கொள்கிறேன்
கேள்விகளையும் குழிக்குள் கிளரா
உண்மைகளாய்த் தூங்க விடுகிறேன்
போஸ்ட் மோட்டம் முடிந்ததும் புதைக்கவரும்
தீர்வுப்பிணப் பொதிக்கு காவலாயிருக்கட்டும்.

ஆனாலும் பாருங்கள்
கேள்விகளை முழுமையாய் புதைக்க முடிவதில்லை
புதைகுழியூடாகத் துருத்திக்கொண்டு தெரியும்
கையைப்போலவோ அல்லது காலைப்போலவோ
வரலாற்றின் மூண்ட பக்கத்தைக் கிழித்துக்கொண்டு
வெளியே வந்து விடுகிறது.
சிலவேளை புதைகுழியில் குத்திவைக்கப்பட்ட
கள்ளிச் செடிபோல நிரந்தமாய்த் தங்கி விடுகிறது
சிலவேளை புதை குழிக்கப்பட்டவனின் ஆவியாகக்
காற்றிலேறி தன் குரல் கிளர்த்துகிறது.

கிருஷாந்தி வழக்கில் தூக்குத் தீர்க்கப்பட்டவனின்
தொண்டைக்குள்ளும் இப்படித்தான் புகுந்து கொண்டது
செம்மணிப் புதைகுழிகளைக் காட்டித் தருகிறே[illegible]
என்கிறது; கணக்கீடும் ஒத்துவருகிறது
காணாமல் போனோர் பட்டியலோடு.....
எண்ணிக்கை நானூறுக்கும் மேலே

எண்ணிக்கையிலா இருக்கிறது எல்லாமும்
தேசமென்பதென்ன வெறும் மக்களின் திரளா?
பூமியென்பதென்ன புதை குழிக்கத்தானா
சூரிய கந்தைகள்; செம்மணிகளென
தேசமெல்லாம் புதைகுழிகள்தானா?
புதைகுழிக்கப்பட்டவை தானென்ன
மனிதமும் மனிதவிடுதலையும்,
மகத்துவமிக்க மானிடத்தளிர்களுமல்லவா?

தோண்டினால் நாறுவன
நாட்பட்ட பிணங்கள் மட்டுமா?
பேய்களின் ஆட்சியும், பிணந்தின்னி அரசியலும்,
சாத்தான் ஓதும் சமாதானமும் தான்.

தோண்டினாலும், தோண்டாவிட்டாலும்
தொடரப்போவது புதை குழிராச்சியந்தான்
சுரையை விதைத்தால் பூசணியா படரும்?
படரவிருப்பவை பழியும் பாவமுந்தான்.

சாகுந்தறுவாயில்
சூரிய கந்தைக்கும் செம்மணிக்கும்
ஒரு சுரங்கப் பாதை உண்டெனச் சொன்னானுக்கு
மும்மணிகளினதும் ஆசீர்வாதமும் கிட்டுவதாக.



16.07.1998



# எங்களை வாழ விடுங்கள்!

-ஆனந்தன்

ஜூலை 16ஆம் திகதி விடியற் காலை 4 மணியிருக்கும். [illegible] எல எனும் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்தது பொலிஸ். அந்தக் குடியிருப்புப் பகுதியில் இரண்டு ஜீப்புகள் வெவ்வேறாகப் பிரிந்து சென்றன. ஒரு ஜீப் நேராக குணாவின் வீட்டை நோக்கிச் சென்றது.

வீடு படீர், படீர் எனத் தட்டிய சத்தம் ஏனைய வீடுகளையும் நித்திரையில் உசுப்பி விட்டது. குணாவின் வீட்டிலுள்ளவர்கள் பதட்டத்துடன் நித்திரையில் இருந்து எழுந்தனர். எங்கே சுரேஷ் (குணாவின் தம்பி) என்று வரும் போதே சுரேஷ் பின் வழியை நோக்கி விரைந்தார். பின் வழியால் மேலும் சிலர் மறித்து நின்றனர். அதனைக் கண்ட சுரேஷ் பின்வாங்கவே அவரையும் இழுத்துக் கொண்டு வீட்டுக்குள் வந்து ஏற்கெனவே அங்கு வந்து சேர்ந்திருந்தவர்களைப் பார்த்து பொடியன் தப்ப முயற்சித்தான் என்றனர்.

"தப்பவாடா முயற்சிக்கிறாய்... நாயே.... "

தூஷணங்கள் பறந்தன. கொண்டு வந்திருந்த பெரிய பொல்லுகளால் அடித்தனர். மண்டையிலும், முதுகிலும் கால்களிலுமாக, க்ண்மண் தெரியாமல் அடித்தனர். இழுத்துக் கொண்டே மேல்மாடிக்குச் சென்றனர். கீழே சுரேஷின் தாயார், ஏனைய மகள்மார் அனைவரையும் எங்கும் நகராமல் ஒரே இடத்தில் ஒன்றாக அமர்ந்திருக்குமாறு மிரட்டினர். மோசமான தூஷண வார்த்தைகளால் திட்டித் தீர்த்தனர். மேலிருந்து மரண வேதனையால் அலறும் சத்தத்தைக் கேட்ட தாயார், தங்கைமார் கதறத் தொடங்கினர். வீட்டிலுள்ள அனைத்துப் பொருட்களும் கிளறி எறியப்பட்டன.

இதே வேளை இன்னொரு பிரிவு குணாவின் மனைவி ரட்னேஸ்வரியை மிரட்டி குணாவின் வீட்டைக் காட்டும்படி கூட்டிக்கொண்டு வந்தது. அங்கு வந்த போது தான் ரட்னேஸ்வரிக்கு (குணாவின் மனைவி) அங்கு நடக்கும் பயங்கரம் தெரிந்தது. வீட்டுக்குள் வந்தவுடன் ஒருவன் இவள் தான் குணாவின் மனைவி என்றான். இன்னொருவன் பளீர் எனக் கன்னத்தில் அறைந்தான். இன்னொருவன் தலைமுடியைப் பிடித்து இழுத்து மீண்டும் முகத்தில் குத்தினான். தூஷணங்களால் திட்டினான். சுவரில் தலையை பல தடவை இழுத்து முட்டினர். மேல் மாடிக்கு இழுத்துச் சென்று அங்கு சுரேஷைப் படுத்தும் கொடுமையைக் காட்டி "எங்கே குணா...? சுரேஷ் நேற்று கொண்டு வந்த பார்சல் எங்கே...?" எனக் கேட்டு மிரட்டினர். சுரேஷை ஒரு கதிரையின் கீழ் குனிய வைத்து பொல்லொன்றினால் முதுகில் அடித்தனர். பூட்ஸ் காலால் மிதித்து நொறுக்கினர்.

---------------0---------------

இதே வேளை இன்னொரு பிரிவு மேலும் ஒரு சிங்கள வீட்டுக்குள் புகுந்தனர். அந்த வீட்டில் கண்ணில்பட்டவர்களையெல்லாம் கண்மன் தெரியாமல் தாக்கினர். தூங்கிக் கொண்டிருந்தவர்களை நித்திரையில் எழுப்பிப் பெண்களுக்கும் அடித்தனர். "எங்கே குணா...? தூள் மறைத்து வைத்திருப்பது எங்கே...?" என்று கேட்டு அந்த வீட்டிலுள்ள ஒரு அறைக்குச் சென்று அவ்வீட்டைச் சேர்ந்த குணவத்[illegible] முதுகிலும் தொடையிலுமாக பூட்ஸாலும் பொல்லாலும் தாக்கினர். அந்த அறையிலிருந்த எல்லாவற்றையும் கிளறி எறிந்தனர். ஒருவன் விசாரிக்கும் தொனியில் அந்தப் பெண்மணியின் கவனத்தைத் திசை திருப்ப இன்னொருவன் அந்த அலுமாரியிலிருந்து எடுத்ததாகக் கூறி ஒரு பார்சலைக் காட்டி "இது என்ன?" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியாது...."

"உனக்குத் தெரியாமல் எப்படி வந்தது...."

"இது வரைக்கும் அப்படியொன்றும் இருக்கவில்லை..."

"இந்த அலுமாயின் சாவி யாரிடம் உள்ளது?"

"என்னிடம் மட்டும் தான் உள்ளது..."

"அப்படியென்றால் உனக்குத் தெரியாமல் எப்படி இங்கு இது வந்தது.?

"அதனால் தான் கூறுகிறேன் நான் அறியாமல் இது வந்திருக்க நியாயமில்லை. இதுவரை அப்படியொன்றும் இருக்கவில்லை...."

"கன்னத்தில் பளீர் என அறை விழுந்தது..."

அந்தத் தாயார் "இது அபாண்டமானது. இது என்னவென்றே எனக்குத் தெரியாது. எப்படி வந்ததென்றும் எனக்குத் தெரியாது..." எனக் கதறினார்.

"ஏறு ஜீப்பில் ஏறு..."

"ஐயா உண்மையில் இதில் என்னவோ நடக்கிறது எனக்குத் தெரியாது, ஒன்றுமே தெரியாது" என்று கதறியிருக்கிறார்.

வெளியே வந்த அவர்கள் அந்தப் பார்சலைப் பிரித்துக் காட்டி இது என்னவென்று தெரியுமா? "புகைக் குண்டு" இரண்டு உள்ளது.

அந்தத் தாய் கதறியழுத போது ஒருவன் அவளை விட்டுவிட்டு வா அவனைப் பார்ப்போம் என்று கூறி சுரேஸைப் பார்க்கப் போனார்கள்.

---------------

சுரேஸின் வீட்டிலிருந்து ஏறத்தாழ 30 மீற்றர் தூரத்தில் உள்ள சுரேஸின் துணிக் கடையினருகில் இழுத்துக் கொண்டு வந்து கிடத்தியிருந்தனர். அப்போது விடிந்திருந்தது. ஆனாலும் அங்கு குடியிருப்பவர்களுக்கோ அதற்கு [illegible] விடிந்திருந்தது.

சுரேஸைக் கிடத்தியிருந்த இடத்தைச் சூழ்ந்து அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் குழுமியிருந்தனர். சுரேஷின் கடைக்குள் இழுத்துச் சென்று அடித்து அடித்து மறைத்து வைத்திருக்கும் பொருட்களை காட்டும்படி அதட்டி அங்கிருந்த பொருட்களையெல்லாம் இழுத்துப் போட்டிருக்கின்றனர். மிரட்டுவதற்காக அங்கிருந்த கதிரை, கண்ணாடிகள் என்பவற்றை உடைத்துவிட்டிருந்தனர். அங்கும் ஒன்றும் கிடைக்காத போது தான் வெளியில் கொண்டு வந்து கிடத்தியிருந்தனர்.

உடல் முழுவதும் காயங்களுக்கட்டு, இரத்தம் கசிந்து அரை மயக்க நிலையில் கைகள் விலங்கிடப்பட்டு, மண்டியிட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்த சுரேஷை மேலும் மேலும் சித்திரவதை செய்ததைப் பார்க்கப் பொறுக்காத அப்பகுதிவாசிகள் கையாலாகாத நிலையில் முகம் சுளித்தனர். சிலர் வாய்விட்டே ஏன் இந்த கொடுமை புரிகிறீர்கள் என்று மெதுவாகக் கேட்டே விட்டார்கள். அவர்கள் தூஷணத்தால் திட்டப்பட்டனர். சிலர் அடித்து விரட்டப்பட்டனர்.

குணாவின் அண்ணா "விஜே"வின் வீட்டுக்கும் போய் அங்கும் கலாட்டா செய்து அவரது மனைவி பூங்கொடியையும் தாக்குவதற்காக ஒருவன் துப்பாக்கியை இரண்டாக முறித்த போது கையில் வெட்டுக் காயம்பட்டதும் விஜேவின் மனைவியே இரத்தத்தை நிறுத்தவும் உதவி புரிந்துள்ளார்.

விடியற் காலையில் வேலைக்கு போகவென்று வெளியில் வந்த ஒரு முஸ்லிம் இளைஞரைப் பார்த்த வந்தவர்களில் ஒருவன் ஏதோ ஒருவன் ஓடுகிறான் என்று கத்தவே அந்த இளைஞனும் பயத்தில் ஓடத் தொடங்கியிருக்கிறார். அவ்விளைஞனை விரட்டிப் பிடித்து அடி அடியென அடித்து அவரது வீட்டுக்கு இழுத்துச் சென்று அங்கிருந்த அவரது தாயார் பௌஸியா இனாயாவை பொல்லுகளால் தாக்கியுள்ளனர். அவரது தங்கை பாத்திமா லத்தீபாவை ஓங்கி அறைந்ததில் இன்னமும் ஒரு காது கேட்கவில்லை எனத் தெரிந்தது.

→19

## கொழும்பின் தமிழ் பாதாள உலகம்?

'பாதாள உலகம்"

இந்தப் பேரைக் கேட்டவுடன் அரசியல்வாதிகள் தொடக்கம் பொலிஸ், படையினர் உள்ளிட்டு சாதாரண மக்கள் வரை யாவரும் பதட்டத்துக்கும் சலசலப்புக்கும் உள்ளாவது புதிய விடயமல்ல.

சொத்தி உப்பாலி தேடப்பட்டது, கைது செய்யப்பட்டது, வாக்குமூலம் விசாரணை நடந்தது என்பவற்றைத் தொடர்ந்து வெளிவந்த தகவல்கள் பாதாள உலகம் பற்றிய பீதி வலுப்பட காரணமாயின எனலாம்.

கொலை, கொள்ளை, சட்டவிரோத வியாபாரங்கள் (போதைவஸ்துக்கள், ஆயுதங்கள்...) கொன்ரக்டுகள் என்பவற்றை செய்து வரும் பேட்டை ரவுடிகள் அடங்கிய கும்பல்களாகத் தான் இவர்கள் இது வரை அடையாளம் காட்டப்பட்டு வருகிறார்கள்.

ஆனால் இவர்களின் சமூகப் பின்னணி சட்டவிரோதச் செயலுக்கு தள்ளிய சமூகக் காரணிகள், அதனை இருப்பாக்கிக் கொள்ள நிர்ப்பந்தித்த ஏனைய சமூக, பொருளாதார, அரசியல் விளைவுகள் என்வற்றை விளிம்பு நிலை வாழ்வியல் நோக்கில் இருந்து அலசப்படுமானால், இந்தப் "பயங்கர ரவுடி"களின் இன்னொரு பக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும். இத்தகைய ஒரு அலசலுக்கான தேவை இருந்து கொண்டே இருக்கிறது.

சமீப காலமாக கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் இயங்கி வருகின்ற தமிழ் பாதாள உலகத்தினர் குறித்து தேசிய புலனாய்வுப்பிரிவு அதிக கவனம் எடுத்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. அதற்கான பிரதான காரணம் புலிகள் இயக்கத்துக்கும் இந்த தமிழ் பாதாள உலகத்தக்கும் இடையில் தொடர்பு நிலவுவதாக சந்தேகம் கொண்டிருப்பதே. இன்னொரு பக்கம் இந்த பாதாள உலகக் கோஷ்டியினரை வேட்டையாடவும் இந்தப் பழிசுமத்தல் சிறந்த சாட்டு என்பதையும் கவனம் கொள்ள வேண்டும்.

தமிழ் நாடு பகுதி "தெல் பாலா" (தமிழ் மக்கள் பெரும்பாலும் வாழ்ந்து வரும் களனி புதிய பாலத்தை அண்டியுள்ள இப்பகுதியை தமிழ் நாடு என்ற பெயரை கொண்டழைக்கப்படுவதற்காக இவர் ஒரு விழாவையே நடத்தியிருந்தாராம். துறைமுகத்திலிருந்து பாரிய குழாய்களினூடாக எண்ணெய் குதங்களுக்கு அனுப்பப்படும் எண்ணெயை இடையிலேயே லாவகமாக திருடியெடுப்பதில் பலே கில்லாடி என்பதால் இந்த "தெல்" (எண்ணெய்) பாலா என்ற பெயர் வந்ததாகக் கதை).

·கிம்புலா எல (முதலை ஏரி) குணா சகோதரர்கள்.

ஆமைத்தோட்டம் (இப்பா வத்தை) ஜோசா- சகோதரர்கள் (இவர்களில் ஜோசா, மோஸஸ் ஆகிய சகோதரர்கள் ஒரு வருடத்துக்கு முன்னர் நவகம்புரவில் வைத்து அவர்களுடன் நெருக்காக இருந்தவர்களாலேயே வியாபார போட்டியினால் கொல்லப்பட்டனர். அதன் பின்னர். அவரது ஆட்கள் ஆமைத்தோட்டப்பகுதியை நடத்தி வருகிறார்கள்.).

ஜிந்துப்பிட்டி அன்ரனி (இவர் கொல்லப்பட்டு விட்டார்.), கன்னாரத் தெரு உத்தமன், நெல்சன், கன்னாரத் தெரு கனகு (இவர் கடந்த ஒரு வருடத்துக்கு முன் அதே பகுதியைச் சேர்ந்த களு மாத்தையா என்பவரால் கொல்லப்படவே களு மாத்தயாவை இவரது ஆட்கள் கொன்று போட்டார்கள். அதன் பின்னர் கனகுவின் ஆட்கள் தொடர்ந்து தலைமை தாங்குகிறார்கள்).

கொம்பனி வீதி டேலு (இவருடைய சொந்தப் பெயர் தர்மராஜா. இவர் மூன்று வருடங்களுக்கு முன்னர் தனது மனைவியின் ஏவுதலில் திட்டமிட்டு கொல்லப்பட்டார். பின்னர் மனைவி கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் போது டேலுவின் ஆட்களால் அந்தரங்க உறுப்பில் கத்தியால் குத்தப்பட்டு படுகாயமடைந்து உயிர் தப்பினார். டேலுவுக்குப்பின்னர் அவரது ஆட்களுக்கும் அவரது எதிரிகளுக்கும் இடையிலான போட்டிகளின் மத்தியில் அந்தப் பகுதி நிர்வகிக்கப்பட்டு வருகிறது.)

சமீப காலமாக இப்படியான கோஷ்டிகளின் வலுவிழப்புகள், அழிப்புகள், என்பவற்றை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இதற்கான காரணங்களில் முக்கியமானது இந்த புலி முத்திரை என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு தமிழ் இளைஞன் துப்பாக்கி வைத்திருப்பதனாலும் சிங்கள இளைஞன் துப்பாக்கி வைத்திருப்பதனாலும் ஏற்படும் விளைவுகள் இங்கு வெவ்வாறானவை என்பதை கருத்திற் கொள்ள வேண்டும்.

இவ்வகையான கோஷ்டிகளில் பெருமளவிலான கோஷ்டிகளுக்கு தலைமை தாங்குபவர்களும் அதில் உள்ளவர்களும் குறைந்த வயதையுடைய இளம் பரம்பரையினர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏறத்தாழ 16 வயது தொடக்கம் 30 வயதுக்கிடையிலேயே பெருமளவான தலைமைகள் இருப்பது கவனிக்கத்தக்கது. எனவே தான் "புலி முத்திரை" என்பது தமிழ் பாதாள உலக கோஷ்டியினரை நேரடியாகப் பாதிக்கின்ற விசேட காரணியாக இருக்கிறது.

அரசியல் சக்திகள் இவர்களை தங்களின் குண்டர்களாகவும், அடாவடித்தனங்களில் ஈடுபடுத்துவதற்கும் பயன்படுத்துவதும் சர்வசாதாரணமாக நடக்கும் ஒன்றாகும்.

பொதுவாக ஒடுக்கப்பட்ட சமூகப்பிரிவுகளைச் சேர்ந்த சேரிப்புற மக்களின் மத்தியிலிருந்து வெளிப்படுகின்ற இவ்வகையான பாதாள உலகத் தரப்பினர் இயல்பாகவே முரட்டுத்தனமிக்கவர்களாக இருப்பது வழக்கம். போதைவஸ்துப் பிரயோகம்-வியாபாரம், வன்முறை நடவடிக்கைகள் என்பவற்றிற்கு அவர்கள் தான் பொறுப்பு என்ற முடிவுக்கு வருவோமாயின் அதனைத் தீர்ப்பதற்கும் அவர்களை களையெடுப்பது என்ற முடிவுக்கு வர நேரிடும். அதனைத் தான் அதிகாரம் படைத்த சக்திகள் செய்து வருகின்றன. ஆனால் மாறாக ஆளும் வர்க்கத்தினரால், (இதனை ஆதிக்க சாதியினரால், ஆதிக்க இனத்தவரால் என்று இன்றைய சூழலில் பார்க்க நேரிடுகிறது) அறிவியல் மறுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்கள் மீது திணிக்கப்பட்ட வாழ்க்கையாக இது இருக்கிறது என்பதை அடையாளம் கண்டால் மாத்திரமே இதனை களைய சமூக மாற்றமே அவசியமென்கிற முடிவுக்கு வர முடியும்.

உண்மையில் இந்த விளிம்பு நிலை மக்கள் மத்தியிலுள்ள இளைஞர்கள் பாதாள உலகுக்கு வேண்டுமென்றே தள்ளப்படுபவர்கள். அவர்களைக் கருவிகளாகப் பயன்படுத்த விரும்பும் 'பெரியவர்களால்' இயக்கப்படுபவர்கள். இவர்கள் மீதான வேட்டைகளின் போது இந்தப் பிரிவுகள் மாட்டிக்கொள்வதே இல்லை.

## குணா சந்திப்பு

அன்று இரவு தொலைபேசி அழைப்பொன்று வீட்டுக்கு வந்தது.

"உங்களை குணா சந்திக்க விரும்புகிறார்.."

"எப்படி தொலைபேசி இலக்கம் கிடைத்தது..? எதற்காக அழைக்கிறீர்கள்...?"

"பத்திரிகைக்கான செய்தியொன்று குறித்து பேச விரும்புகிறோம்...."

"நான் இன்னாருடன் அரை மணி நேரத்தில் வந்து சேருகிறேன் காத்திருங்கள்..."

கிம்புல எலவில் அந்த வீட்டுக்கு சென்றோம் ஒருவர் வந்து எம்மோடு முன்னை நாள் நடந்த பொலிஸ் அடாவடித்தனங்களைச் சுருக்கமாக விளக்கிவிட்டு அது குறித்தே குணா எங்களுடன் பேச விரும்புவதாகவும் அழைத்து வரவா என்றும் கேட்டார்.

அழையுங்கள் பேசுவோம் என்றேன். அவர் திரும்பிச் சென்றார். வெளியே எட்டிப்பார்த்த போது ஆங்காங்கு அவரது ஆட்கள் சர்வசாதாரணமாக உளாவிய போதும் அவர்களின் எச்சரிக்கை கண்ணோட்டம் பார்வை என்பன பாதுகாப்பு 'சென்றி'க்காக இருப்பதை விளக்கியது.

கறுத்த, உடல் பருத்த, மிகவும் திடகாத்திரமான ஒரு விளையாட்டு வீரரைப் போல வந்து அமர்ந்தார் அந்த இளைஞர். விளையாட்டு சீருடையிலேயே இருந்தார்.

அவருடன் வீட்டுக்குள்ளே சில இளைஞர்கள் சுற்றி இருந்த அதே நேரம் வெளியிலும் 'சென்றி'க்கு நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

"நாங்கள் திருந்தி வாழவே முயற்சிக்கிறோம் ஆனால் விடுகிறார்கள் இல்லை.... நாங்கள் ஒரு காலத்தில் சில தீய செயல்களில் ஈடுபட்டோம் என்பதை மறுக்கவில்லை. ஆனால் இன்று நாங்கள் திருந்தி வாழ முயல்கிறோம். இந்தப் பகுதி இளைஞர்களை வீணாக கைது செய்வது, சித்திரவதை செய்வது எல்லாம் சர்வ சாதாரணமாகவே நடந்து வருகிறது. இதற்கு முன்னரும் என்னிடமிருந்து ஆயுதங்களைக் கண்டெடுத்ததாகச் சோடித்து என்னைக் கைது செய்தனர். ஆனால் அது நிரூபணமாகாத நிலையில் நான் விடுவிக்கப்பட்டேன். என்னையும் என்னைச் சார்ந்தவர்களையும் எப்படியேனும் சிக்கலில் மாட்டிவிட முயற்சிக்கிறார்கள். அது பலிக்காது போகவே, வேண்டுமென்றே திட்டமிட்டு சோடித்து எம்மீது குற்றம் சுமத்துகிறார்கள்... தம்பியையும் கூட கைது செய்தது திட்டமிடப்பட்ட ஒன்றே. இன்று பழைய தொழில்களை எல்லாம் கைவிட்டு விட்டு ஒதுங்கியிருக்கிறோம்..."

அப்படியென்றால் இன்றைய வருமானத்துக்கு என்ன செய்கிறீர்கள்?

டெக்ஸ்டைல் வைத்திருக்கிறோம். மீன்கடையில் எங்களுக்கென்று சில 'தட்டுகள்' சொந்தமாக இருக்கின்றன. இந்தியா, சிங்கப்பூர் பொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்கிறோம்....

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அரை மணி நேரமாகிவிட்டிருந்தது. "இந்த இடத்தில் நான் பல நிமிடங்கள் இருக்க முடியாது. நிலைமை தெரியும் தானே. இன்று இத்துடன் முடித்துக் கொள்வோம். நாளை என்னை சந்திக்க முடியுமா...?"

"மத்தியானத்துக்குப் பிறகு சந்திக்கலாம்.."

"சரி, என்னை சந்திக்க முடியாமல் போனாலும் இவர்களைச் சந்திக்கலாம். இங்கு வந்து ஏனையோரை சந்தித்து விபநம் எடுக்கலாம். இவர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள்...."

மிகுந்த எச்சரிக்கையுடன் ஒரு தலைமறைவு கட்சியினைதைப் போல மிகுந்த தேர்ச்சி வாய்ந்த பாதுகாப்பு ஒழுங்கமைப்புகளைக் காண முடிந்த போது ஆச்சரியமாகத் தான் இருந்தது. குணா இருந்தால் அந்த இடத்தைச் சுற்றி பல ஒழுங்கைகளுக்குள்ளும் கண்காணிப்பு சென்றிகள், ஒரே இடத்தில் பல நேரம் இருக்காமை, அடுத்த இடத்தை நோக்கி உடனே மாறுவது என மிகுந்த எச்சரிக்கைகளை கையாண்டு வருகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேல் எவ்வித பேதமுமின்றி இளைஞர்கள் ஐக்கியமாக இருக்கிறார்கள்.

அடுத்த நாள் குறிப்பிட்ட் நேரத்தில் குணாவை சந்தித்தோம். அப்போது குடியிருப்புகளின் மூலைக்கும் அகண்ட சேற்றுக் குழிக்கும் இடையில் மூங்கிலால் வேயப்பட்ட ஒரு குடிலில் சந்தித்தோம். அங்கு அவரது நண்பர் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் இம்தியாசும் கூட இருந்தார்.

"நீங்கள் எழுதும் போது இப்படி எழுதுங்கள்.." என்று அவர் தொடக்கினார்.

"கொஞ்சம் பொறுங்கள் இது எப்படி எழுதப்பட வேண்டும் என்பதை நாங்கள் தான் தீர்மானிக்க முடியும். எங்களுக்கு ஏற்கெனவே இந்தப்பகுதி குறித்தும், உங்களைக் குறித்தும் செய்திகள் இருக்கின்றன. குறிப்பிட்ட இந்தச் சம்பவம் தொடர்பாகவும் நாங்கள் இது வரை பெற்ற தகவல்களை மைப்படுத்தித் தான் நாங்கள் எதனை எழுத வேண்டும், எதனை தவிர்க்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவோம். மற்றபடி உங்களுக்கு சாதகமாக எழுதப்படும் என்ற எதிர்பார்ப்பு உங்களுக்கு இருக்கக் கூடாது என்றேன்.

"இடையில் குறிக்கிட்ட குணா நீங்கள் உண்மை எதுவோ அதனை எழுதினால் போதும். சில பத்திரிகைகள் எங்களைப் பற்றிய மிகவும் பிழையான ஆபத்தான பழிசுமத்தல்களையும், பொய்க் குற்றச்சாட்டுக்களையும் சுமத்துவது குறித்த எச்சரிக்கை எங்களுக்குண்டு..." என்றார்.

இதன் பின்னணியில் அரசியல் காரணிகளும் தொழிற்படுவ்தாகக் கருதுகிறீர்களா?

இருக்கக் கூடும். நாங்கள் இந்தப்பகுதியில் பாரத்த லக்ஷ்மன் பிரேமச்சந்திரவுக்கு ஆதரவு அளித்து வருகிறோம். அதனை விரும்பாத சில அக்கட்சியைச் சேர்ந்த சக்திகளே எங்களை வேட்டையாடத் தூண்டி வருகின்றன.

முன்னர் ஐ.தே.க.வுக்கு ஆதரவு அளித்து வந்தீர்களே! ஏன் பின்னர் பொ.ஐ.மு.வுக்கு ஆதரவை மாற்றிக் கொண்டீர்கள்?

எங்களைப் பொறுத்தவரை இருப்பு முக்கியம். கட்சியல்ல முக்கியம். ஆளுங்கட்சி என்பது.தான் முக்கியம். இல்லாவிட்டால் சுலபமாக வேட்டையாடப்பட்டு விடுவோம். பாதுகாப்பு எல்லாவற்றையும் விட முக்கியம்.

பொலிஸார், படையினர் சுற்றி வளைக்கின்ற போது பல இளைஞர்கள் ஓட்டம்பிடிப்பது ஏன்? அது குற்றம் உள்ளதையல்லவா வெளிப்படுத்தும்?

எப்படி ஓடாமல் இருக்க முடியும்? அவர்கள் ஒருவரைக் கைது செய்வதற்கு ஆதாரம் தேவையில்லை. அடிப்பதற்குக் காரணம் கூறுவதில்லை. வந்த வேகத்தில் தாக்குதல் நடக்கும். எந்தவிதத்திலும் கேள்வி கேட்க சந்தர்ப்பம் இருக்காது. அவர்களும் தாங்கள் யார் எங்கிருந்து வருகிறார்கள் என்பதைக் கூறுவதில்லை. ஏதாவது ஆதாரமற்ற பழியைச் சுமத்துவார்கள் கொண்டு போய்விடுவார்கள். பின்னர் எதையாவது கண்டுபிடித்ததாகக் கூறுவார்கள் உண்மையில் கண்டு பிடித்திருக்கமாட்டார்கள். இந்த நிலைமையில் தப்பிப் போவதைத் தவிர வேறு வழியில்லை. இது இந்தப் பகுதி இளைஞர்களுக்கு பொதுவாக உள்ள பிரச்சினை.

எனது தம்பி சுரேஸைக் கூட அப்படித் தான் செய்தார்கள். மிரட்டினார்கள், சித்திரவதை செய்தார்கள். எதனையும் கண்டு எடுக்க முடியாமல் போனது. ஆதாரமெதுவும் கிடைக்கவில்லை. ஆனால் தம்பிக்கு தொடர்பே இல்லாத ஒரு வீட்டிலிருந்து எதையோ எடுத்துவிட்டு, அது புகைக்குண்டென்று கூறுகின்ற அதே வேளை அதனை சுரேஸோடு தொடர்பு படுத்திவிட்டிருக்கின்றனர். வேறு ஒரு வீட்டிலிருந்து ஹெரோயின் கண்டெடுத்ததாகவும் இப்போது கூறுகின்றனர். இந்தப்பழிகளையெல்லாம் சுரேசின் மீது சுமத்திவிட்டுள்ளனர். உண்மையிலேயே வேறெங்கிருந்தோ கண்டெடுத்ததாக இருந்தாலும் அதனை சுரேசுடன் தொடர்புபடுத்துவது வேடிக்கை. இதை விட ஆச்சரியம் என்னவென்றால் எங்கிருந்து குண்டு கண்டெடுத்ததாக கூறுகிறார்களோ அந்த வீட்டைச் சேர்ந்த எவரும் கைது செய்யப்படவில்லை. எந்தவித வாக்குமூலமும் எடுக்கப்படவுமில்லை. திட்டமிட்டவேலை என்பது தெரிய இதைவிட வேறென்ன வேண்டும்.

நீங்கள் தற்போது என்ன நடவடிக்கை எடுத்து வருகிறீர்கள்? என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

நாங்கள் திருந்தி வாழ முயற்சிக்கிறோம். நாங்கள் மீண்டும், மீண்டும் பீதியுடன் வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறோம். சுரேஷ் கடும் சித்திரவதையை அனுபவித்திருக்கிறான். பிணையில் விட்டால் நாங்கள் தகுந்த வைத்தியரிடம் காட்டி வைத்திய அறிக்கை பெற்று சித்திரவதை செய்யப்பட்டதை நிரூபித்துவிடுவோம் என்று 7 நாட்களுக்கு டி.ஓ போட்டுவிட்டார்கள். நிம்மதியாக எங்களை வாழவிட மாட்டார்கள் எனின் வேறென்ன பண்ணமுடியும்?"

என்கிறார் குணா.

இந்த சந்திப்பின் முடிவில் அவரைப் புகைப்படம் எடுக்க முயன்ற போது அவர் அதனை தவிர்த்தார். குணா என்றால் மட்டும் தான் வெளியில் தெரியும். முகம் தெரியாது பலருக்கு நீங்கள் என்னை வெளிப்படுத்தி விடுவீர்கள் போலிருக்கிறது என்றார்.

அவரது எச்சரிக்கை உணர்வு எவ்வளவு தீவிரமானது என்பதை உணர்ந்து கொண்டேன்.

## நடந்தது இதுதான் !

**ஏ.ரட்னேஸ்வரி (26) (குணாவின் மனைவி)**



சுரேஷைப் பார்க்கச் சென்ற போது பொலிஸார் எங்களை சகிக்க முடியாத தூஷன வார்த்தைகளால் திட்டினர். இல்லாத ஒரு குற்றத்தை சுமத்தி இத்தனை கொடுமைகளை செய்ததுமல்லாமல், தொடர்ந்தும் இம்சிக்க இவர்கள் ஏன் தயங்குவதேயில்லை? சரி, குற்றம் இருந்திருந்தாலும் எங்களை தூஷனத்தால் திட்ட இவர்களுக்கு யார் அதிகாரம் வழங்கியது? இது வரை என்ன குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்பது எங்களுக்குத் தெரியாது. சுரேஷைப் பார்க்கப் போன போது தவழ்ந்து தான் வந்தார். சீருடை அணிந்து விட்டால் அவர்களுக்கு எதுவும் செய்து விட முடியுமா? அவர்கள் யார் எங்கிருந்து வருகிறார்கள் என்றும் தெரிவிப்பதில்லை. நாங்கள் யார் என்று கேட்கவும் சந்தர்ப்பம் தருவதில்லை. நாளை இதே போல சிவிலில் எவராவது வந்து எங்கள் வீட்டுப் பெண்களை நாசம் செய்து விட்டுப் போனாலும் வாயைப் பொத்திக் கொண்டு தான் இருக்க வேண்டுமா? சுரேஷின் கடையில் அன்று இருந்த ஏறத்தாழ 12 ஆயிரம் ரூபாவுக்கு என்ன நடந்தது என்று தெரியாது.

**பேர்னாட் பெரேரா**



நான் வேலைக்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போது என்னைப் பிடித்து "இங்கே வா... வா... நீ தான் விஜேவின் ஆள் எங்கே சமானை எடு என்று அடித்து இழுத்து வந்தனர். சுரேஷின் கடையில் வைத்து என்னை பூட்ஸால் மிதித்து காயப்படுத்தினர். என்னைப் பயமுறுத்துவதற்காக அருகிலிருந்த கதிரையை உடைத்தனர். சில வேளை அதனருகில் இருந்த கண்ணாடியை உடைத்திருந்தால் நான் நிச்சயமாக அதாலேயே குத்திக்கொண்டு செத்திருப்பேன்.

**குணவத்தி**



கதவைத் தட்டி எழுப்பி சமானை எடு என்றனர். "எந்த சமானை" என்று கேட்டபோது நாயே உன்னைக் கொல்வேன், குணாவின் சாமானை எடு அல்லது நாங்களே சாமானைப் போடுவோம் என்றனர். குணாவுடன் எங்களுக்கு எந்த தொடர்புமில்லை என்றேன். குணாவைக் காட்டு என்றும் கேட்டு எங்களைத் தாக்கினர். மற்ற அறைக்குச் சென்று என்னுடன் பேசிக் கொண்டே எனது அலுமாரியிலிருந்து எதையோ எடுத்து அதிலிருந்து தான் எடுத்ததாக கூறினர். என்னை அடித்தனர். வீட்டிலிருந்த எல்லோரையும் தாக்கினார்கள்.

**பூங்கொடி (30) (விஜேவின் மனைவி)**



திடுதிப்பென்று வந்து விஜே எங்கே என்று கேட்டு மிரட்டினர். எனக்கு அடிக்கவென்று உடைத்த தடி அவனின் கையையே கிழித்தது. கெட்ட தூஷனத்தால் திட்டினர். இன்னுமொரு பொடியனை எங்கள் முன் அடித்து நொருக்கினார்கள். எங்களை அடித்திருப்பார்கள் கை காயப்பட்ட நிலையில் திரும்பிப் போய் விட்டனர்.

**பாத்திமா லத்தீபா (19)**




எங்கள் மாமாவின் மகன் வியாபாரத்துக்குப் போவதற்கு வெளியில் வந்தபோது பிடித்து அடித்து இழுத்துக் கொண்டு வீட்டுக்கு கொண்டு வந்தனர். அங்கு இருந்த எங்கள் அம்மா, தாத்தா, மாமா, எல்லோருக்கும் அடித்தனர். எனக்கு அடித்ததில் இன்னமும் ஒரு காது கேட்கவில்லை. அடுத்த நாள் நாங்கள் முகத்துவாரப் பொலிஸில் முறையீடு செய்தோம். மாமாவின் மகனிடம் இருந்த 4000 ரூபாவையும் பறித்துக் கொண்டனர்.

**பௌசில் இனாயா (53)**



விடியற்காலை பள்ளியில் பாங்கு சொல்லுகின்ற வேளை தொழுகைக்கு எழுந்து கைகால் கைகழுவ வெளியே சென்ற போது சத்தம் கேட்டது. அப்போது எங்கள் பொடியனை வாசலில் போட்டு அடித்தனர். என்னையும் விரட்டி வந்து பொல்லால் அடித்தனர். வீடு புகுந்து வீட்டிலுள்ளவர்கள் அனைவரையுதம் தாக்கினர். கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்திருக்கிறோம்.




## கிம்புல எலவின் பின்னணி

ஆமைத் தோட்டப் பகுதியில் ஒரு பாரிய சேரிப்புற குடியிருப்பொன்று இருந்தது. அந்தப் பகுதியில் விளிம்பு நிலை மக்களுக்கேயுரிய முரட்டுத்தனம் வாய்ந்த லும்பன்கள், சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் என்போரின் செயல்கள் எல்லாம் இருக்கவே செய்தன. பெரும்பாலானவர்களின் தொழில் கூலித் தொழில், மீன்கடையில் மீன்வியாபாரம் செய்தல், அங்கிருந்த சதுப்பு நிலத்தில் கீரை பறித்தல் போன்ற இன்னோரன்ன தொழில்களையும் அவர்கள் செய்து வந்தார்கள்.

துறைமுகத்திற்கு அருகாமையிலிருந்த இந்த பகுதிக்கூடாக துறைமுகத்திலிருந்து செல்லக்கூடிய ஒரு பாதையை இந்த வழியாகத் திறக்க அரசுக்கு வெளிநாட்டு நிதியுதவி கிடைத்தது. இதனைக் கொண்டு அந்தக் குடியிருப்பை எட்டு வருடங்களுக்கு முன்பு அவ்விடத்திலிருந்து, அகற்றி, மாதம்பிட்டி கனத்தைக்கருகில் இருந்த கிம்புல எல எனும் சேற்று நிலத்தை மண் போட்டு நிரப்பி அங்கு குடியேற்றினார்கள். அக்குடியிருப்புக்கு வசதிகளைச் செய்து கொடுக்கும் பொறுப்பையும் வெளிநாடொன்றே ஏற்றுக் கொண்டிருந்தது.

இன்று முன்னர் இருந்த குடிசைகள் போய் ஓரளவு கல்லால் கட்டப்பட்ட வீடுகள் தோன்றியுள்ளன. முன்னர் இருந்த நிலையோடு ஒப்பிடுகையில் ஓரளவு வசதிகளை அனுபவிக்கக் கூடியவர்களாக அங்குள்ளவர்கள் இப்போது உள்ளனர். ஆனால் முன்னிருந்த விளிம்பு நிலைக் கலாசார நடத்தைகளில் பெரிய மாற்றம் எதுவும் இல்லை.

கிம்புல எலவுக்குச் செல்வதற்கான பிரதான வாசல் மாதம்பிட்டிய வீதியின் பக்கத்திலிருந்து தொடங்குகிறது. வலதுபுற எல்லையாக புளூமென்டல் வீதியும், இடதுபுற எல்லையாக மாவத்தை வீதியும், பின்புற எல்லையாக துறைமுகத்துக்கான ரயில் பாதையும் இருக்கிறது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆகிய மூவினங்களையும் சேர்ந்த ஏறத்தாழ 800க்குக் குறையாத வீடுகள் இந்தப் பகுதியில் இருக்கின்றன. அதில் ஏறத்தாழ 70 வீதமளவில் தமிழர்கள் எனக் கூறப்படுகிறது. அவர்கள் எல்லோரும் (விதிவிலக்குகளைத் தவிர) ஒடுக்கப்பட்ட சாதிய சமூகங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இப்படிப்பட்ட சமூகப் பின்னணியைக் கொண்டவர் தான் குணா. குணாவுக்கு இரண்டு சகோதரர்கள் ஆறு சகோதரிகள். அந்தப் பகுதிக்கு வெளியிடங்களிலிருந்து வந்த சில சண்டைகளை குணா சகோதரர்கள் முகம் கொடுத்து முறியடிக்கத் தொடங்கினார்கள். சில சட்டவிரோத பண சம்பாதிப்புகளில் ஈடுபடத் தொடங்கினார்கள். எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாக்கவெனக் "கருவிகள்" சேகரிப்பு ஆதரவாளர்களைப் பராமரிக்க பணம் சம்பாதித்தல் என்பனவற்றை மேற்கொள்ளத் தொடங்கினர்.

*"குணா ஒரு போதும் பணத்துக்காக கொந்தராத்து" செய்ததில்லை. சில சந்தர்ப்ப சூழ்நிலைகள் இவர்களை இந்தச் சூழ்நிலைக்குத் தள்ளியுள்ளது. ஆனால் ஏனையோர் கூறுவது போல பாதாள உலகம் என்று கூறப்படுகின்ற அதே நோக்கில் இவர்களைப் பார்க்க முடியாது. நான் இவர்களுடன் சிறு வயதிலிருந்தே பழகி வருகிறேன் குணா நல்ல உதைப்பந்தாட்ட வீரர். அவரது முயற்சியால் இன்று சகல சமூகங்களையும் சேர்ந்தவர்கள் விளையாட நல்ல ஒரு விளையாட்டரங்கு உள்ளது."* என்கிறார் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மொஹமட் இம்தியாஸ்

அந்தப் பகுதி வாசிகளின் பிரச்சினைகளை (குடும்பத் தகராறுகளையும் கூட) தலையிட்டுத் தீர்க்கும் வேலைகளையும் செய்யத் தொடங்கினர். அந்தப் பகுதியையே தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். சிங்கள, தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் இவரின் அபிமானத்துக்குரிய ஆதரவாளர்களாக ஆயினர். *"திருடர்கள் உள்ள ஏரியா என சொல்லப்படும் இங்கு ஒரு சாரத்தை எந்த வித களவுப்பயமுமின்றி வெளியே காயப் போடலாம். இங்கு எதுவும் காணாமல் போகாது"* என்கிறார் ஒரு குடும்பஸ்தர். அப்படியும் ஏதாவது களவு நடந்து அகப்பட்டால் அவர் குணாவின் ஆட்களால் நையப்புடைக்கப்படுவார். அந்தப்பகுதியில் கல்யாணம் தொடக்கம் சாவு வீடுவரை குணாவின் நிதியுதவியின்றி நடப்பதில்லையாம். சாவு வீடுகளுக்கு சவப்பெட்டி வாங்குவது தொடக்கம் வருபவர்களை உபசரிக்கும் செலவுகளையும் பெரும்பாலும் இவரே ஏற்பாராம். மரணவீட்டு வேலைகளில் இவரது ஆட்களே ஈடுபடுத்தப்படுவார்களாம்.

இந்தப் பகுதிக்கு புதிதாக வருபவர்கள் கண்காணிக்கப்படுவார்கள். தினசரி இரவு வேளைகளில் சுழற்சி முறையில் பாதுகாப்பு, கண்காணிப்பு என்பவற்றில் இளைஞர்கள் ஈடுபடுவார்கள். அவர்களுக்குத் தேவையான உணவு, தேனீர் என்பனவற்றை குணா வழங்குவார்.

ஏற்கெனவே பல தடவை இவரை புலிகள் இயக்கத்துடன் தொடர்புபடுத்தி சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகள் எழுதத் தொடங்கியது குணா தரப்பினர் வேட்டையாடப்பட நல்ல சாட்டானது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தான் குணா சிறையிலிருந்து விடுதலையானார். அது வரை ஒன்றரை வருடங்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழும், (துறைமுகத்தில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சியுடன் குணாவையும் சம்பந்தப்படுத்தி குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.) குற்றவியல் வழக்குகள் சிலவற்றையும் சேர்த்து விசாரணைக்காக என்று தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இறுதியில் ஒன்றரை வருடத்துக்குப் பின் எவ்வித குற்றமும் நிரூபனமாகாத நிலையில் விடுவிக்கப்பட்டார்.

# (தற்)கொலை செய்யப்பட்டவனின் 12.06.98 திகதியிடப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை

தத்துவத்தின் பிரச்சினை தான் தற்கொலையா? தற்கொலையின் பிரச்சினை தான் தத்துவமா? மனித சிந்தனை, ஒன்றில் அறிவியலின் தற்கொலையா? அல்லது பௌதீகத் தற்கொலையில் தான் முடிய வேண்டுமா? ஒரு மனிதனின் உடலில் ஏற்படும் இரசாயன மாற்றத்தினால் உண்டாகும் தற்கொலை உணர்வை என்னவென்பது? இந்த இரசாயனத் தற்கொலை, பௌதீகத் தற்கொலையில் தான் முடிய வேண்டுமா? (அதற்கிடையில்) உண்டாகும் இரசாயன மாற்றத்தினால் ஏற்படும் உயிரியல் மாற்றங்கள் திரும்பவும் பௌதீக அழிவில் போய் முடியாத போது இரசாயன மாற்றங்களுக்கும், உயிரியல் முரண்பாட்டுக்கும் உள்ள முரண்பாட்டை ஒரு கலைப்படைப்பு வெளிக்கொணரும் போது உள்ள வெளிப்பாட்டையே மண்டையன் வெளிக்கொணர முற்படுகின்றது என்று கூறமுடியாதா? அரசியல் தற்கொலைக்கும், பௌதீகத் தற்கொலைக்கும் உள்ள இடைவெளிகளைத் தான் மண்டையன் தன் உணர்வுகளால் (இரசாயனம், உயிரியல்) வெளிப்படுத்த முனைந்தானா? அறிவியல் கொலை எல்லாம் பௌதீக கொலையில் தான் முடியவேண்டுமா? அறிவியல் தற்கொலைக்கும், இரசாயன மாற்றத்திற்குமான தொடர்பு தான் என்ன? இதை பிரெஞ்சு தத்துவ ஆசிரியர் காம்யூ கூறினாரோ! அல்லது ஜேர்மன் தத்துவ ஆசிரியர் யாராவது கூறினாரோ என்பதெல்லாம் வைசம்பாயனருக்கு மட்டும் தான் புரியும். எங்களுக்குத் தெரியவில்லை. ஆனாலும், நாம் சொந்தச் சூழல், மாற்றங்களினால் மூளையில் ஏற்பட்ட மின்சாரத் தாக்கங்களினால் தான் அவ்வாறு சிந்திக்க முற்பட்டோம். இதைப் பிரெஞ்சு தத்துவ ஆசிரியர் ஏற்கெனவே எளிய வடிவில் கூறியிருக்கிறார் என்பது எங்களுக்குப் பிரச்சினையில்லை. நாங்கள் எதையும் எங்கள் சொந்தச் சரக்காக உரிமை கோரியதில்லை. சொந்தச் சரக்கென்பது பொய். சூழலில் இருக்கும் தொடர்ச்சியான/தொடர்ச்சியற்ற சிந்தனை முரண்பாடுகளே ஒரு வெளிப்பாட்டைத் தீர்மானிக்கின்றது. இந்தத் தொடர்ச்சியான/தொடர்ச்சியற்ற சிந்தனை முரண்பாடுகள் எங்களது சொந்தச் சரக்கு என்று ஒருவர் கூறினால் காம்யூ கூட தன்னை சவப்பெட்டிக்குள் மூடிக் கொண்டு புதைகுழிக்குள் தள்ளுபவராக இருப்பார்.

- 1 இல் 'நச்சுக் கருத்து' சம்பந்தமாகவே (குறியீட்டு அளிக்கை சம்பந்தமாக) எதிர்வினை வைத்து எங்களை சவப்பெட்டிக்குள் அடிக்கும் படி கூறினோம். நாம் ஆர்ப்பரிக்கவில்லை. ஆனாலும், ஏதோ இது எங்கள் சொந்தச் சரக்கு என்று கூறி ஏனையவர்களைப் போல் தொலைக்காட்சி அளிக்கைக்கு வெளியிலும், வைசம்பாயர் எம் கருத்துக்களை நெரிப்பது தெரிகின்றது. நகங்களால் பயமுறுத்துவது புரிகிறது.

ஆக, தற்கொலை செய்ய நினைக்கும் ஒரு இளைஞன் (அதில் இறங்கி வெற்றியாக அதை முடிக்காத போது) தற்கொலை செய்ய முடியாத போதுள்ள இடைவெளியையே மண்டையன் பேச முனைகின்றான். (வெவ்வேறு காட்சிப் படிமங்கள் ஊடாக)


தன்னை அழித்துக் கொள்ளும் உரிமையைக் கேட்பது ''ஒரு கருத்துக் கோடலே'' தேவராஜா அவர்கள் கூறிய 'ஒரு இளைஞன் தன்னுடைய ஆளுமையை வளர்க்க சமூகம் ஒரு உதவியும் செய்யாது, ஒரு கரிசனையும் இன்றி தூங்கிக் கொண்டிருந்தது. ஈற்றிலே தன்னை அழிக்கும் போது அச்சமூகம் சட்டப் புத்தகங்களைப் புரட்டுவது வேடிக்கையானது என்று கூறிய கருத்துக்கோடலை தவிர்த்தது ஏன்?

பொய்களைச் சொல்லி நிலாவைக் கூப்பிட்டு குழந்தைக்கு எவ்வளவு காலம் சோறு ஊட்டப் பார்க்கிறார்கள். உண்மை சொல்லிப் புரிய வைக்க மாட்டார்களா? குழந்தையின் சூழல் எல்லாம் பட்டாம் பூச்சிகளின் சிறகடிப்பில் விடிகின்றதாம். 'சும்மா போங்கள்' காட்சிப் படிமத்தில் வரும் குழந்தையின் அழுகை (திரும்பத் திரும்ப) பிஞ்சுப் பருவத்திலே அவர்களது குரல்வளை நெரிக்கப்படுவதை உணர்த்தவில்லையா? மண்டையனின் உணர்வு கருத்து ஆக்கிரமிப்பாலும், நிறுவன மயப்படுத்தலாலும் தான், காட்சிப் படிமங்கள் திரும்பவும் திரும்பவும் வருகின்றன. இது எரிச்சலை ஊட்டுகிறது என்றால் திரும்பவும் திரும்பவும் 'றெக்சோனா' விளம்பரமும், தலைவர்களது ஜனநாயக விளம்பரங்களும் இவர்களுக்கு அளவு கடந்த சந்தோசத்தை ஊட்டுகிறதாக்கும்!

சமகால அரசியல் இல்லையென்பது வைசம்பாயனாரின் கருத்துக் கோடலே! கையில் தொலைபேசியோடு பொம்மையைக் கொஞ்சுவது யார்? மண்டையனை கடலில் தள்ளுபவர் யார்? அவர் கூறும் சமநிலை. சமநிலை என்பதன் அர்த்தம் என்ன? அவரை நோக்கி மண்டையன் வாந்தி









எடுப்பது ஏன்? அப்பாத்திரம் யார் என மண்டையனுக்கும் ஒரு தெளிவான முடிவை எடுக்க இயலாமலிருப்பது ஏன்? எல்லாத் தற்கொலைக்கும் பின்னால் ஒரு தற்கால அரசியல் இல்லையா? என ஒரு கேள்வி அக்கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டது, வைசம்பாயனரின் காதுக்கு எட்டியிருக்கும் என நாம் கருதுவது நியாயமல்லத் தான்.

விளங்கவில்லை என்று கூப்பாடு போடுவதன் தார்ப்பரியம் புரியவில்லை? தேங்காய் எறிவது விளங்கவில்லையா? தற்கொலை முயற்சி புரியவில்லையா? இது ஒரு மூடிய தொகுதியில் நடக்கவில்லையே? ரூபவாஹினி ஒரு மூடிய தொகுதியா?

ஆனாலும், ஏனைய நாடகங்களைப் போல் அழகில்லை என்றால், அழகியல் சம்பந்தமாகவும், காட்சிப் படிமங்களை இணைக்க முடியவில்லை எனில், அது சம்பந்தமாகவுள்ள கோட்பாடுகளை கேள்விக்குள்ளாக்கி விவாதிப்போம்.

மண்டையன் என்ற பதம் வெவ்வேறு அர்த்தங்களை உருவாக்குவதாக இருக்கலாம். எங்களுக்கு கருத்துக் கூறியவர்கள் -ஒற்றைப்போக்குடையவர், மண்டை பெருத்தவர், தான் நினைத்ததே சரி என்ற பிடிவாதமுள்ளவன், மண்டை முழுக்கப் பிரச்சினையுள்ளவன், தன் மண்டையை அழிக்க தன் உரிமையைக் கேட்பவன் என அர்த்தப்படாதா? இதற்கும் அமைதிப் படைக்கும் - கொலைப்படைக்கும் - தொடர்புபடுத்தி 'பிரெஞ்சு'ப் புரட்சியில் யாராவது வியாக்கியானம் சொன்னார்களா? என்பது வைசம்பாயனருக்கே புரியும். சூழலே கொடூரமான போது கலைப் படைப்புக்களில் மட்டும் மென்மையும், மென்மையான பெயர்களை (பூந்தளிர்) தேடுவது ஏன்? மண்டையன் உணர்வுகளை கிளறி எடுக்க முனைந்துள்ளது எனக் கொள்வது தவறாகுமா?

இந்த அளிக்கை குறியீடா இல்லையா? என்பது தத்தமது அனுபவங்களினூடாக ஒருவர் முடிவு செய்ய வேண்டுமே தவிர புள்ளிவிபரப்படி அல்ல.

ஒரு அளிக்கையின் (மண்டையன்) வடிவம் நேரத்தில் மட்டுமல்ல, அளிக்கையின் பொருளிலும், கதையிலும் (சொல்ல வந்தது) பாத்திர முரண்பாடுகளிலும் சம்பவங்களின் ஓட்டங்களினாலும், மாறுதல்களினாலும், தொலைக்காட்சி அலைவரிசையினைத் தேர்ந்தெடுப்பதினாலும் அல்லது தொலைக்காட்சி அலைவரிசை உள்ள சூழலினாலும் இன்னும் பல காரணிகளினாலும் தீர்மானிக்கப்படுகின்றது.

மண்டையன் மூன்றாவது கண்ணோட்டத்தில் அதாவது வளைவு (வங்குவ) மாதிரி அல்ல மண்டையனுடைய கண்ணோட்டத்தில் சமூகம் பற்றிய பார்வையின் விளைவே.

வன்முறைக் காட்சிப் படிமம் என் போர் தங்கள் பிள்ளைகளோடு ரஜனியும், கமலும் முகத்தில் உடைந்த இரும்பினால் (Close up இல்) குத்தும் போதும் தலையைக் கொய்யும் போதும், நிஜத்தில் மின்கம்பங்களிலும் டயர்களிலும் கொல்லப்படும் போதும் குடும்பமாக ரசிப்பார்கள். ஒரு அளிக்கை அவர்கள் இருப்பை வினவும் போது குமுறுவது ஏன்?

''மண்டையன் தற்கொலையாளியுமல்ல - தற்கொடையாளியுமல்ல'' மண்டையனின் இரசாயன மாற்றங்களை தற்கொடையாளிகள் என வைசம்பாயனர் கூறுவது இன்னும் பல மண்டையர்களை உருவாக்கும் உழுத்துப் போன அரசியல், சமூகம், கல்வி, மதப்பெரியோர் தற்கொலையாளிகளா? தற்கொடையாளிகளா? எனக் கேட்கத் தூண்டாதா?

தற்கொலை பண்பட்ட கொலை செய்த சமூக கொடூரத்தை தற்கொடையாளி என்பதா!!

தற்கொலையில் முன்நிற்கும் இலங்கையில் மண்டையன் மனநோய் பற்றி மூடிய விவாதத்தை தன்னும் செய்தது என்பதை வைசம்பாயனர் மறைமுகமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பது எங்களது பிரேதப் பெட்டியிலிருந்து ஆணிகளைக் கழட்டுவது புரிகிறது. திறந்த விவாதத்தை நடத்த இது பிரச்சாரப் படைப்பல்ல?

ஒரு கலைப்படைப்பு உணர்வுகளை தட்டி எழுப்புகிற கடமைக்கும் அப்பால் செய்ய வேண்டிய திறந்த கடமைகள் உள்ளனவா என்பது கேள்விக்குறியே? தேடப்பட வேண்டியது?

- 1 இற்குப் பின் 0ஆ? -2 ஆ? என்பது கணித சமன்பாட்டிற்குத் தான் மரமண்டை எங்களிடம் அல்ல. உங்களிடமும் தான். மண்டையன் தொலைக்காட்சி அளிக்கைகளை மூன்றாவது ஊடகமாக (நாடகமாகவோ திரைப்படமாகவோ அல்ல இரண்டிற்கும் இடைப்பட்டதாகக் கருதாமல்) (Serious) ஆக விடயங்களைத் தேடமுனைகின்றது. மற்றைய தொலைக்காட்சி தயாரிப்புக்கும் இதற்கும் கொள்கை ரீதியான வேறுபாடு உள்ளது. நாங்கள் தொலைக்காட்சியை மூதேவி வாலாயம் செய்யவில்லை. மண்டையன் தற்கொலையை தொலைக்காட்சியில் செய்ய முயற்சித்தது என்று கூறும் போது சமூகம் அவன் மேல் சுமத்திய தாங்க முடியாத பாரங்களைக் கேள்வி கேட்காதது ஏன்? சிலவேளைகளில் காம்யூ அவர்களும், அவர்களது சீடர்களும் இந்த அளிக்கையைச் செய்திருந்தால் சரியான பிரேதப் பரிசோதனை என்று காம்யூ திரும்பவும் இறந்து விட்டார் என்று கூறி ஏற்றுக் கொள்வார்களோ? சிறந்த படைப்பு என்று கூச்சல் போடுவார்களோ? படைத்தவரல்ல! படைப்புத் தானே முக்கியப்பட வேண்டும். இது காதால் பார்ப்பவர்களுக்கு அளிக்கப்பட்ட படைப்பல்லவே. வைம்சம்பாயனர், காம்யூ சொந்தச் சரக்கு லாபகமாதல் மரமண்டையர், வடிவம், விளங்க முடியாது, சிக்கலானது, தற்கொடையாளிகள், திறந்த விவாதம் - 2, -1, 0, மேடை அளிக்கை, தொலைக்காட்சி வாலாயம், தற்கொலை எனக்கூறி எங்கள் எங்கள் கழுத்தில் விழுத்தப்பட்ட சுருக்குக் கயிற்றை (தண்ணியும் இன்றி) இறுக்குவது புரிகின்றது? உங்களுக்கு புரிகின்றதா? உங்களைக் காப்பாற்ற அவராவது இருக்கின்றார் எங்களைக் காப்பாற்ற!

- சூழல் கொடூரம்
- தூசப் பிடிச்சுக் கொண்டு மேல ஏறிவரச் சொல்லுறியள்!
- வாழ்க்கை மீது நம்பிக்கை கொண்ட மனநோயாளியல்ல!
- நீ அடி, பிறகு உன்ர பிள்ள அடிக்கட்டும்.
- இல்லானை இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாயும் வேண்டாள். சொல்லாது அவன் வாயிற் சொல்!
- நீங்கள் உங்கள அழிப்பியள் என்று தான் ஓம் என்று சொன்னனான்.
- அடுத்த நூற்றாண்டுக்கு என்ன இருக்குது!
- நடுங்குது!

***பூச்சியம் கலை வட்டம் சார்பில் - மண்டையனின் பங்காளிகள்***

○

# மேதை யார் ? சாமான்யன் யார்?

''எங்கட இலக்கிய உலகு எப்படிப் போகுது?'' என்று கேட்டுக் கொண்டே என் நண்பன் எதிரே போய் உட்கார்ந்தேன் நான்.

''எங்கட இலக்கிய உலகா?'' என்று ஒரு மாதிரி இழுத்தவன் ''எங்கட சில எழுத்தாளர்களுக்கும் கவிஞர்களுக்கும் பிளேட்டோ சொன்னதைத் தான் செய்யவேணும்'' என்றான்.

''பிளேட்டோ என்ன சொன்னான்? '' - நான்.

''இந்த எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் ஒழித்துக் கட்ட வேணும் என்றான் அவன். ஈழத்தில் தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள் என்று இருப்பவர்கள் சிலர் செய்வதைப் பார்த்தால் அவன் சொன்னது சரிதான் போலப்படுகுது'' - அவன்.

''என்ன விஷயம் சொல்லு'' நான் முடுக்கினேன்.

''அப்படி ஒன்றுமல்ல. உலகெங்கும் உள்ள சாபக்கேடு சாமான்யர்கள் , மேதைகள் மாதிரி தோரணைகள் போடுவதே. இது தற்போது ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் மலிந்து போய்விட்டது போல் படுகுது.'' - அவன்.

''சாமான்யர்கள் என்று நீங்கள் யாரைக் கூறுவீர்கள்?'' - நான் விளங்கிக் கொள்ள விரும்பினேன்.

''ஒவ்வொரு துறையிலும் இந்த சாமான்யர்கள் - அதாவது Mediocres இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொரு துறையின் மேதைகளின் கண்டுபிடிப்பை, சாதனைகளை அட்சரம் தவறாது ஒப்புவிப்பார்கள். ஆனால் அவற்றிலிருந்து வரப்போகும் எதிர்கால வீச்சை, அதன் தரிசனத்தை அறியாதவர்கள், அது கொண்டியங்கும் கருத்தியலை அறியாதவர்கள். இலக்கிய உலகில் இத்தகைய சாமான்யர்கள் திருக்குறள் அனைத்தையும் அட்சரம் தவறாது ஒப்புவிப்பார்கள். கம்பராமாயணத்தில் 12ஆயிரம் பாடல்களையும், பாடமாக்கி வைத்திருப்பார்கள். சிலப்பதிகாரம் என்ன, சங்க இலக்கியம் என்ன, ஒன்றும் இவர்களுக்கு தள்ளுபடியல்ல. ஆனால், இவர்களிடம் இன்றைய பார்வையில் திருக்குறளை மறுவாசிப்புக்குள்ளாக்குவது பற்றிக் கேட்டால் என்னவென்று தெரியாது. சங்ககாலத்திலிருந்து பாரதிவரை தமிழ் இலக்கியத்தில் இழைந்து வரும் கருத்தியல் பார்வை என்னவென்று கேட்டால், ஒன்றும் தெரியாது. தமிழ் பக்தி இலக்கியத்திலிருந்து கம்பனின் 'இராமவதாரம்' எவ்வாறு வித்தியாசப்படுகிறது? அந்த வித்தியாசப்படல் இன்றைய பார்வையில் ஓர் முற்போக்குப் பாய்ச்சலாய் எவ்வளவு தூரம் செல்கிறது என்று கேட்டால் இவர்களுக்குத் தெரியாது. ஆனால், இவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் கம்பராமாயணத்தில் வரும் சீதையா மண்டோதரியா கற்பில் சிறந்தவள் அல்லது சிலப்பதிகாரத்தில் கண்ணகியா மாதவியா கற்பில் சிறந்தவள் எனற பத்தாம் பசலி பட்டிமன்ற விவகாரங்கள் தான்! இவர்களைத் தான் நான் சாமான்யர்கள் என்கிறேன்'' அவன் ஒருவிதவேகங் கொண்டு கதைத்தான்.

''சுவையாக இருக்குது, இன்னும் சொல்லு'' - நான் மேலும் தூண்டினேன்.

''இத்தகைய சாமான்யர்கள் அரசியலுக்குள் ஆட்சி நடத்தினால் என்ன நடக்கும் என்பதை அல்ஜீரிய நாட்டுப் புரட்சியாளனும், சிந்தனையாளனுமான பிரான்ஸ் ஃபனன் (Franz Fanon) மிக அழகாக விளக்கியுள்ளான்.'' அவன் தொடர்ந்தான்.

''எப்படி?'' -நான்

''தரிசனம் இல்லாத சாமான்யர்கள் ஆட்சிக்கு வந்ததும் மக்களின் சமூக, பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்குரிய வழிமுறைகளை அறியாத நிலையில் தேவையற்ற பெரும் பெரும் கட்டிங்களைக் கட்டியும், பெயர்ப்பலகைகளை மாற்றியும், ஏதோ அரசியலில் புரட்சி செய்வது போல் மக்களை ஏமாற்றுகின்றனர். மயக்குகின்றனர். இதை தி.மு.க. தமிழ் நாட்டில் அரசியல் பிரவேசம் செய்த போது நிகழ்ந்தவற்றிலிருந்து காணலாம். 'தலைமைச் செயலகம்', 'பணிமனை' என்ற தனித்தமிழ்ப் பெயர் மாற்றங்களும் பெருங்கட்டிடங்களும் முளைத்தனவே ஒழிய மக்கள் நிலையை மேம்படுத்தும் வழிவகைகள் நிகழவில்லை.'' - அவன்.

''இந்த மாதிரி விஷயங்களைத்தான் இலக்கியத்தில் சாமான்யர்கள் செய்கிறார்கள். மக்களைச் சிந்திக்க வைக்கும் ஆழமான படைப்புக்களை மேற்கொள்வதைவிட்டு பட்டிமன்றங்களும், சொற்பொழிவுகளும், பொழிப்புரைகளும் மேற்கொண்டு மக்களை ஏமாற்றுகின்றார்கள்; மயங்க வைக்கிறார்கள், இல்லையா? - நான்.

''சரியாகச் சொன்னாய். ஒரு காலத்தில் ஒரு மேதை கண்டுபிடித்ததை, எப்படி இக்காலத்துக்கேற்ப வளர்த்துக் காட்டுவது என்று தெரியாமல், அதற்கு இன்றைக்குப் பொருந்தாத சோடிப்புகள் செய்து, மேளம் தட்டி, குடை பிடித்து, ஊர்வலம் செய்வது தான் சாமான்யர்களின் வேலை. இதையெல்லாம் அண்மையில் இலக்கிய விழாக்களில் கண்டிருப்பாய் இல்லையா?'' என்று கேட்டவன் சிரித்துவிட்டு, ''இதற்கிடையில் சாமான்யர்கள் மேதைகளையே கேலிசெய்து, தாம் மேதாவிகள் எனக் காட்டிக் கொள்ள முற்படுவதும் உண்டு'' என்றான்.

''எப்படி? அதையும் சொல்லு'' நான் தூண்டினேன்.

''ஐன்ஸ்டீனுக்கு இது நடந்திருக்கிறது. சார்புக்கொள்கையை ஐன்ஸ்டீன் போட்ட காலத்தில் அதை விளங்கிக் கொண்டவர்கள் உலகத்தில் 12 பேர் தான் இருந்தனர். ஆனால், அவருக்கே கணக்கு வராது என்று பரிகாசித்தவர் இருக்கிறார்கள். யூனிவேர்சிட்டி Chair கொடுக்க மறுத்தவர்கள் இருக்கிறார்கள். கவிதாமேதையான வோல்ட் விட்மனுக்கு இது நடந்திருக்கிறது. இவருக்கு ஒழுங்காக ஆங்கிலம் எழுதத் தெரியாதென்று, அவரது சமகாலத்து அமெரிக்க சாமான்ய கவிஞர்கள், எழுத்தாளர்கள் அவர் கவிதையில் பிழைபிடித்திருக்கிறார்கள். இது பாரதிக்கும் நடந்திருக்கிறது. ஆனால், இன்று இந்தச் சாமான்யர்கள் இல்லை. மேதைகள் தான் வாழ்கிறார்கள். இந்தவித நிகழ்ச்சிகள் இப்போ ஈழத்து இலக்கிய உலகிலும் நடக்கிறது...'' அவன்.

''எதைப் பற்றிச் சொல்கிறாய்?'' - நான் விபரம் கேட்டேன்.

''அப்படி எதையும் யாரையும் குறிப்பாக சொல்லமாட்டேன். அப்படிச் சொன்னால் தனிப்பட்ட (Personal) தாக்குதல்கள் என முத்திரை குத்தப்படலாம். இதுவும் நம் இலக்கிய உலகில் காணப்படும் அறியாமையின் வெளிப்பாடு. இது பற்றிப் பின்னர் கதைக்கலாம். அதனால் இப்போதைக்கு பொதுவாகச் சொல்வதானால் இன்று ஆரோக்கியமான தமிழ்ச் சிந்தனை உலகில் பாரிய கருகல் (Canker) விழுந்து உள்ளரித்துக் கொண்டு போவது போல், சாமான்யர்கள் இங்கு புகுந்து தம்மை நிலைநாட்டத் தொடங்கியுள்ளார்கள். இவர்களில் பல வகையறாக்கள் உண்டு. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற தொலைத்தொடர்பு ஊடகங்களை ஆக்கிரமிக்கும் ஒரு வகை. ஆக்க இலக்கியம், விமர்சனம், ஆய்வு போன்ற இலக்கிய விஷயங்களை ஆக்கிரமிக்கும் இன்னொரு வகை. மேடைகளை ஆக்கிரமிக்கும் மற்றொரு வகை. இப்படிப்பல. இவர்கள் கற்றறிந்தோர் கூடியுள்ள கூட்டங்களில் சம்பந்தா சம்பந்தாமில்லாத விஷயங்களில் கேள்வி எழுப்பி, தமது ஞானத்தைக் காட்டவும், அறிஞர்களை மட்டந்தட்டவும் முனைவர். சிலர் சைவ சிந்தாந்தம் பற்றிய ஆய்வு மேற்கொள்வதாகக் பெருமகுடமிட்டு வெற்று மதப் பிரச்சாரம் செய்வர். சிலர் இலக்கிய விமர்சனம் புரிவதாகக் கூறித் தமக்குப் பிடித்தவரைப் போற்றியும் பிடிக்காதவரை ஓரங்கட்டியும் எந்தவித- ஆதாரமும் அற்று அலட்டுவர். இப்படி பல வடிவங்களில் சாமான்யத் தன்மை வலம் வரும்'' - அவன்.

''இந்தச் சாமான்யத்தன்மை வேர் ஊன்றக் காரணமாய் இருப்பவர் யார்? - நான்.

''வியாபாரத்தை நோக்காகக் கொண்டுள்ள அமைப்புகள், தொலைத் தொடர்பு மக்கள் ஸ்தாபனங்கள். உதாரணமாக ஒருவர் மேடைப் பேச்சில், பட்டிமன்ற உரையாடலில், நடிப்புத்துறையில் சோபிக்கிறார் என்றால், - அவரை இவ்விஷயங்களில் மக்கள் ரசிக்கிறார்கள் என்றால்- அவரை எல்லாம் தெரிந்தவராக அறிஞராக கற்பித்து அவரிடம் அரசியல், பொருளாதாரம், தத்துவம், இலக்கியம், சமயம் போன்ற விஷயங்கள் பற்றியெல்லாம் ஆலோசனை கேட்பது, பேட்டி காண்பது, அவற்றை பத்திரிகைகளில் பிரசுரிப்பது, இதனால், இந்தச் சாமான்யர்கள் மக்கள் மத்தியில் அறிஞராக்கப் படுகிறார்கள். உண்மையான அறிஞன் மக்களால் புறந்தள்ளப்படுகிறான்.'' என்று கூறவிட்டு அவன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறாய்?'' - நான்.

''இனிமேல் நிலைக்கப் போபவை இவை தான். அதனால்தான் சிரிக்கிறேன்.'' என்றவன் எனக்கு விளங்குவதுபோல், ''எதிர்காலத்தில் எவை எவை நிலைக்கப்போகின்றன என்று பெருஞ்சிந்தனையாளரான காலஞ்சென்ற ஆதர் கொய்ஸ்லரிடம் (Arthur Koestler) எதிர்வு கூறும்படி கேட்ட போது, அவர் முக்கியமான ஒன்றாக, ''இனியும் சாமான்யத் தன்மையே உலகை ஆளும்'' என்றார். (Mediocrity Will Reign). அவரே மேதைகள் பற்றியும் தனது Act of Creation என்னும் நூலில் அழகாகக் கூறியுள்ளார்.'' - அவன்

''மேதைகள் பற்றி என்ன சொல்கிறார்?'' - நான்

''ஒரு மேதை தான் வாழும் காலத்தில் நடைமுறையில் உள்ள சகலதுறை முன்னேற்றங்களையும் கணக்கிலெடுத்து, இனிவரும் போக்குக்குரிய கருத்தியல் வெளிக்கோடொன்றின் வெளிச்சத்தில் தனது துறைக்குரிய கண்டுபிடிப்பைச் செய்கிறான். இது சகலராலும் பின்பற்றப்படுகிறது'' என்று கொஸ்லரின் கருத்தைக் கூறிய அவன், பங்குக்கு தனது கருத்தையும் முன்வைத்தான். ''இத்தகைய மேதைகளின் புதிய கண்டுபிடிப்புகளை ஆரம்பத்தில் கண்ணை மூடிக்கொண்டு எதிர்ப்பவர்கள் இந்தச் சாமான்யர்கள் தான். அதேவேளை இக்கண்டுபிடிப்புக்கள் கனகாலம் பலரால் பின்பற்றப்பட்டு தம் சக்தியை இழக்க, இவை அப்புறப்படுத்தப்பட வேண்டிய காலகட்டத்தில் இவற்றை இறுகப் பற்றிக் கொண்டு பேணமுயல்பவர்களும் இந்தச் சாமான்யர்கள் தான்! இதை இன்றைய மார்க்சிய வாதிகளிடம் நிறையக் காணலாம்.'' - அவன் விளக்கம் சுவையாக இருந்தது.

''இவர்களை நினைத்தால் கோபம் அல்லவா வருகின்றது? - நான் கூறினேன்.

''இல்லை, விடுபட்டு நின்று பார். இன்னும் வேடிக்கையாக இருக்கும். இயக்கவியலின் அர்த்தம் கூடப் புரியும்'' அவன்.

## தமிழ்ச் சட்டத்தரணிகள் சங்கம்

''பொதுவான ஒரு நம்பிக்கையின் காரணமாக கோஷ்டி கோஷ்டியாக சேர்ந்தே காணப்பட்டனர். தங்களில் சேராதவர்கள் யாரையும் அருகில் விட இவர்கள் தயாராய் இல்லை. சகோதரத்துவம் பாராட்டினார்கள். நேச விருந்துகள் நடத்தினர். ஒரே குடும்பம் போல விருந்துகளில் ஈடுபட்டனர். இதெல்லாம் புது கொள்கையின்படி போலும்.... ஒருவரை ஒருவர் நேசியுங்கள் என்கிற மதத்தை சேர்ந்தது போலும் ஆனால், தங்களை சேராதவர்களை நேசித்தார்கள் என்று சொல்வது மிகவும் சிரமமானது தான்... ''(பக் .44)

நோபல் பரிசுபெற்ற ''பரபாஸ்'' நாவலில்பேர்லாகர் குவிஸ்ட், (க.ந.சு.மொழிபெயர்ப்பு) இயேசு சிலுவையில் அறையப்பட்ட சிலநாட்களுக்குள் சீடர்களின் நிலைமையினை இவ்வாறுதான் விபரிக்கிறார். பரபாஸ் என்பவன் பாதகனாக இருந்தபோதிலும் யூதர்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் இயேசுவிற்காக சிலுவைப்பாடுகளில் இருந்து பிலாத்துவினால் விடுவிக்கப்பட்டவன். இனிக் கதைக்கு வருவோம்.


அண்மைக்காலமாக கொழும்பினை மையப்படுத்தி தமிழ் அமைப்புக்களின் செயற்பாடுகள் முனைப்புப் பெறுவதை காணக்கூடியதாக உள்ளது. கொழும்புவாழ் தமிழ மக்கள் பணிக்குழுவின் சமீபத்திய முனைப்பான செயற்பாடுகளும், தமிழ்ச்சட்டத்தரணிகள் சங்கம் ஒன்றினை, ஆரம்பித்து வைப்பதற்கான பத்திரிகை விளம்பரங்களும் வெவ்வேறு தமிழ் இந்து அமைப்புக்கள் நடத்திய தீர்வுப்பொதிபற்றிய கலந்துரையாடல்களும் குறுகிய காலத்தில் சொல்லிவைத்தாற் போல் நடந்தேறின. இத்துடன் மலையக முன்னணி பற்றிய பத்திரிகை செய்திகளும், விளம்பரங்களும் இந்நிகழ்வுகளிற்கு அரசியல் பின்புலம் இருப்பதை ஓரளவிற்கேனும் ஊகிக்க அனுமதிக்கின்றன. இவை என்னவாக இருந்தபோதும், இந்நிகழ்வுகள் தமிழ் மக்களிடையே கருத்துப்பரிமாற்றங்களிற்கு வழிகோலின. இருந்தும் சந்தடி அடங்கி விட்டது போல் ஒரு நிலைமை இப்போது. கொழும்பு வாழ் தமிழ் பணிக்குழுவின் எழுச்சி கூட்டத்தில் நடைபெற்ற விபரங்கள் அடுத்தநாள் தினப்பத்திரிகையில் முக்கிய செய்தியாய் வந்தன. ''தமிழ்ச் சட்டத்தரணிகள் சங்கத்தின்'' ஆரம்ப விழா கூட்டம் எப்படி நடந்தது? அதற்கு என்ன நடந்தது? என்ற விபரம் அவ்வாறான ஒரு சங்கத்தின் சமூக சேவையை தமிழ் சமூகம் வேண்டி நிற்கும் இந்நிலையில், ஒரு தமிழ்ப்பிரஜை அறியவிரும்புவதை எவரும் ஆட்சேபிக்கமுடியாது. அன்றியும் அச்சங்கத்தின் இலக்குகள் நடவடிக்கைபற்றி அறிய ஆவற்படுவதும் பிழையல்லவே.

சந்திக்குச் சந்தி இராணுவ காவல்துறைக் கெடுபிடிகளை ஏற்று அதனை இயல்பான சங்கதியாகக் கொண்ட தமிழ்ச் சமூகம் நெருக்குவாரம் அதிகரிக்கும்போது சட்ட ஆலோசனைக்கும், சட்ட உதவிக்கும் பெருந்தொகைப் பணத்தை இறைக்க வேண்டிய நிர்ப்பந்தம். மேலும் கைதுகள் தனிப்பட்ட பிரச்சினையாக கருதப்பட்டு தீர்க்கப்படும் நிலைமையானது பொதுப்பிரச்சினைக்கான தீர்வினை மேலும் பின்தள்ளுகின்றது. இவ்வாறான கைதுகள் உரிமை மீறல்களை தட்டிக்கேட்க ஒரு வலுவான சட்டபீடம் அவசியம் என்பதே, இத்தமிழ்ச் சட்டத்தரணிகளை நோக்கி ஒரு பார்வையை எறிய வேண்டி நிர்ப்பந்தித்தது.

தமிழ்ச் சட்டத்தரணிகள் சங்கத்தின் துவக்கவிழாவில் நடந்தேறிய நாடகப்பாங்கான வில்லத்தனம் சுவாரசியமானது. அது தமிழர்களின் வரலாற்றிலேயே பின்னிப்பிணைந்தது. யார் அந்த ''பரபாஸ்?'' என்பதை விவரிக்க இப்பத்தி எழுதப்படவில்லை. அன்று நிறைவேறிய சங்கத்தின் இலக்குகளில் சில பின்வருமாறு.

1. எந்நிலைமையிலும் எவ்வரசியல் சூழ்நிலையிலும் தமிழர்களின் நலன்களைப் பாதுகாத்தலும், கவனித்தலும்.
2. தமிழ்த் தேசிய இனத்தின் இனத்துவத்தை (Identity) நிலைநிறுத்தல்.
3. தமிழர் தாயகக்கோட்பாட்டை நிலைநிறுத்தல் (Traditional Home Land)
4. தமிழர் சுயநிர்ணய உரிமையை தக்க வைத்தல்.
5. தமிழ்த் தேசிய இனம், இலங்கையை வம்சாவளியாகக் கொண்ட ஏனைய எந்த இனத்திற்கும் சமமானது என்பதை நிலைநிறுத்தல்.

இவற்றை வாசிக்கும்போது எமக்கு உண்மையில் புல்லரிக்கின்றது. அன்று கூடி இருந்த சீடர்கள், ''பரபாஸை சந்தேகத்துடன் வரவேற்பதாகக் கூறினார்கள். புது சிஷ்யன் ஒருவன் கிடைத்தது பற்றி தங்களிற்கு உண்மையில் சந்தோசம் பிறக்கவில்லையே என்று தமக்குள்ளேயே வருந்தினார்கள் என்று கூடச் சொல்லலாம். இதற்கு காரணம் என்ன?....'' (பக் .45) ''பரபாஸ்''





*பிரான்ஸிலிருந்து வெளிவரும் எக்ஸில் (Exil) என்ற சஞ்சிகையின் முதலாவது இதழிலிருந்து (மே - ஜூன், 1998), சக்கரவர்த்தியின் "என்ட அல்லாஹ்" என்ற இக்கதை நன்றியுடன் மீள் பிரசுரமாகிறது.*

*(ஆ-ர்)*

# எண்ட அல்லாஹ்...

**- சக்கரவர்த்தி -**



இலேசான கிறுகிறுப்பு. பார்வை வேறு இருட்டிக்கொண்டு வந்தது. சத்தம் கூட தெளிவாகக் கேட்பதாக இல்லை. சாக்கடையைச் சுற்றிப் பறக்கின்ற ஈக்கள் உண்டாக்குகின்ற சத்தத்தை போன்று ஒரே இரைச்சல்.

தொடர்ந்தும் நின்றால் குப்புறப்புரட்டப்படுவோம் என்கின்ற ஐயம் தங்கராசா ஹாஜியாருக்கு தோன்றிற்று.

சில்லறை வியாபாரிகள் கூவிக்கூவி விற்கின்றார்கள். தங்கராசா ஹாஜியார் கடைக்குத் தான் யாரும் வரவில்லை. ஐந்து மணித்தியாலமாக நிற்கின்றார். மூன்று நான்கு பேர்களுடன் முற்றுப்பெறுகின்ற மொத்த வியாபாரம் அவருடையது! பன்னிரெண்டு மணியாயிற்று! அம்பாறையில் இருந்து வெங்காயம் வாங்க வருகின்ற வியாபாரிகள் யாரும் வரவில்லை.

சுவரை வலக்கையால் முட்டுக்கொடுத்துக் கொண்டு வெங்காய மூடையில் குந்திக் கொண்டார்.

முப்பது அந்தர் வெங்காயமும் வியாபாரம் ஆகாமல் ஒரு நாள் முடங்குமானால் ஈரம் வற்றி ஒரு அந்தர் எடை குறையும். நாள் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய் கையைக் கடிக்கும்.

வெற்று வயிறு கறுபுறுவென சத்தம் உண்டாக்கிற்று.

செத்தல் மிளகாயானால் தண்ணீரைத் தெளித்துத் தெளித்து எடை குறையாமல் பண்ணலாம். நேற்று பிடுங்கிய வெங்காயத்தை எதுவுமே செய்ய முடியாது. மூட்டையாகக்கூட வைக்கமுடியாது. பச்சை வெங்காயம் மூடையுடன் இருக்குமானால் சூடு பிடித்து ஒரே இரவுக்குள் அழுகி நாற்ற மடிக்கும்.

இப்படியான நேரங்களில் சில்லறை வியாபாரம் தேவலாம் என்று தோன்றும். ஐந்தோ பத்தோ வருமானம் குறைவாக வந்தாலும் கையைக் கடிக்காது. கண்ணை மூக்கைப்பார்த்து எடைபிடிக்கலாம். பத்து கிலோவுக்கு ஒரு கிலோ நிகர லாபம் சும்மா கிடைக்கும். தங்கராசா ஹாஜியார் ஒன்றும் அப்படிப்பட்டவர் இல்லை என்பது களுதாவளை தேத்தாத்தீவுக்குக்கூடத் தெரியும்.

மக்காவுக்குப்போவதற்கு முன்பு அப்படி இப்படியென்று சின்னச் சின்ன சில்லறைத் தனங்கள் செய்ததுண்டுதான். தராசின் தட்டின் கீழ் பழப்புளி, காந்தம் ஒட்டுவது, தராசின் முள் அடியில் விரலைவிடுவது என்று சில வியரபாரத்தனங்களைச் செய்தவர்தான். ஆனால், இப்போதெல்லாம் அப்படியெதுவும் கிடையாது.

''ஒழைக்கிறது தாண்டா ஒப்பாய் ஒடம்புல ஒட்டும்''

வார்த்தைக்கு வார்த்தை யாரிடமாவது சொல்லிக் கொள்வார். பத்துவருடமாயிற்று மக்காவுக்குப் போய் வந்து, போன வருடம் கூட மக்காவுக்குப் போகப்புறப்பட்டு முடியாமல் போய்விட்டது.

''என்னடா வாப்பா அத்துல்லா! என்னட்ட செல்லிரிக்கலாமெலுவா நீ கேட்டா இல்லெண்டா செல்லப்போறன். மயண்டைக்க ஊட்டுப்பக்கம் வாகண்டையோ, இருவது இரிக்கி. தாறன். மறுகணித்தா!''

சந்தையில் மூட்டைத் தூக்கும் அப்துல்லாவின் சொந்தக்காரப் பெண் ஒருத்திக்கு கலியாணம் செய்வதில் சிரமம் இருப்பது தெரிந்தது. மக்கா பணத்திற்காக வைத்திருந்த பணத்தைத் தூக்கி அப்துல்லாவிடம் கொடுத்துவிட்டார்.

மக்கா பயணத்திற்குச் செலவாகும் பணத்தை ஏழைப்பெண்ணின் கல்யாணத்திற்குப் பயன்படுத்துவது புண்ணியமாம்.

''என்ன காசியாரு. ஒரு சாங்கமாய் குந்தித்து இரிக்காய் சொகம் கெகம் இல்லையா?''

இரையலாய் எதிர்க்க சத்தம் கேட்டது. உற்றுப் பார்த்தார். சந்தைத் தூண்கள் சுற்றிற்று

'ஆரடாப்பா. சரிவா? தலைசுத்துதுடாப்பா! மார்க்கெட்டு நேச்சர் சரியான சவுப்பா இரிக்கி. ஒரு ஹராம் குட்டியையும் காணல்ல.

....இந்த சிங்கள வள்ளா ஒருவனாவது நேத்தே செல்லித்து போயிரிக்கலாம் எலுவா. சும்மா தட்டிய தொறந்து வெச்சித்து இரிக்கன்.'' ''என்ன காசியாரு நீ. ஒரு மயிரும் தெரியாத ஆளாய் இரிக்காய். விடியம் மல்வத்தையில வைச்சி முப்பது பேர ஜீப்போட கௌப்பித்தானுகள் எலுவா. அந்த உம்மாட மக்கள் காரதீவுக்குள்ள அநியானம் செய்யிறானுகளாம். வசாருக்குள்ள எல்லாக் கடையையும் மூடிப்போட்டானுகள். வசார்ல ஒரு குருவி இல்ல. கடய மூடித்து கெதிய்யா ஊட்டபோய் சேருபாப்பம்.''

தங்கராசா ஹாஜியாருக்கு கிறுகிறுப்பு சட்டென்று நின்றது. எல்லாப் பொருளும், விரையும் மனிதர்களும் - மூடப்படும் கடைகளும் துலக்கமாய்த் தெரிந்தது.

கொல்லும் தூத்தில் ரவைகள் சடுதியாய் தீர்க்கப்பட்டு அடங்கும் ஓசை கேட்டு அடங்கிற்று.

சந்தை சலனமற்று சிலகணம் ஸ்தம்பித்தது. மறுகணம் உசாராயிற்று. நால்திசையும் வாசலாக சனம் சிதறிற்று. காய்கறியும் சிதறிற்று. ஒரேயொரு நிமிடத்தில் சந்தை வெற்றிடமாயிற்று.

இரண்டு மாடுகள் வேகமாய் சந்தையுள் நுழைந்தன. பரம சந்தோஷம் அவைகளுக்கு. தேவையான அளவு தின்று, தின்பன மீது மூத்திரமும் பெய்ந்து சாணமும் போடலாம் இன்று விரட்டுவார் யாரும் இல்லை. வேகமாய் நுழையும் அதன் தோரணையில் சுதந்திரம், வெறி, ஆசை அத்தனையும் இருந்தது.

தங்கராசா ஹாஜியார் எத்தனை நிமிடத்தில் தட்டிகளை மாட்டிவிட்டு வீதிக்கு வந்தார் என்று அவரால் நினைத்துப்பார்க்கும் அளவுக்கு மூளை செயற்படுவதாக இல்லை.

தப்பித்தல். உயிர்காத்தல் எப்படி என்பதை மாத்திரமே மூளை யோசித்தது. அவசரமாய் விரையும் வாகனங்கள் எதுவும் அவரை ஏற்றிக்கொள்கிற சில விநாடிகளையும் விரயம் செய்ய முடியாதிருந்தது.

அவரவர் உயிர் அவரவர்க்கு முக்கியம்!

உடலின் சகல பாகங்களும் உதறிற்று. இதயம் எகிறிக் குதித்தது.

மறுபடி மிக நெருக்கத்தில் - மிக நீளமாய் வேட்டுக்கள் செலவாகும் சத்தம் இழுபட்டது.

எதிர்க்கக் கிளை விரிந்து உயரமாய் நின்றிருந்த அரசமரத்தின் பின்பக்கம் பதுங்கச் சொல்லி மூளை கட்டளை போட, பதுங்கிக்கொண்டார்.

பதுங்கிக்கொண்ட அதே கணத்தில் அரசமரத்தின் கிளையில் இருந்து திடீர் திடீரென இரண்டு தடவை எதுவோ விழுந்தது. ஒரு கணம் அதிர்ந்து போனார். சுதாகரித்துக்கொண்டு உற்றுப் பார்க்க, தெரிந்தது உயிரற்று இரத்தமாய் கிடக்கும் காகமும் சிதைந்த மீன் தலையும்.

இரை உண்ணும்போதில் கொலை என்பது கொடுமை!

''அல்லாவே...!'' மனசுக்குள் உரக்கக்கூவி அண்ணாந்து பார்க்க - சிதைந்த அரசம் இலைகள் தன்னிச்சையாய் பூமி நோக்கி வந்து கொண்டு இருந்தது.

வாகனம் எதுவோ இரையும் சத்தம் கேட்டது. தலையை மெல்ல வெளியே நீட்டி அதே வேகத்துடன் அமுக்கிக்கொண்டார். ஊத்தைப் பச்சை வாகனம்!

''ஹறாம் குட்டிகள் களுவாஞ்சிக்குடியில் இருந்து வாறானுகள் போல...!''

ஒவ்வொன்றாய் குறைந்த வேகத்துடன் மெதுமெதுவாய் மரத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது.

ஒவ்வொரு வாகனமும் உறுமி உறுமி நகர இதயம் மேலும் மேலும் வேகம் எடுத்து இயங்கியது. கடைசியாய் ஒரு கவச வாகனமும் கடந்தது. வியர்வை முதுகுப் பக்கத்தை முழுதாய் நனைத்திருந்தது.

ஹாஜியார் கணக்குப் பண்ணிக்கொண்டார் மொத்தம் பதின்மூன்று வாகனம்!

''வம்புல பொறந்த உம்மாட மக்கள் ஒருவனும் ஏத்தமாட்டான் எண்டுதானுகளே...''

தான் கைகாட்டியும் நிறுத்தாமல் போன வாகனக்காரர்களுக்கு வாய்விட்டே தன்பாட்டுக்குத் திட்டிக்கொண்டு அரசமரத்தின் முன்பக்கம் வந்து வீதியில் நின்றுகொண்டு இரு திசையையும் பார்த்தார். நடமாட்டம் எதுவுமில்லை. மறுபடி அரசமரத்தைப் பார்த்தார்.

எங்கோ வெறித்த பார்வையுடன் பிள்ளையார் கல்.

ஹாஜியாருக்கு பிள்ளையாரைப் பார்த்து மண்டையில் குட்டவேண்டும் போல் இருந்தது. ''டங்கு டங்கு....'' என்று ஐந்து தடவை இரண்டு கைகளாலும் இரண்டு பக்க மண்டையிலும் குட்டிக் கொண்டார்.

களுதாவளைக்கு வெங்காயம் வாங்கப்போகின்ற பொழுதுகளில் 'களுதாவளைப் பிள்ளையார்' கோவிலில் குட்டிக்கொள்ளும் ஆட்களைப் பார்ப்பதுண்டு. பிள்ளையாரை வணங்கும் முறை இதுதான் என்பதில் அவருக்கு ஐயம் இல்லை.

''தார் றோட்டால போறத உட கெறவல் றோட்டால போறது தான் உத்தமம். நாசமறுவானுகள் திரும்பி கிரிம்பி வருவானுகள்.'' மனசு சொல்லி அவர் முடிவெடுக்கும் முன்பே பெருத்த அதிர்வுடன் எதுவோ வெடித்து. சத்தம் உண்டாக்கிற்று. பின்னணியில் தொடர்ச்சியாய் வேட்டு.

தார்வீதியைவிட்டு கிழக்கு பக்கமாய் ஓட முள்கம்பி வேலி சாறனுடன் சேர்த்து தசையை பிய்த்து இழுத்தது. நிதானந்தவறி குப்புற விழ வாய்நிறைய புழுதி மணல் நிறைந்து கொண்டது. எழுந்து மறுபடி ஓட எத்தனித்தபோதே கால் இடறி குப்புற புறட்டிற்று. எழுந்து திரும்பி பார்க்க மிகப்பெரிய காளான் வடிவத்தில் வாகனத்தில் புகை எழுந்தது.

'ஓடு ஓடு' என்று மூளை விரட்டிற்று. யாரோ வீட்டில் இருந்து நாயொன்று உறுமிற்று. எழுந்து ஓட செருப்பு அறுந்து இழுபட்டது. செருப்பை உதறிவிட்டு ஓட நாய் விரட்டிற்று.

*

அங்க பதுங்கி இங்க பதுங்கி ஓடியும் ஒளிந்தும் கல்முனையில் இருந்து மருதமுனைக்கு வர மூன்று மணித்தியாலயும் எடுத்தது தங்கராசா ஹாஜியாருக்கு.

''கடக்கர பள்ளிக்கு நேத்திக்கடன் வச்சநான். என்ட அல்லா கொண்டத்து உட்டுத்தாரு....''

''என்னது ஒங்கட கால்ல இருந்து எரத்தம் வழியிது... என்ட அல்லோவ்.....''

தங்கராசா ஹாஜியாரின் மனைவி நஸீமா பதறினாள்.

''இரியிங்க.. இரியிங்க... ஹறா முல பொறந்ததுகள் என்னவோ செஞ்சி போயித்தானுகள்... எண்டப்பே எனக்கி பயமா இரிக்கி வாப்பா....''

''ஆ....ச்சி. சும்மா என்னத்துக்கு கொழர்றா? வாய பொத்திச்சு கெட். ஒடியரக்குள்ள உழுந்துத்தன். லாம்பெண்ணை ஒள்ளம் எடுத்துக்கு வா! லாம் பெண்ணய தேச்சா அசடு புடிச்சிரும். மரமஞ்சள் இருந்தா ஒள்ளம் ஊறவை. கம்பியும் கிழிச்சித்து. இவன் முசுதப்பா எங்க?''

'தின்றான். காயத்த கட்டுங்க...'' நஸீமாவின் அழுகை அடங்கிற்று.

''தின்றானா? இந்த ஊத்திலையா?''

காயத்தைக் காட்டினார். ஆழமான கிழியல் தான்.

''முசுதப்பா....''

''.....''

''முசுதப்பா....''


''ஓவ்''

''எங்க இரிக்காய்?''

''இஞ்ச... சோறு தின்றன்''

''சோறு தின்றாயா? என்னடா ஒப்பாய் இது ஊத்துக்கெட்ட நேரத்தில.. ஒழைக்கிற நேரத்தில ஒழைக்க ஒணும் தின்ற நேரத்தில் தின்னோணும் எண்டு அல்லா செல்லியிருக்கார்ரா வாப்பா... நீ

→



ஊத்துக்கெட்ட நேரத்திலையெல்லாம் திண்டா மார்க்கத்துக்கு அடுக்குமா? வயது வந்த புள்ளக்கி ஒள்ளமெண்டாலும் லோசின இருக்கிறல்லையா? மார்க்கெற்றுக்கு வராம எங்க போன நீ?''

''உம்மோவ்... வெறும் சோத்த திண்றங்கா. ஒள்ளம் வந்து ஆணம் ஊத்தன்....''

அடுக்களையில் இருந்து சத்தம் பலமாய் வந்தது.

''ஊத்தி தின்றுமேனேய். வாப்பாக்கு கால்ல காயம். லாம்பெண்ண போட்டு தேய்க்கிறன். தொட்டா கறியில நாறும்...''

வீதியில் வாகனங்கள் இரையத்தொடங்கிற்று. சனம் கூட நடமாடத் தொடங்கிவிட்டது போலும். சலசலப்பு கேட்டது. விசாரிப்புக்கள். எண்ணிக் கைகள். சேதக்கணக்கெடுப்புகள் எல்லாம் களைகட்டத் தொடங்கிற்று. வீட்டுக்குள் இருந்து கொண்டே வீதியில் இன்னதுதான் நடக்கும் என்று ஊகிக்க முடியும். தங்கராசா ஹாஜியார் ஊகித்துக் கொண்டார்.

''என்ன வாப்பா கால்ல காயம்? உழுந்தித்தியா?'' முஸ்தப்பா ஈரவாயை சாறனால் துடைத்துக் கொண்டு கேட்டான்.

''அதொண்டும் இல்ல. எங்க போன நீ மாறகட்டுக்கு வராம?''

''பந்தடிக்க!''

''என்னடா வாப்பா இது. பதினேழு வயது புள்ள விசினச பாக்காம ஹராமா திரிஞ்சா மார்க்கத்துக்கு அடுக்குமா?''

முஸ்தபா சாரனை உதறி உடுத்திக்கொண்டான்.

''களுதாவளைக்கு பொயித்து வாறியா?''

ஹாஜியார் கேட்க - முஸ்தபா வெருண்டு அவரை நோக்கினான்.

''எனக்கொண்ணா!'' மொட்டையாய் மறுத்தான். ஒரு வகை பீதி படீரென அவன் முகத்தில் பரவிக்கொண்டது.

''புள்ளய ஏன் அங்க போகச் சொல்றயள். எசக்ககாறனுகள் களுதாவளையில குமிஞ்சிபோய் கெடக்கானுகள். நேத்தும் ஆமிக்காறனுகள் றவுண்டப்பு செஞ்சி ஆக்கள புடிச்சிப் போன எண்டு நீங்கலுவோ சென்ன.''

''வெங்காயம் மூட்டையா கெடக்கு. மயண்டக்க மாக்கெற்றுக்குப் போய் சொரியப் போட வேணும். அப்புடியே உட்டா நாளைக்கு சூடு புடிச்சி அழுகிப்போயிரும். களுதாவளைக்கு நான் இப்ப போனா ஆரு சொரியப் போடுறது...?''

''நாளைக்கு நீங்களே போனா என்ன...?''

''என்ன நம்பி வெங்காயத்த தந்தவனுகள் எலுவா? நாம காசக்குடுத்தாலுவா அவனுகளும் சோத்த கீத்த ஆக்கி தின்ன ஏலும். எனக்கு நெஞ்சிக்குள்ளையும் ஒரு சாங்கமா இரிக்கி. ஒரு வெங்காயம் கூட இண்டைக்கு யாவாரம் நடக்கல. மார்க்கற்ட்டு நேச்சர் சரியான சவுப்பு. அம்பது அந்தரும் நாளைக்கு ஒரு அந்தர் தண்ணி வற்றும். ஒரு நாளைக்கு நானூத்தம்பது ரூபா நமக்கு தான் நட்டம். நம்மட நட்டம் நம்மளோட அவனுகளுக்கு காசைக்குடுக்கத்தானே வேணும் பாவம். ஒள்ளம் தண்ணி எடுத்துவா நெஞ்சுக்குள்ள அடைக்கிது...''

நஸீமா தண்ணீர் எடுக்க உள்ளே போக - முஸ்தபா அப்படியே நின்று கொண்டிருந்தான்.

''வஸி ஓடுல்ல வாப்பா. நான் எப்படி போறது?''

''நீலாவணையில இருந்து வஸி ஓடும். சக்கில்ல நீலாவணைக்கு போய் அங்க இருந்து. வஸிலை போ! அலுமாரி றாக்கயில ஆயிரத்தி ஐநூறு இரிக்கி. எடு! நாளக்கி வாறணம் எண்டு கணவதித்த செல்லு. மாக்கட்டு சரியான சவுப்பு. இண்டைக்கு இவ்வளவையும் வெச்சிக்க செல்லு. சொச்சத்த மறுகா நான் கொண்டு வாறனாம் எண்டு செல்லன் என்ன. ஒண்ட அடையாள காட்ட மறக்காம எடுத்துப் போடா ஒப்பாய். மறுகணி அது பெரிய ஒசரியா போயிரும்.''

முஸ்தபா பணத்தை எடுத்துக்கொண்டு சைக்கிளை உருட்டியபடி அரைமனதுடன் வீதிக்கு வந்தான்.

ஆட்கள் நடமாடினார்கள். ஒன்றிரண்டு கடைகள் திறந்திருந்தது. சிலகடைகள் ஒற்றைப் பலகையுடன் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தன. சைக்கிள்கள் மாத்திரம்தான் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நகர்ந்துகொண்டிருந்தன. வாகனங்களின் இரையல் சத்தம் மாத்திரம் கேட்டது. வாகனங்களைக் காணவில்லை.

சைக்கிளை மிதித்தான் முஸ்தபா.

அண்டங்காக்கை ஒன்று பள்ளிவாசல் ஸ்பீக்கரில் அமர்ந்து கொண்டு வீதியை பிராக்குப் பார்த்தது. காற்று பலமாய் வீச அரிசி ஆலையில இருந்து உமி பறந்து வீதிக்கு வந்தது. அண்டங்காக்கை இறகை விரித்து காற்றில் சாய்ந்து விடாதபடி சமநிலை பண்ணிக்கொண்டு அப்படியே நின்றது.

✱

''ஒங்கட வாப்பா எங்க?''

கணபதியின் வீட்டில் அவன் பத்து வயது மகன் மாத்திரமே நின்றான்.

''ஆரு?''

பையன் விழித்தான்.

''வாப்பா?''

''ஆரு?''

''உங்கட அப்பா!''

பையன் புன்னகைத்தான். ''அவரு வெங்காயக் காலைக்குள்ள பொயித்தாரு.''

''அம்மா?''

''அவவு நெல்லுக்குத்த பொயித்தாவு!''

''வெங்காயக்கால எங்க இரிக்கி?''

எப்போதோ வாப்பாவுடன் வந்துது இப்போது மறந்து போயிருந்தது முஸ்தபாவுக்கு.

''சவக்காலக்கி கிட்ட!''

''சவக்கால எங்க இரிக்கி?''

''எங்கட காலைக்கி கிட்டத்தான்!''

''வாவன் போவம். காசி குடுக்கவேணும்.''

''எனகொண்ணாப்பா அங்கபேய் இரிக்கி. அம்மா வந்தா ஏசிவாவு.''

பையன் அசையமாட்டான் என்பது முஸ்தபாவுக்கு புரிந்து போனது. வேறு யாரிடமாவது வழிகேட்டுப் போவது புத்தி என்றே தோன்றிற்று.

எதிர்க்க ஒருவர் வர வழி விசாரித்தான். வந்தவர் சொன்னார். அவர் சொன்ன வழி முழுவதும் மணலாக இருந்தது. இந்த சொரி மணலில் எப்படித்தான் வெங்காயம் விளைவிக்கின்றார்களோ? முஸ்தபா அதிசயித்துக்கொண்டே புதைந்து புதைந்து நடந்தான். வழியில் தென்பட்டவர்களிடமும் சரியான வழிதானா என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டே நடந்தான்.

கடல் அலையின் ஓசை கிட்டத்தில் கேட்டது. சவக்காலை கூடத் தெரிந்தது. புதிதாக கிட்டத்தில் யாரோ செத்திருக்கின்றார்கள். வாடாத சவக் கட்டில் ஒன்று கவுண்டு போய்க்கிடந்தது. வெட்டிய இளநீர் கோம்பைகள் மண்குடங்கள் கூடக்கிடந்தது.

பார்வையை சுற்றிச் சுழலவிட கணபதி தென்பட்டான்.

ஒன்றிரண்டு தடவை சந்தையில் பார்த்ததுண்டு.

'அண்ணாச்சி!'' முஸ்தபா கூவினான்.

மண்வெட்டியை வைத்து விட்டு கணபதி சுற்றும் முற்றும் பார்த்தான். முஸ்த்தப்பாவை கணபதி காணவில்லை. கச்சையை இறுக்கி பின்பக்கமாய் தொங்கியதை இழுத்து அரைஞாண் கயிறுடன் இணைத்துவிட்டு மறுபடி நிலத்தைக் கொத்தினான்.

''அண்ணாச்சி...!''

மறுபடி கூவினான்.

கணபதிக்கு அசூசையாக இருந்தது. மண்வெட்டியை ஓரமாய் வைத்துவிட்டு சாறனை உடுத்திக்கொண்டான். கொத்துவேலிவரை வந்து எட்டிப்பார்க்க முஸ்தப்பா புன்னகைத்தான்.

''என்னம்பி நீ வந்திருக்கிறாய் காக்கா வரல்லயா?''

''வாப்பாவுக்கு ஒள்ளம் சொகம் இல்ல. வெங்காயமும் சொரியப் போடவேணுமாம். அது தான் காசிகொண்டு நான் வந்தது.

முஸ்தபா காசை நீட்டினான். கணபதியின் முகம் புன்னகையாயிற்று. வாங்கிய பணத்தை எண்ணிக் கொண்டு போகும்போதே கணபதியின் புன்னகை மெதுமெதுவாய் அடங்கி எண்ணி முடிய முகம் சுருங்கிற்று.

''என்ன ஆயிரத்தி ஐநூறுதான் இரிக்கி?''

''வசாரில என்னவோ பிரச்சன எண்டு யாவாரி மாரு வரல்லையாம்.''

''அதுக்கு?''

கணபதியின் குரல் இறுகிற்று.

''மறுகணி சொச்சத்த கொண்டு தாறாராம்.''

''என்ன புழுத்தின வேலை இது. நாங்க வெங்காயத்தை புடுங்கி கட்டிக்குடுத்தா பூழலியாரு அவற்ர வேலய பாத்துத்து திரியிறாரா?'' அவசியமா இந்த கோபத் தழும்பல் என்று கணபதிக்கு புரியாமல் இருந்தது.

''ஏன் அண்ணாச்சி இப்படிக் கதைக்கிறாய்?'' முஸ்தபா கவலைப் பட்டுக்கொண்டான்.

''கதைக்காம....'' பேச்சை முறித்தான். தண்ணீர் இறைக்கும் இயந்திரம் எங்கோ குடுகுடுத்தது. குடுகுடுத்த திசையை கணபதி பார்த்தான். மண்ணெண்ணெய் புகை காற்றில் கலந்தது.

''பசள தந்தவன் வெத வெங்காயம் தந்தவனுக்கெல்லாம் என்ன பணியாரத்தை குடுக்கிறது....''

''ஒங்களுக்கென்ன நீங்க தொப்பிய பெரட்டிப் போட்டு போயிருவியள்....''

''எங்க தொப்பி பெரட்டுன நாங்க?''

முஸ்தப்பா வார்த்தை கூட மென்மை இழந்தது.

''என்ன கணவதி?''

அடுத்த வெங்காயத் தோட்டத்திலிருந்த சிவலிங்கம் எட்டிப்பார்த்தான்.

''இந்த தங்கராசா காக்கா வெங்காயம் வாங்கி பொயித்து வெறும் ஆயிரத்து ஐநூறு அனுப்பியிரிக்காண்டாப்பா.

''ஆங்.. நான் என்னவோ எண்டு நெனச்சன்.'' கொத்துவேலிக்குள் சிவலிங்கத்தின் தலை சுவாரஸ்யம் இல்லாமல் முடங்கிக்கொண்டது.

''சும்மாதேவல்லாத கத கதக்க வேணாம். நான் வாப்பாட்ட செல்றன். அவரோட கத.....''

முஸ்த்தப்பா போய்க் கொண்டே இறைந்தான்.

✱

ஊர் முழுதாய் இருட்டி விட்டது. வீதியில் நிசப்தம். ஆழ்ந்த நித்திரை போன்ற உறக்கம். வாகனம் எதுவும் வருவதாய் இல்லை. தூரத்தில் கூட வாகனம் இரையும் சத்தம் கூட கேட்கவில்லை. ஊருக்குள் மாத்திரம் ஏதேதோ சத்தம் கேட்டது.

''புள்ள குட்டிய பட்டினி போட்டுத்து குடிச்சித் திரியிறேடா பாதகா....''

''பெண் ஒருத்தி புலம்பும் சத்தம் மெலியதாய் கேட்டது.....''

''எண்டம்மோவ்.. எண்டம் மோவ்... பாதகன் கொல்றானே....''

இடைவெளிவிட்டு அதே பெண்ணின் குரல் பலமாய்க் கேட்டது. பின்னணியில் பிள்ளைகள் விசும்பும் சத்தம்.

முஸ்தப்பாவுக்கு லேசாய் பயம் வந்தது. பஸ் கிடைக்காது போனால் என்ன செய்வது? எதிர்க்க இருந்த வாசிகசாலைக்குள் சரசரப்பு கேட்டது. அது இருட்டிக் கிடந்தது.

வாசிகசாலைதான் அது என்பது தோற்றத்தில் தான் அறிய முடிகிறது. கட்டாக்காலி மாடுகள் இரண்டு வாசிகசாலைக்குள் இருந்து வெளி வந்தது.

''சே... சைக்கிலிலையே வந்திருக்கலாம்''. சலித்துக் கொண்டு சரிந்து கிடந்த தொலைபேசிக்கம்பம் ஒன்றில் குந்திக்கொண்டான்.

தூரத்தில் குளத்து வெளியால் பிள்ளையார் கோவில் மெர்குரி வெளிச்சம் தெரிந்தது. தெருவோரமாய் ஒரு நாய் வேதனையால் முனங்கிக்கொண்டு - வாலை மடக்கி பின்னங்கால்களுக்குள் செருகிக் கொண்டு அவனைக் கடந்து ஓடிற்று....

மூன்று நான்கு அடிகள் இடைவெளிவிட்டு இன்னும் இரண்டு நாய்கள் முன்னைய நாயை விரட்டிப் போயின.... ஓடுகின்ற நாயைவிட விரட்டுகின்ற நாய்கள் உருவத்தில் பெரிதாய் இருந்தன. வேகமாயும் ஓடின... கொஞ்சம் இடைவெளிவிட்டு இன்னோர் நாய் சுவாரஸ்யம் இல்லாமல் ஓடி அவனைக் கடந்தது... சில அடிகள் தாண்டி ஓட்டத்தை நிறுத்தி சடுதியாய் நின்றது சிலகணம் அப்படி நின்று வந்து திரும்பிப் பார்த்தது. மெதுவான வேகத்தில் திரும்ப ஓடி வந்து முஸ்தப்பா முன் வந்தது. எதிர்க்க இருந்த விளக்கு இல்லாத விளக்குக் கம்பத்தில் பின்னங்காலைத் தூக்கி முட்டுக்கொடுத்துக்கொண்டு சிறுநீர் கழித்தது. கழித்து முடிந்ததும் முஸ்தப்பாவை உற்றுப்பார்த்தது... பார்த்துக்கொண்டே உறுமியது.

''உஞ்சு... ஞ்சு...ஞ்சு...ஞ்சு....'' அதற்கு புரியும் பாசையில் முஸ்தப்பா அழைக்க வாலை ஆட்டிக்கொண்டு அவனை நெருங்கி வந்தது. முஸ்தப்பா பயந்தான்! நாய் அவனை முகர்ந்து பார்த்தது.

''ஆர்ராது நடு ஊத்தில....''

யாரோ ஒரு குடிகாரர் உளறிக்கொண்டே அவனைத்தாண்டி இடறிப்போனார்... நாய் அவர் பின்னே ஓடிற்று....

''ச் தூ... போ...!''

அந்தக் குடிகாரர் நாயைப் பார்த்து துப்பினார். அது நாயின் வாயைக் கட்டும் மந்திரம் போலும். நாய் அவருக்குக் குரைத்தது.

→16

15→

குரைத்த நாய்க்கு காலை ஓங்க - ஓங்கியகாலை நாய் கவ்விப் பிடித்து இழுத்தது.

''எண்ட அம்மோவ்...!'' கூவிக்கொண்டே அவர் ஓடினார். நாய் விரட்டிற்று. அப்புறம் தூரத்தில் ஆள் விழுகின்ற சத்தம் கேட்டது. லேசாக புன்னகைத்துக் கொண்டான் முஸ்தபா.

இருட்டின் தொலைவில் மேற்குப் பக்கமாய் ஆற்றுக்கு அப்பால் சிறு சிறு வெளிச்சங்கள் தெரிந்தது. அது பழுகாமத்தில் ஏதாவது கோவிலாக இருக்கலாம்.

''டேய் ஆர்ரா நீ...?''

இனம் தெரியாத ஒரு குரல், அதுவும் முரட்டுக் குரல். அசரீரி மாதிரிக் கேட்டது.

முஸ்தப்பா அருண்டு போனான். கல்லைவிட்டு எழுந்து கொண்டான். சுற்றும் முற்றும் பார்த்தான். வாசிகசாலைக்குள் திரும்பவும் சரசரப்புக் கேட்டது.

பின்பக்கவேலிக்குள் இருந்து இரண்டுபேர் வருவது தெரிந்தது. வாசிகசாலைக்குள் இருந்தும் யாரோ வருவதும் தெரிந்தது... முஸ்தப்பாக்கு நிலைமையை புரிந்து கொள்ள முடிந்தது.

''அது நான் முஸ்தபா...!'' குரல் தட்டுத் தடுமாறிற்று. நாக்கு வரண்டது.

மூன்று பேர் அவனைச் சுற்றி நின்று கொண்டார்கள். அவர்கள் துவக்கு வைத்திருக்கிறார்கள்.

கையைத் தூக்கவைத்து ஆடைகளை அவிழ்த்துப் பார்த்தார்கள்.

''என்ன செய்யிரா இஞ்ச?''

எவன் கேட்டான் என்று தெரியவில்லை.

''வஸிக்கி நிக்கன்''

''எவடம் நீ?''

''மருதமுனை!''

''இஞ்ச ஏன் வந்த நீ?''

''காசி குடுக்க!''

''ஆருக்கு?''

''கணவதிக்கு!''

''எந்தக் கணவதிக்கு?''

வேறொரு கரகரத்த முரட்டுக்குரல்...

''எந்தக் கணபதி?'' முஸ்தபாவுக்கு புரியாது வியர்த்தது.

''வெங்காயம் செய்யிற கணவதிக்கு!''

''டேய் நடடா!''

முன்னைய குரல்காரன் உறுமினான்...

''எ....ங்...க...?''

முஸ்தபாவின் மண்டைக்குள் விறுவிறுத்தது. என்னவோ விபரீதம் என்று மூளை புலம்பிற்று.

''ஒன்ன விசாரிக்க வேணும்.''

''கணபதி அண்ணனிட்ட கேட்டுப்பாருங்க நான் காசி குடுக்கத்தான் வந்த...''

''எந்தக் கணபதிடா...?''

உறுமலின் வேகம் முஸ்தபாவின் மார்பில் விழுந்த உதையில் தெரிந்தது. முஸ்தபா மல்லாந்து விழுந்தான்.

''எண்ட உம்மோவ்....''

இந்த ஈனஸ்வர ஓசை பலமாய் எழுந்ததால் சில வீடுகளில் எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்குகளை உடனடியாய் அணைய வைத்தது....

''எங்களுக்கு தெரியும்டா. வெங்காயம் வாங்கிறம். கத்திரிக்கா வாங்கிறம் எண்டுபோட்டு ஊருக்குள் எங்க எங்க நாங்க இரிக்கம் எண்டு ஆமிக்கு சொல்ற ஆக்கள் ஆரெண்டு எங்களுக்கு தெரியும்டா....!''

''நான் அப்படி இல்லை... இண்டைக்கித்தான் மொதலா வந்த.. கணவதி அண்ணனிட்ட கேட்டுப் பாருங்க. எங்க வாப்பா கூட பொடியனுகளுக்கு காசி குடுக்கிற.... வேணும்டா கணவதி அண்ணனிட்ட கேட்டுப்பாருங்க...''

''ஒழும்புடா.. ஒழும்பி நட.. கணவதி ஊட்டக் காட்டு''

முஸ்தபா தட்டுத்தடுமாறி எழுந்து நின்றான்.

எழும்பி நின்றவனின் முதுகில் ஒருவன் ஓடிவந்து உதைத்தான். முஸ்தபா தார்வீதியில் குப்புற விழுந்து தேய்பட்டு சிறுதூரம் இழுபட்டான். முகத்தில் எங்கிருந்தோ இரத்தம் கசிந்தது...

அழுதான். யாரும் அலட்டிக் கொள்ளவில்லை.

சேர்ட்டை கொத்தாய் பிடித்து ஒருவன் நிமிர்த்த முஸ்த்தப்பா சிரமமாய் எழுந்தான். மறுபடி உதைத்தான் ஒருவன் பின்பக்கமாய். நிலை தடுமாறி குப்புற விழுகிற போது எதிர்க்க போனவன் மார்பில் உதைக்க முஸ்தபா விழாது இருந்தான். வாய்க்குள் புதுவகை இதுவரை நுகராத வாடையை சுவைக்க முடிந்தது. லேசாய் உப்பக் கரிப்பது மாதிரியும் இருந்தது.

கணவதியின் வீட்டைக் காட்டும் வரை முஸ்தபா நிலத்தில் விழவே இல்லை., அப்புறம் சரிந்து மணலில் முகம் புதைய விழுந்து விட்டான்.

''கணவதி...!'' சிறு இடைவெளி. ''கணவதி...!' பலமாய் ஒருவன் கணவதி வீட்டுவாசலில் நின்று கூவினான்.

கணவதி வீடு மந்தமாய் உறங்கிக்கிடந்தது.

''கணவதி... கணவதி...''

''ஆர்ராது நடு ஊத்தில...?''

கணவதியின் குரல் எரிச்சலாய் வீட்டின் உள்கேட்டது.

''வெட்டைக்கு வா!''

வாசல்வரை தலையில் இடித்துவிடாதபடி கணபதி குனிந்து வந்தான். குப்பி விளக்கொன்றுடன் அவன் மனைவி நிமிர்ந்தே வந்தாள். அவள் நிறையவே குள்ளமாய் இருந்தாள்.

''ஆரது...?''

''இஞ்ச வா!'' ஒழுங்கைக்குள் இருந்து சத்தம் வந்தது.

நெருங்கிப்போய் யார் என்பதை அடையாளம் கண்டுகொண்டு பவ்வியமாய் மார்புக்குக் குறுக்காய் கைகளைக் கட்டிக்கொண்டு ''நான் ஆரோ குடிகாறனாக்கும் எண்டு நெனச்சிற்றன். பிழையா நினைக்காதிங்க தம்பி'' என்றான் கணபதி.

''ஒனக்கு இவன தெரியுமா?''

குளிர்காற்று ஒழுங்கையால் போனது.

''ஆரு?''

ஒரு மருதமுனை முக்கால். ஒனக்கு காசி தர வந்தானாம் எண்டு சொல்றான்.

சுருண்டு முனங்கக் கூட முடியாது ஒழுங்கையில் சுருண்டு கிடக்கும் முஸ்தபாவை அப்போதுதான் கணபதி கண்டுகொண்டான். மௌனமாய் குனிந்து அவனை உற்றுப் பார்த்தான்.

''என்ட கடவுளே எனக்கு காசி தர ஒருவனும் வரல்லப்பா. இப்படித்தான் கன்க்க சி.ஐ.டி.மாரு ஊருக்குள்ள திரியிறானுகள். நேத்தோ முந்தா நாளோகூட தேத்தாத்தீவில ரெண்டு சி.ஐ.டிய பொடியனுகள் புடிச்சவனுகளாம்.

சொல்லிக்கொண்டே இர்ண்டு எட்டுபின் வைத்தான் கணபதி. அவன் மனைவி எதுவும் புரியாது மௌனமாய்த் திகைத்து நின்றாள்.

கணபதி சொல்வது முஸ்த்தப்பாவுக்கு இரையலாய் கேட்டது. ஆயினும் புரிந்தது. முஸ்த்தப்பா மறுத்தான். அது அவனுக்கே புரியவில்லை. முனங்கக் கூட முடியாது கிடந்தான்.

முஸ்த்தப்பாவை காலைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனார்கள். பீதி படர்ந்த கணபதியின் மனைவி கணபதியைப் மந்தமாய்ப் பார்த்தாள். கணபதி புன்னகைத்துக்கொண்டே பாயில் சரிந்தான்.

தூக்கம் வரமறுத்து. புலன் அலைந்தது. காது கூர்மையாய் எதையோ எதிர்பார்த்தது. நேரம் நீண்டது. அரைகுறைத் தூக்கம்... விழிப்பும் தூக்கமும் அற்ற மந்தமான மயக்க நிலை...

தூரத்தில் ஒற்றை வேட்டுச் சத்தம் தீர்ந்து அடங்கிற்று. வளர்ப்பு நாய் ஓடிவந்து தாழ்வாரத்தில் பதுங்கிக்கொள்வதை உணரமுடிந்தது.

''ஆயிரத்து ஐநூறு ரூபாய் கையோ கம்மாரிசு''

கணபதி மனசுக்குள் பேய் கூவிற்று.

திடுக்கிட்டு அவன் மனைவிக் கண் விழித்து கணபதியைப் பார்த்தாள்.

தாழ்வாரத்தில் பதுங்கிய வளர்ப்பு நாய் ஏனோ எழுந்து ஓடிற்று... தூரத்தில் எங்கோ நின்று குரைக்கிற சத்தம் கொஞ்சம் இடைவெளி விட்டுக் கேட்டது.

○

# புதுப்பாடு...

## நான்

நான் எங்கு இருக்கிறேன்
எனக்கு,
என்னாலேயே இந்த 'நான்' ஐ
தெரிந்து கொள்ள முடியவில்லையே!
எதனை நான் 'நான்' என்கின்றேன்!
முகத்தை அப்பி நிற்கும் தலையிலா
அல்லது,
இரத்தமும் நாடி நரம்புகளும் . . .
சோணையறைகளையும் தாங்கி நிற்கும்
இருதயப் பிரதேசத்தினுள்ளா இந்த 'நான்' இருக்கிறேன்!

எனக்குத் தெரியவில்லை
நீங்களாவது கூறுங்கள்!
நீங்கள் 'நான்' என்று கூறுவது எதனை?
எங்களில் எவ்விடத்தில்
நீங்கள் 'நான்' ஆக இருக்கிறீர்கள்?
உங்கள் முழு உடலுறுப்புக்களுமே சேர
'நான்' என்கிறீர்களா?

ஆனால்,
ஒன்று மட்டும் தெரிகிறது!
என்னுடலில் எங்கோ ஓரிடத்தில்
இந்த நான் இருக்கிறது!
இந்த நான் இருக்கிறேன்!
கண்களினூடே விரியும் இந்தப் பிரபஞ்சத்தில்
பார்வைகள் மூலம் 'நான்' பரவுகின்றேன்!
என் உடலுறுப்புக்கள் மூலம் நுகர்கிறேன்!
ஆம்! என்னுள் எங்கோ ஓரிடத்தில்
நானே என்னை நான் என்று சொல்லிகொள்கின்ற
இந்த நான்'ஐ நான் உணர்கின்றேன்!
அதுவே நானாக வாழ்கிறேன்.

○ சபா சபேஷன்

## தெற்கின் தோழிக்கு

தோழி.. நீ வா
நாம் கரம் கோர்ப்போம்
எல்லைகள் எமக்கெதற்கு?

சமாதானம் பேசிப் பேசியே
ஆள விளைபவர்களும்
மேடுகளாகும் என்ற கனவில்
புதைகுழிகளை விதைப்பவர்களும்
இங்கிருந்து தொலைந்தே போகட்டும்

இரத்தக் கறைகள்
கறை தோய் உடலங்கள்
சாம்பல் சூழ் சூழல்
இவை தான்
எமக்குரிய நாட்களுக்கு
விதிக்கப்பட்ட நிகழ்வுகளா?
ஆயின்
எம் தொடரிகளுக்கு....?

வேண்டாம்
இந்தக் கோரம்
நீ வா,
நாம் கரம் இணைவோம்
எமக்கான நாட்களை மீட்டு வாழ்வோம்
சில கணமேனும்

நீயும்
நானுமாவது

மனங்கள் உருவேற்றப்பட முன்பும்
கரங்கள் விலங்கிடப்பட முன்பும்
முகங்கள் தொலைந்து போக முன்பும்

நாங்களாவோம்,
மனிதம் உடை மனிதராவோம்

○ யாழ். ஆதிரை

## ஏக்கம்

சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியாமல்
என்மேல் எனக்கே வெறுப்பு
நீ சென்ற பாதையில் நான். . . முடியவில்லை
குறும்புடன் கூடிய பாடசாலை நாட்கள் . . .
சுவரேறிச் சென்று கடற்கரையில் கட்டிப்புரண்டதையும்
வெள்ளிக் கிழமையில் வீடறியாது புலாலுண்டதையும்
அவரின் சிரிப்பில்
வேலிச் செத்தைக்குள் மோதி விழுந்ததையும்
பரீட்சை நேரத்தில்
பாய்ந்து பாய்ந்து படித்ததையும் . . நினைக்கும் போது
நாம் சந்தோஷமாகத் தானே இருந்தோம். . .

நீ ஏன் சென்றாய்?
இன்று நான் உணர்ந்து கொண்டிருப்பதை
அன்று நீ உணர்ந்து கொண்டாயோ!
ஆயினும் என்னால் இன்னும் முடியவில்லை. ..
என்னையிறுக்கும் சங்கிலிகளை உடைக்க மனமில்லை
நீ சென்றபின் என்னை ரணப்படுத்திய
'சமாதானத்தின் பாதுகாவலர்களை' நினைக்கும் போதும்-
பூத்துக் குலுங்கிய எங்கள் மலர்களை
அவர்கள் கசக்கியெறிந்த போதும்
அவர் தேடலில் காணாமல் போய்விட்ட
எ(உ)னதருமை தோழர்களையெண்ணும் போதும்,
'சமாதான' விரும்பிகளாகிவிட்ட எங்களின
வெற்றுத் தோட்டாக்களின் வீறாப்பின் போதும்,
எனது கடிவாளங்கள் இளகத் தொடங்கி விட்டன
இவற்றை உடைத்து உறுதியாய் எழுவேன்

எனக்கும் ஒரு வில்லை வைத்திரு
இல்லையேல் நீ துயிலும் இல்லத்தில்
எனுக்கோர் இடம் வைத்துவிடு.

○ — பி.எஸ்.ஏ

## அது எனக்கானதாய்

ஊமத்தையும் கோட்டானும்
எங்கோ தூரத்தே
பசியிலோ,
உண்ட
திருப்தியிலோ கத்துகிறது
ஆனால்
அது எனக்கானதாய் எண்ணி மனசு திடுக்கிடும்
தெருவில்
பட படத்துப் போகும் வண்டி வாகனங்கள்
தெரு முனை தாண்டும் வரை
என் மனசுக்குள்ளும் பட படப்பு!

தெருத் தூங்கி நாயின் ஊளைச் சத்தம்
இறுதி மூச்சுக்கான
எச்சரிக்கையாய் -
என் உள்ளம் நடுங்குகிறது.
எதுவோ எதற்கோ
எப்படி நடந்தாலும்
ஏனோ என் இறுதிக்கே
என்பதாய் எனக்கானதாகவே
மனசு திடுக்கிடுகிறது!


எனது அடிகள்
அவதானம் கொள்கின்றன
தவறு எனப்படுவதிலிருந்து
தவறிக் கொண்டிருந்தாலும்
ஏனோ வோர் நடுக்கம்

ஆனாலும்,
வலிந்தும் தரப்பட்டுவிடுமோ?
அது!

○ இளவரசு

## நூல் விமர்சனம்

# ஈழத்து சமகால தமிழ் இலக்கியம் : பொருத்தமான தலைப்புத்தானா?




செ.யோகராசா

கடந்த சில வருடங்களாக கலை, இலக்கியம் தொடர்பான கருத்தரங்குகளை நடத்திவரும் 'விபவி' கலாசார மையம் அத்தகைய கருத்தரங்குக் கட்டுரைகளை நூற்தொகுப்புகளாக்கும் முயற்சியில் தற்போது கரிசனை காட்டத்தொடங்கியுள்ளது. இவ்விதத்தில் ஐந்து கட்டுரைகள் 'ஈழத்து சமகால இலக்கியம்' என்ற மகுடத்தில் அண்மையில் ஒரு தொகுப்பாகவெளிவந்துள்ளது.

இத்தொகுப்பிலுள்ள கட்டுரைகளுள் ஒன்று, 'ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் மலையக எழுத்தாளர்களின் பங்கு' (தெளிவத்தை ஜோசப்) என்பது. இக்கட்டுரை, இக்கட்டுரையாளராலும், பிறராலும் பலதடவை எழுதப்பட்டுள்ள/ வாசிக்கப்பட்டுள்ள விடயங்களின் இன்னொரு அவதாரமாகும். பொதுவாக, மலையக இலக்கியம் பற்றிய கட்டுரைகள் பலவற்றிலும் ஆரம்பத்தில் மலையக நாட்டார் பாடல்களின் முக்கியத்துவமும் முற்பட்ட வரலாறும் அதிகம் பேசப்படும் (24 பக்கங்களைக் கொண்டு இக்கட்டுரையிலும் 8 பக்கங்கள் இதற்கே ஒதுக்கப்பட்டுள்ளன) தொடர்ந்து, வரலாற்று ரீதியில் பட்டியல்களிலிட்டு சில குறிப்புகள் கூறப்படும். மலையக ஆய்வாளர் இனிமேலாவது அவற்றைத் தவிர்த்து ஆழமாகவோ, புதிய நோக்குகளிலோ மலையக இலக்கியத்தை ஆராய வேண்டியது அவசியமாகிறது. (உதாரணமாக, ஈழத்து நவீன கவிதை வளர்ச்சிபற்றி கூர்மையாக அவதானிப்பின், மீனாட்சியம்மாள்நடேசய்யர் பெறுமிடம் முதன்மையானதென்பது தெரியவரும். அவ்வாறே Orature என்று இன்று சமூகவியலாளரால் முதன்மைப்படுத்தப்படும் வாய்மொழி இலக்கியமரபு பற்றி அவதானிப்பின் வேல்சாமிதாசன் போன்ற பல கவிஞரின் முதன்மை தெரியவரும்.)

மற்றொரு கட்டுரை, 'ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு' (திக்குவல்லை கமால்) என்பது. மேற்கூறிய கட்டுரைபோன்றே இதுவும் பொதுவாக ஷம்ஸ் போன்றோரால் ஏற்கெனவே பேசப்பட்ட விடயங்களையே முன்வைக்கிறது. தவிர, முஸ்லிம் எழுத்தாளரின் முஸ்லிம் இலக்கியம் தொடர்பான (தமிழ்ப்) பங்களிப்பு என்று நோக்கும்போது நிச்சயமாகக் கட்டுரையாளர் சில கவிஞர்கள், சில எழுத்தாளர்கள்பற்றி சுருக்கமாக வேனும் ஆழமான கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கவேண்டும். ஐம்பதுகளில் முஸ்லிம் பெண்கள் நிலைமை பற்றி கவிதையில் புரட்சிக் கருத்துக்களை முன்வைத்த புரட்சிக் கமால், அதே காலப்பகுதியில் சிறுகதையில் புரட்சிக் கருத்துக்களை முன்வைத்த பித்தன், அறுபதுகளில் முஸ்லிம்களின் வாழ்க்கையை மார்க்சிய நோக்கில் கலைத்துவமாக வெளிப்படுத்திய மருதூர்க்கொத்தன், எழுபதுகளில் முஸ்லிம் மக்களது பண்பாட்டுக் கோலங்களைச் சிறுவர் கவிதையூடே வெளிப்படுத்திய நாகூர்பாவா, சமூக அங்கத நோக்குடன் நவீன. காவியம் பாடிய அப்துல் காதர் லெப்பை, எண்பதுகளில் முஸ்லிம் மக்களது பேச்சுவழக்குகளை கவிதைகளில் பதிவுசெய்த சோலைக்கிளி மற்றும் மன்சூர் ஏ.காதர், வேதாந்தி முதலியோரது சிறுகதைப்படைப்புக்கள் பற்றி இயன்றவரை சில குறிப்புக்களாவது தந்திருக்கவேண்டும். முஸ்லிம் படைப்பாளரைப் பொறுத்தவரையில் 'இன்ஸான்' பத்திரிகை முக்கியம் பெற்றிருப்பது உண்மையெனினும், கட்டுரையாளர் சுதந்திரன், தினகரன் பத்திரிகைகளின் பங்களிப்பு பற்றி எதுவும் கூறாமை வியப்பிற்குரியதே. தவிர 'இதர முயற்சிகள்' என்ற பகுதியில், நாட்டார்பாடல்கள் தொடர்பான (புலவர்மணி, ஷரிபுத்தீன் தொடக்கம் முத்துமீரான் வரையான சிலரது) கட்டுரை முயற்சிகள், முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் வெளியிட்டு வரும் பிரதேச ரீதியான முஸ்லிம் வரலாற்று ஆய்வுமுயற்சிகள் பற்றி இடம்பெறாமையும் கவனிக்கத் தக்கது.

'அறுபதிற்குப்பின் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில்பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு'(தேவ கௌரி) என்பது தொகுப்பிலுள்ள மற்றொரு கட்டுரை. அறுபதுகள் என்ற பிரிகோடு முற்போக்கு இலக்கியம் என்ற நோக்கில் பொருத்தமுடையதென்பதற்காக, பெண் எழுத்தாளர் முயற்சிகள் பற்றிய ஆய்விற்கு அது பொருத்தமுடையதாக இருக்க வேண்டுமா? கட்டுரையாளர் காரணங்கள் பல அடுக்கினாலும், அது, 'விபவி' அத்தகைய தலைப்பு கொடுத்திருந் நிர்ப்பந்தம் நோக்கிய செயற்பாடு என்றே கூறவேண்டும். ஆங்காங்கு ஒரு சில எழுத்தாளர்களின் படைப்புகள் பற்றிய சுருக்கக் குறிப்புகள் இடம்பெற்றாலும் முக்கியமான சிலர் பற்றிய கவனிப்புகள் (எ - டு: மண்டூர் அசோகா, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்) இடம்பெறவில்லை. 'எண்பதுகள்' முக்கியம் பிரிகோடு என்பது கட்டுரையாளரால் வலியுறுத்தப்பட்டிருப்பினும் விரிவான குறிப்புகளை அவர் தரவில்லை. 'சொல்லாத சேதிகள்' கவிஞர்கள் பற்றிக்கூறிய கட்டுரையாளர் அவர்களது பெண்நிலை நின்ற பார்வைகளுக்கு அழுத்தம் தராமல் அவர்கள் 'சமகாலப் பிரச்சினைகளை வெளிப்படுத்தினர்' என்றுரைப்பதனூடாக தனது பார்வைத் தெளிவின்மையை உணர்த்திவிடுகின்றார். எண்பதுகளுக்குப்பிற்பட்ட நாவலாசிரியைகள் பற்றி எதுவுமே கூறப்படாமை வியப்பிற்குரியது. தவிர, புகலிடப் படைப்புக்களோ ('பனியும் பனையும்' தவிர) விடுதலைப் போராளிகளது படைப்புக்களோ மேஜர் வானதி, பாரதி, கஸ்தூரி), பெண் சஞ்சிகைகளோ கட்டுரையாளரது கவனத்திற்குட்படாமையும் அலட்சியத்துக்குரிய விடயமன்று. சுருங்கக்கூறின், பட்டியலிடுந்தன்மையும் ஆங்காங்கே அவசரக் குறிப்புகளுமே கட்டுரையை நிரப்பி நிற்கின்றன எனலாம்.

'முற்போக்கு இலக்கியம் முகம் கொடுக்கும் சித்தாந்த நெருக்கடிகளும் ஆற்றவேண்டிய பணிகளும்' (பிரேம்ஜி) என்ற தலைப்பிலான கட்டு-ரையை, கட்டுரை என்பதனைவிட 'அறிக்கை' என்று கூறுவதே பொருத்தமானது. அவ்வாறெனில், அது 'கட்டுரையாளரின் தவறன்று; கருத்தரங்க ஏற்பாட்டாளரதுதவறென்றே கூறத் தோன்றுகிறது.

தவிர, இத்தொகுப்பிலுள்ள கட்டுரைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக உள்ளது, 'ஈழத்துத்தமிழ் இலக்கியமும் நவீன போக்குகளும்' (மு.பொன்னம்பலம்) என்பது மட்டுமே. இன்றைய இலக்கிய ஆர்வலர் பலர் போன்றே கட்டுரையாளரும் (Modern, Modernity, Modernism, Modernization ஆகியனபற்றியும் தமிழ்ச்சமூகச் சூழலில் அவை எவ்வெவ்விதங்களிலே மேலைத்தேயப் போக்குகளிலிருந்து வேறுபடுகின்றன என்பது பற்றியும் தெளிவான பார்வை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும், ஈழத்துப் படைப்புக்களில் Modernism சார்ந்த வெளிப்பாட்டு ரீதியான நவீன போக்குகள் (Modern Trends) பற்றிக் கட்டுரையாளர் கூறும் சில விடயங்கள் தேடலுடைய வாசகரை ஓரளவிற்காவது சிந்திக்கத் தூண்டுகின்றமை பாராட்டிற்குரியதாகும்.

மொத்தத்தில் இக்கட்டுரைத் தொகுப்பு தீவிரத் தேடலுடைய வாசகரைத் திருப்திப்படுத்துமா என்பது கேள்விக்குறியே. அவ்வாறெனில், தவறு எங்குள்ளது? அது ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டியது. ஆயினும், இவ்விடத்தில் பொதுவாகச் சிலவற்றைக் கூறலாம்; கலை, இலக்கியக் கருத்தரங்குகள் நன்கு திட்டமிடப்பட்டு, போதிய கால அவகாசமளித்து நடத்தப்படவேண்டும். கட்டுரையாளர்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டும். கருத்தரங்கிற்கு பின்னரும் தொகுப்பாவதற்கு முன்னரும் திறந்த மனத்துடன் ஆய்வு விடயங்கள் பரஸ்பரம் கலந்துரையாடப்பட்டு திருத்தப்படவேண்டும்.

இக்கட்டுரைத் தொகுப்பினை வாசித்து முடித்த பின்னர் என்னுள் எழும் ஒரு கேள்வி, இத்தொகுப்பிற்கு இடப்பட்டுள்ள தலைப்பு எவ்வளவு தூரம் பொருத்தமுடையது என்பதாகும்!

---

# 1983 ஜூலை 15 வருடங்களுக்குப் பிறகும்...



ஐக்கிய முன்னணி அரசாங்கம் திட்டமிட்ட ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்தி முடித்தது. யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கட்சிகள் யாவும் போட்டிபோட்டு தேர்தலில் பங்கு பற்றின. யாழ்ப்பாண மேயராக சரோஜினி யோகேஸ்வரன் பதவிப் பிரமாணமும் செய்து கொண்டார். பொறுப்பும் எடுத்து செயற்படத் தொடங்கினார். அதற்குள் அவர் படுகொலை செய்யப்பட்டார். அடுத்த மேயராக சிவபாலன். வேறு பல உறுப்பினர் இராஜினாமாச் செய்து கொண்டிருக்கின்றனர்.

இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் 1983 மே 18ல் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றது. 1983 - 1998க்கு இடைப்பட்ட காலத்தில் தமிழ்ப்பகுதிகளில் எத்தனையோ மாற்றங்கள். தமிழர்களது அரசியல் தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாகி விட்டது. அவர்களது எதிர்காலம் இந்த அரசியலுடன் பின்னிப் பிணைந்தது.

1983ல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு விடுதலைப்புலிகள் கேட்டிருந்தனர். அதன்படி 95வீதமான மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும், அத்தேர்தலில் த.வி.கூ., ஐ.தே.க. உட்பட பல கட்சிகள் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டன. தேர்தல் முடிவுகளின்படி கூட்டணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் கந்தர் மடத்திலுள்ள வாக்களிப்பு நிலைய்ம் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர். அதில் காவலுக்கு நின்ற இராணுவத்தினர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து கந்தர்மடத்திலுள்ள வீடுகள், கடைகள் என யாவும் இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டன, எரிக்கப்பட்டன. யாழ் நகரிலும் பல கடைகள் எரியூட்டப்பட்டன. இதன் எதிரொலியாக வவுனியாவிலும் தமிழர்களுக்கெதிரான பல வன்செயல்கள் தொடர்ந்தன.

இவற்றின் வளர்ச்சியாக இராணுவத்திற்கு விசேடமான அதிகாரமொன்று 83 ஜூன் 3ல் வழங்கப்பட்டது. இது கொல்லப்பட்டவர்களின் உடல்களை பிரேதப் பரிசோதனையோ, மரண விசாரணையோ இல்லாமல் அழித்து விடுதவதற்கான அதிகாரம்.

இதன்மூலம் இராணுவத்தினர் தமிழர்களை கொலை செய்வதற்கான சட்ட ரீதியான அதிகாரம் கிடைத்தது. இது இன்றுவரை தொடர்கிறது.

1983 ஜூன் ஆரம்பத்தில் மீண்டும் வவுனியாவில் இரு விமானப் படையினர் கொல்ல செய்யப்பட்டனர். இதற்குப் பழிவாங்குமுகமாக வவுனியா நகரில் பெருந்தொகையான தமிழர் கடைகள் எரிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து திருகோணமலையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் படிப்படியாகப் பெருகின. தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் கொலை செய்யப்பட்டனர். வீடுகள், கடைகள், ஆலயங்கள் என தேடித்தேடி சேதமாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. எரியூட்டப்பட்டன. அகதி வாழ்க்கை ஆரம்பமாகியது. இந்தச் செய்திகள் உட்பட தமிழ்ப் பகுதிகளில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவற்றையும் செய்திகளாக வெளியிட்டமையால் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த பத்திரிகைகளான 'சுதந்திரன்', 'சற்றடே றிவியூ' ஆகிய இரண்டும் ஜூன் மாதத்திலேயே அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டன.

1983 ஜூலை 23 இரவு 11.45 அளவில் பலாலி வீதியில் திருநெல்வேலிச் சந்திக்கருகில் ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவத்தினரின் வாகனம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தனர். இதில் 13 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே மாண்டனர். இத்தாக்குதலுக்கு பலரும் பல காரணங்களைக் குறிப்பிட்டிருந்தனர். இருப்பினும் ஜூலை 22ல் மூன்று தமிழ் மாணவிகள் இராணுவத்தினரால் கடத்தப்பட்டு பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். இதில் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். இவற்றுக்கு பதிலடி கொடுக்குமுகமாகவே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக விடுதலைப் புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து திருநெல்வேலி, பலாலிவீதி பழம்வீதி, கந்தபுராணவீதி, அம்மன் வீதி எனச்சென்று 40க்கு மேற்பட்ட தமிழர்களை இராணுவத்தினர் கொலை செய்தனர். காடைத்தனம் எங்கும் கட்டவிழ்த்து விடப்பட்டது.

ஜூலை 24ல் இச்சம்பவம் பற்றிய செய்திகள் எவையும் பத்திரிகைகளில் வெளிவரவில்லை. இலங்கை பூராவும் வதந்திகள் படுவேகமாக பலமுனைகளிலிருந்தும் பரவின.

ஜூலை 24 மாலை பொரளை கனத்தை மயானத்தில் 13 இராணுவத்தினரின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன. அதே கையுடன் சிங்கள மக்களின் ஆத்திரம் தமிழர்கள் மீது திரும்பியது.

→18

# கவிதாலாவண்யம் மிக்க ஒரு கலைஞனின் மறைவு !



சிற்பி விஸ்வலிங்கம்

ஓவியம் வரைவது ஒருவகையில் கவிதை எழுதுவது, சங்கீதம் இசைப்பது. ஒருவகையில் சிற்பம் செதுக்குவது, கவிதை பாடுவது. ஒருவகையில் வீணை மீட்டுவது. இவ்வாறு ஒரு கலையை மறுகலையால் ஆழ்ந்து சித்திரிக்க முயலும் போக்கு உலகக் கலைஞர்களிடையே நிலவிவருகிறது.

சங்கீதத்தை மரத்தில் வடிக்கும் தன்மை வாய்ந்த கலைஞன் என கலை விமரிசகர்களால் விதந்துரைக்கப்படும் கலைஞன் - சிற்பி ஐயாத்துரை விஸ்வலிங்கம். இவர் 30.07.98இல் தனது செதுக்கும் பணிக்கு முற்றாகவே ஓய்வு கொடுத்து விட்டார்.

விஸ்வலிங்கம் கண்டி மாநகரில் 1929ல் பிறந்தவர். கண்டி சில்வெஸ்டர் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றவர். மாணவராக இருக்கும் போதே 'ஒயில் பெயின்டிங்' செய்ய ஆரம்பித்தார். ஆரம்பத்தில் இவரின் கலைத்தாகத்துக்கு பெற்றோர் ஊக்கம் கொடுக்கவில்லை. பெற்றோரின் விருப்பத்திற்காக சட்டத்துறையில் தனது கல்வியைத் தொடர்ந்தார். ஆனால், அதில் தோல்வி கண்டார். பின்னர் சிறிது காலம் கூட்டுறவுப் பரிசோதகராகக் கடமை புரிந்தார். அங்கும் நிலைத்து நிற்க அவரால் முடியவில்லை. ஈற்றில் முழுநேரக் கலைஞனாக கலையை வாழ்க்கையாய் வாழத் தொடங்கினார்.

இவர் ஒருவரிடமும் முறையாகக் கற்றுக் கொள்ளவில்லை. தனது சுயதேடலினால் கலையின் பன்முகப்பாங்கில் ஆழ்ந்து வரத்தொடங்கினார். ஓவிய வழியிலிருந்து சிற்பக் கலைவழி தனது பயணத்தைத் தொடங்கினார். இவரது சிற்பக் கலைப் பிரவேசம் 1950களில் ஆரம்பித்தது.

ஆரம்பக் காலங்களில் அமெரிக்க சிற்பக்கலைஞர் ஆச்சிப் பென்கோவின் பாணியைப் பின்பற்றினார். பேனாக்கத்தியின் உதவியுடன் தனது சிற்பங்களைப் படைக்கத்தொடங்கினார். படைப்பின் வீறு இவரது தனித்தன்மை துலங்கவும் வழிவகுத்தது. முற்றிலும் தனித்தன்மை வாய்ந்த தனக்கேயுரிய பாணியைக் கண்டு கொண்டு வெளிப்படுத்தினார்.

1961ம் ஆண்டளவில் கலையை தனது ஜீவனோபாய வாழ்க்கையுடன் இணைத்துக் கொண்டார். பல்வேறு சிற்பங்களை பல்வேறு வெளிப்பாடுகளில் உருவாக்கத் தொடங்கினார்.

தனது முதலாவது கண்காட்சியை 1963ல் கண்டி கலாபவனத்தில் நடாத்தினார். இதன்மூலம் இவர் குறிப்பிடத்தக்க கலைஞராக அறிமுகமாகத் தொடங்கினார். சிங்களக் கலைஞர்கள் இவரது தனித்துவத்தைக் கண்டு மதித்தனர். பேராசிரியர் ராவ் பீரிஸ், இயன்குணதிலகா ஆகியோரின் ஊக்கம் கிடைக்கப்பெற்றது. 1965ம் ஆண்டளவில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இவரது சிற்பக் கண்காட்சி நடைபெற்றது.

இவர் தென்னிலங்கையில் மையங்கொண்டு பாதிப்பைச் செலுத்தி வந்தார். இதனால், முன்னணிக் கலைஞர்களைக் கொண்ட '67குழு' வுடன் இணைந்து இலங்கையின் பல பாகங்களிலும் கண்காட்சிகளை நடாத்தியுள்ளார்.

1984ல் நடைபெற்ற இலங்கைக் கலைச் சங்கத்தின் ஆண்டுக் கண்காட்சியில் இவரது 'பிக்கு', 'மீனவன்' ஆகிய சிற்பங்கள் முறையே முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலும் மரத்தையே தனது ஊடகமாகக் கொண்டவர். இதனால், மரச்செதுக்குக் கலைஞராகவே அறிமுகமானார். இவர் ஆரம்ப காலங்களில் தத்ரூபப் படைப்புக்களிலேயே அதிக நாட்டம் கொண்டார். காலம் செல்லச் செல்ல இவரது கலைத் தூண்டலின் பன்முகப்பாங்கு தத்ரூபப் பாணி மட்டும் போதாது என்பதை உணர்த்தியது. இதனால், கலை பற்றிய தனது அனுபவ அறிவுத்தளங்களில் தியானிக்கத் தொடங்கினார்.

தான் அதிகம் வாழ்ந்த தென்னிலங்கையின் பண்பாட்டினடியாக தனது கலைத்தூண்டலை வெளிப்படுத்தினார். ஆதலால், இவரது படைப்புக்கள் தமிழ்ச் சூழலுக்கு அந்நியமானவையாகவும் இருப்பதாகவும். ஆனால், அவை கலைத் தூண்டலின் உயிர்ப்புச் சிற்பங்களாக மனித அனுபவங்களுக்குப் பொதுமையாக இருந்தன.

இவரின் வெளிப்பாட்டுத்திறன்ற செய்நேர்த்தி ஓர் ஆளுமைமிக்க கலைஞனாக இவரை உயர்த்தியது. தனது படைப்புக்களில் மனித உணர்வுகளை ஒவ்வொரு கலைஞனும் தனது அனுபவ வெளிப்பாடாகத் தரவேண்டுமென்று கருத்துக் கொண்டிருந்தவர்.

இவரது செதுக்கலில் ஓர் முழுமையைக் காண முடியும். நீளமான உருவங்களையே அவர் விரும்பினார். அந்த நீட்சி அபாரமானது. ரசிக்கக்கூடியது. கருப்பொருளுக்கேற்றபடி சிதைவுகளும், விகாரங்களும் கொண்டிருந்தது. இதனால், உயிரோட்டம் நன்கு வெளிப்பட்டது.

கழிக்காமல் இயலுமான விதத்தில் அனைத்தையும் பயன்படுத்துவார். இதனால், பொருத்தமான படைப்புச்சாதனத்திற்காகக் காத்திராமல் கிடைப்பனவற்றில் தனது கற்பனையை வெளிப்படுத்துவார். எதையும் கலைத்தூண்டலின் மூலமே பார்க்கிறார். கலையாக்கம் செய்கிறார். இதனால் இவர் தங்கு தடையற்ற கலைவெளிப்பாட்டை புலப்படுத்தும் கலைஞன் ஆகிறார்.


தனது ரசனைக்கேற்ற விதத்திலேயே மரக்குத்தியை தெரிவு செய்வார். அதில் பேனாக்கத்தி உளி என்பவற்றின் உதவிகொண்டு தன் கற்பனையை வடிக்கின்றார். சிலவேளைகளில் கருங்காலி போன்ற கடினமான மரங்களையும் பாவிக்கின்றார். ஆனாலும், பெரும்பாலும் முதிரை, பலா போன்ற மரங்களையே தனது ஆண் - பெண் உருவங்களைச் செதுக்கப் பயன்படுத்துகின்றார்.

இவரது மரச்சிற்ப வேலைப்பாடுகள் இலங்கையின் சில பிரபல ஹோட்டல்களை அலங்கரிக்கின்றன எனவும் அறியமுடிகிறது.

நவீன சிற்பங்களோ உருவங்களாய், அருவங்களாய் உருவ அருவங்களாய், உருவங்கள் சிதைந்தும், சேர்ந்தும் பின் உருமாறியும் தோற்றம் கொண்டு உணர்வுகளின் வெளிப்பாட்டைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருப்பவை. இதனால் எந்தவித எல்லைகளுக்கும் அடங்க மறுப்பவை நவீன சிற்பங்கள் எனலாம்.

இங்கே சிற்பங்கள் மட்டுமல்ல அந்த நவீன சிற்பிகள் கூட வரையறைகளுக்கு அடங்கமறுப்பவர்கள் எதுவித கட்டுத்தளைகளுக்கும் ஆட்படாத தீவிர தேடலுடன் கூடிய சுதந்திர மன நிலையுடையவர்கள். அந்தவரிசையில் ஒருவரே விஸ்வலிங்கம்.





"இவரது செதுக்கலில்
ஓர் முழுமையைக் காணமுடியும்.
நீளமான உருவங்களையே
அவர் விரும்பினார்.
அந்த நீட்சி அபாரமானது,
ரசிக்கக்கூடியது,
கருப் பொருளுக்கேற்றபடி சிதைவுகளும்
விகாரங்களும் கொண்டிருந்தது,
இதனால் உயிரோட்டம்
நன்கு வெளிப்பட்டது"

சிற்பத்தின் ஒவ்வொரு பாகமும் அமைப்பிலும், நிலையிலும் மொத்த உணர்வுகளுடன் ஒத்திசையும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. எந்தக் கோணத்திலிருந்து நோக்கும்போதும் இவரது சிற்பங்களில் கவிதாலாவண்யம் பிசகாது வெளிப்படுகிறது என நண்பர் கொன்ஸ்ரன்ரைன் குறிப்பிடுவார்.

மரத்தில் இவர் கழிவாக அகற்றும் பகுதி மிகக்குறைவு. இயன்றவரை முழுப்பகுதியையுமே ஆக்கத்திற்குப் பயன்படுத்துகின்றார். அத்துடன் தட்டையான பரப்புக்களை இவர் அதிகம் விட்டுவைப்பதில்லை. அவற்றிலும் தனது கைவண்ணத்தை வெளிப்படுத்துவார். அவை முதன்மையான உணர்வுகளுடனும் செயற்பாட்டு நிலைமையுடனும் ஒத்திசையும் வகையில் வெட்டுக்களையும், வளைவுகளையும், தெளிவுகளையும் ஏற்படுத்துகின்றவையாக அமையும். இவரது சிற்பங்களின் முகங்களில் இவற்றைத் தெளிவாக காணலாம். படைப்புக்கள் யாவும் மனித உருவங்களைப் பூரணப்படுத்திக் காட்டுகின்றன. முதுமை/ சோகம்/துடியாட்டம்/நாணம்/பெரியமீன்/ பெண்கள்/காதலர்கள்/ வயோதிபர்கள்/பாம்பாட்டி/ விளையாடும் குழந்தைகள்/மேளகாரன்/ பயணி/ தளர்ச்சி/ காவடியாட்டம்/ ஊர்வலம்/ ஆண்டி போன்றவற்றை இவரது சிறந்த படைப்புக்களுக்கு உதாரணமாகக் கூற முடியும்.

சிற்பங்களுடன் அவ்வப்பொழுது கைப்பணிப் பொருட்களையும் செய்கிறார். இவர் எதையும்

1989 செப்டெம்பரில் யாழ் பல்கலைக்கழகத்தில் இருவடையே சிற்பக்கண்காட்சி ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. தமிழ்ப் பகுதியின் முதன்முதலான இவருடைய கண்காட்சி இது. 50க்கு மேற்பட்ட சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. தமிழ்கலை ஆர்வலர்களுக்கு விஸ்வலிங்கம் என்ற கலைஞரை - சிற்பியை அடையாளம் காட்டிய கண்காட்சி இது என்றே கூறமுடியும்.

இவர் வடமராட்சியில் வல்வெட்டித்துறையில் மனைவி மக்களுடன் வசித்துவந்தாராயினும் தமிழ்ப்பகுதிகளில் அதிகம் அறியப்படாதவராகவே இருந்தார் என்பது துரதிருஷ்டமானது.

இவரின் இளைய மகன், இவரது கலைப் பயணத்தைத் தொடர்வதற்காக முன்முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். இவர் தமிழரின் வாழ்வியல் அனுபவத்தளத்திலிருந்து எழுந்துவரத் துடிப்பவர். அவ்வகையில் அவர் சிற்பங்களைத் தருவார் என நம்புவோம்.

சிற்பி விஸ்வலிங்கம் தமிழர் மத்தியில் அதிகம் அறியப்படாது இருப்பினும் தனயனின் முயற்சிகள் மூலம் இவர் மீண்டும் கவனிப்புப் பெறும் கலைஞனாக மிளிர்வார் என்ற நம்பிக்கைகள் உண்டு.

**மதுசூதனன்**

17→

## 83 ஜூலை...

வீடுகள், கடைகள், வாகனங்கள் என இவை வளர்ந்து சென்றன. தமிழர்கள் உயிருடன் இம்சைக்குள்ளாக்கப்பட்டனர்; சொத்துக்கள் பல சூறையாடப்பட்டன.

24ம்திகதி அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஊடரங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டது. இருப்பினும் 'பாதுகாப்புப்' படையினர் இதனை நடைமுறைப் படுத்தத் தயங்கினர்.

25ம்திகதி தமிழர்களுக்கு எதிரான வன்முறைக் கலவரங்கள் வெடித்து எங்கும் பரவியது. இது 1958, 1971 கலவரங்களை விட இன்னும் கால ரீதியில், பண்பு நிலையில் வளர்ச்சியடைந்ததாகவே இருந்தது.

இனச்சுத்திகரிப்பு பலமுனைகளிலிருந்தும் அரங்கேறியது. முப்படையினர், அரசாங்க அதிகாரிகள், கட்சியின் முக்கியஸ்தர்கள், தொண்டர்கள், ஊர்ச்சண்டியன்கள், பொதுமக்கள் என பலதரப்பட்டவர்களும் கூட்டுச் சேர்ந்து அரசாங்க வாகனங்களைப் பாவித்துக் கொண்டு தமிழர்களை அவர்களது சொத்துக்களை குறிவைத்து தாக்கத் தொடங்கினர். ஓட ஓட விரட்டியடித்தனர்.

இத்தாக்குதல்கள் யாவும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தாக்குதல்களாகவே இருந்தன. தேர்தல் பெயர்ப் பட்டியலை கையில் வைத்துக் கொண்டு தேடித்தேடி அழிப்பு வேலைகளை முன்னெடுத்தனர். தமிழர்களுக்கு எதிரான போராட்டமாக வளர்வதற்கான முன் தயாரிப்புகள் பல மட்டங்களிலும் இருந்தன. தன்னெழுச்சியாகவும் கட்சி, அரசாங்க மட்ட அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பெற்றும் இவை நடைபெற்றன.

13 இராணுவத்தினரின் கொலைச் செயல் தான் இவற்றுக்கு காரணமென்று நடந்து முடிந்த சம்பவங்களின் பின்னர் ஏற்றுக்கொள்ள முடியாமலேயே உள்ளது. இவை யாவும் நீண்டகால திட்டமிட்ட அடிப்படையில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ரீதியில் நடைபெற்றிருக்கிறது. வரலாறு இதனையே சுட்டி நிற்கிறது.

ஜூலை 25ல் வெலிக்கடைச் சிறைச் சாலையில் தமிழ்க் கைதிகள் 37 பேர் சிங்களக் கைதிகளால் கூரான ஆயுதங்களால் தாக்கப்பட்டும், அடித்தும் கொலை செய்யப்பட்டனர். ஜூலை 28ல் மீண்டும் இதே சிறைச்சாலையில் 15 தமிழ்க் கைதிகள் அதே பாணியில் கொலை செய்யப்பட்டனர். மொத்தமாக 52பேர் கொலை செய்யப் பட்டார்கள். இவர்கள் யாவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இருந்தவர்கள்.

ஜூலை 29ல் தமிழர்களுக்கு எதிரான கலவரம் காட்டுத்தீயாக எங்கும் பரவியது. களவுகள், சூறையாடல்கள், எரித்தல், கொலை செய்தல், துன்புறுத்தல் என யாவும் அரங்கேறிக் கொண்டிருந்தன.


தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர் அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்தனர். கப்பல்களில் ஏறி தமது பிரதேசங்களை நோக்கிப் புறப்பட்டனர்.

இன்று, இந்த நிலைமைகள், பின்னர் வந்த நிலைமைகள் யாவுமே தமிழர்களுக்கு மிகுந்த எச்சரிக்கைகளையும், படிப்பினைகளையும் கொடுத்துள்ளன. தமிழர்களது அரசியல் வாழ்க்கையையே மாற்றியமைப்பதற்கான கவனத்தைக் கொடுத்த வரலாறுகளாகவே இவை உள்ளன.

இந்த ஜூலை 83ன் பின் தமிழர் அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க பண்பு நிலைப்பட்ட மாற்றங்களை உருவாக்கியது. இளந்தலைமுறையினர் பலரை தமது 'அரசியல்', 'எதிர்காலம்' பற்றிய பிரக்ஞைபூர்வமாக சிந்திப்பதற்கான வாயில்களை திறந்துவிட்ட காலப்பகுதியாகவே அமைந்துவிட்டது.

ஏலவே வளர்ந்து வந்த சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களை - முஸ்லிம்களை - மலையகத்தவரை ஒடுக்குவதற்கான சித்தாந்த ஒடுக்குமுறையாக தொழிற்பட்டுவருவது வெளிப்படை பேரினவாதம் என்பது ஒரு சில தனிநபர்களது விருப்பு வெறுப்புக்களிலிருந்து பிறப்பதல்ல என்பதை வரலாறு நமக்கு உணர்த்தியுள்ளது. ஆதலால், பேரினவாதம் ஒரு முறைமை (System) ஆகும். அது நிறுவனமயப்படுத்தப்பட்டது. இந்த முறைமை மாற்றியமைக்கப்படாத வரையில் எவ்வளவு தான் 'நல்ல', 'சிறந்த' நபர்கள் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களது நோக்கங்கள் கூட எவ்வளவு தான் உயர்வாக இருந்தாலும் அவை யாவும் இந்த முறைமையினால் மிகவும் குறுகிய அளவிலே மட்டுப்படுத்தப்படும்.

பொ.ஐ.மு. ஆட்சிக்கு வந்த பின்னரும், இன்றுள்ள வரையான நிலைமைகளையும் பரிசீலிக்கும் போது இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய எந்தக் கோரிக்கைகளையும், வாக்குறுதிகளையும் கூட நடைமுறைப் படுத்த முடியாத அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டவர்களாக, பலியாக்கப்பட்டவர்களாக அவர்கள் இருப்பதைக் காணலாம்.



# ஒரே ஒரு கேள்வி !

கடந்த 5.7.98 அன்று காலை 7.10ற்கு இலங்கை வானொலியில் நடைபெற்ற வாரம் ஒரு வலம் நிகழ்ச்சியைக் கேட்டவர்கள் நிச்சயம் சுரேஷுக்காக ஒரு கணம் அனுதாபப் பட்டிருப்பார்கள்.

அன்றைய தினம் மேற்படி நிகழ்ச்சியில் இளையதம்பி தயானந்தாவுடன் கலந்துரையாடிய ஈ.பி.ஆர்.எல்.எப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் யாழ். மாநகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரனின் படுகொலைகளைக் கண்டிக்க ஏன் மக்கள் முன்வருகிறார்களில்லை எனக் கேள்வி எழுப்பினார். அவரது கேள்வி நியாயமானது தான். நாம் மறுக்கவில்லை. ஆனால், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஒரு பத்து வருடங்கள் பின்னோக்கிப் பார்ப்பது நல்லது என நினைக்கிறேன்.

இந்திய இராணுவம் வட கிழக்கில் நிலைகொண்டிருந்த காலம் தெல்லிப்பழைப் பகுதியிலுள்ள ஒரு சிறு கிராமம் பொற்கலந்தம்பை. பொற்கலந்தம்பைக் கிராமத்தில் புலிகளின் நடமாட்டம் இருந்தது. ஒரு நாள் மாலை புலிகள் எமது வீட்டின் முன்னே இருந்த இலுப்பை மரத் தடியால் பதுங்கிப்பதுங்கி முன்னேறினர். ஒழுங்கையில் இந்திய இராணுவச் சிப்பாய்கள் நின்று கொண்டிருந்தனர். மறுகணம் புலிகளுக்கும், இந்திய இராணுவத்தினருக்குமிடையில் சமர் மூண்டது. லவன் என்ற புலி உறுப்பினர் கொல்லப்பட்டார்.

சம்பவம் நடைபெற்று மூன்றாம் நாள் அதிகாலை கிராமம் சுற்றிவளைக்கப் பட்டது. கிராமத்தவர்கள் அனைவரும் கிராமத்திலிருந்து வைரவர் கோயிலடிக்கு அழைத்து வரப்பட்டனர். நானும் எனது சகோதரர்களும் மற்றும் சிலரும் கோயில் வாசலில் இருந்த கொன்றை மரத்துடன் கட்டப்பட்டுத் தாக்கப்பட்டோம். அப்போது அங்கு வந்த ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர் என்னைப்பார்த்து சுரேஷ் கேட்ட அதே கேள்வியைக் கேட்டார். நீங்கள் ஏன் புலிகளிடம் இந்திய இராணுவத்துடன் போர் புரிய வேண்டாம் என்று சொல்லக் கூடாது என்றார். நான் சொன்னேன். நீங்கள் எல்லோரும் சேர்ந்து எம்மை பேசா மடந்தைகளாக்கி விட்டீர்கள். எந்த ஒரு இயக்கம் எங்களை வாய் திறந்து பேச அனுமதித்தது? ஆகவே நாங்கள் ஒன்றும் கதைக்க முடியாது. நாங்கள் உங்களுடன் ஒத்துழைத்தால் புலிகள் சுட்டுவிடுவார்கள். புலிகளுடன் ஒத்துழைத்தால் நீங்கள் சுட்டுவிடுவீர்கள் இது தான் நிலைமை என்றேன்.

ஒரு சமயம் நானும், எனது தந்தையாரும் மினி பஸ்ஸில் வந்து கொண்டிருந்தபோது மானிப்பாயில் வைத்து ஈ.பி.ஆர்.எல்.எப். முகாம் முன்றலில் ஆஸ்துமா நோயாளியான எனது தந்தையைக் கூட பஸ்ஸிலிருந்து இறக்கி ஏற்றிய வீரர்கள் இவர்கள். (தற்போது யாழ்ப்பாணத்தில் இலங்கை இராணுவம் கூட நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களை வாகனங்களிலிருந்து இறக்குவதில்லை.) நல்லவேளையாகப் பிரேமதாச பதவிக்கு வந்தபடியால் ஈழத்தமிழர்கள் தப்பிப்பிழைத்தனர்! இல்லாவிட்டால் இவர்களது அராஜக நடவடிக்கைகள் இன்றும் தொடர்ந்த வண்ணமேயிருக்கும்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் தான் ஒரு பேராசிரியரிடம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் படுகொலைகளை நீங்கள் கண்டிக்கக் கூடாதா என்று கேட்டதாகவும், அதற்கு அவர் ஹிட்லரின் ஆட்சிக்காலத்திலும் ஹிட்லரின் நடவடிக்கைகளை யாரும் கண்டிக்கவில்லை எனவும், ஹிட்லரின் ஆட்சி முடிந்ததும் ஹிட்லரின் நடவடிக்கைகளைப்பற்றி எல்லோரும் எழுதினார்கள் எனவும் பேராசிரியர் கூறியதாகக் கூறியுள்ளார்

4.7.98 சஞ்சீவி பத்திரிகையிலும் சுரேஷ் பிரேமச்சந்திரனின் மேற்கூறிய கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

தம்மால் உருவாக்கப்பட்ட மாகாண சபை இன்று பெயரளவிலாவது இயங்கிக் கொண்டிருப்பதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார். வடகிழக்கு மாகாண சபையில் 16,000 வெற்றிடங்கள் இருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இவற்றை நிரப்புவதற்குக் கூட இந்த மாகாண சபையால் முடியவில்லை. திருகோணமலையிலும், வவுனியாவிலும் வருடக்கணக்கில் தவம் கிடக்கும் யாழ்ப்பாண மக்களை யாழ்ப்பாணம் அனுப்பி வைப்பதற்குக்கூட இந்த மாகாண சபையில் இயவில்லை.

இப்போதும் கூட ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டதாகக் கூறப்படும் முன்னாள் 'தமிழ்ப்போராளிக்குழுக்கள் அப்பாவிப் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்தவில்லை. (ஈ.பி.ஆர்.எல்.எப். வேண்டுமானால் நாங்கள் திருந்திவிட்டோம். இப்போது நாங்கள் நல்ல பிள்ளைகள் என்று சொல்லக்கூடும்.) இன்றும் இராணுவத்தினரின் கைகளில் நிர்வாகம் இல்லாமல் முன்னாள் தமிழ்ப் போராளிகளின் கைகளில் வட கிழக்கு நிர்வாகம் இருந்தால்? கற்பனை செய்து பார்க்கவே சிறிது அச்சமாகத்தானிருக்கிறது.

இறுதியாக ஒரு கேள்வி, இந்திய இராணுவம் வடகிழக்கில் நிலை கொண்டிருந்தபோது சுரேஷ் பிரேமச்சந்திரன் ஏதாவது வெளிநாட்டிலிருந்தாரா? அவருக்கு இங்கு நடந்தது ஒன்றும் தெரியாதா?

**எழுவான்**

# ஒஸ்மனின் தெளிவு !

28.05.19982 அன்று வெளிவந்த சரிநிகரில் ''புரட்சியை மக்களிடம் திணிக்கமுடியாது'' என்று ஒஸ்மன் டி சில்வாவின் பேட்டி மிகவும் சிறப்பாக அமைந்தது. என்னை சற்று சிந்திக்க வைத்தது அவருடைய கருத்துக்களும், விளக்கங்களும் எக்காலத்துக்கும் பொருத்தம் உடையது.

இன்று நாம் வட - கிழக்கு யுத்தத்தை ஆராயும் பொழுது ஒஸ்மனின் கருத்து மூலம் எமது வரலாற்றை சற்று திரும்பிப் பார்க்கக் கூடியதாக உள்ளது. ஒஸ்மனின் ஆழமான கருத்தானது 71ம் ஆண்டு ஜே.வி.பி. யினரின் புரட்சி தோல்வியில் முடிந்ததன் முக்கிய காரணம் ஜே.வி.பி. தலைமைப் பீடமானது பாடசாலை, பல்கலைக்கழகங்களின் மாணவ மாணவிகள், வேலையற்ற இளைஞர்களின் ஆதரவை நம்பியே புரட்சியில் ஈடுபட்டது. அதே சமயம் புரட்சியைப் பற்றிய விளக்கங்கள் சாதாரண சிங்கள மக்களிடமும் ஏழைத்தொழிலாளரிடம் சென்றடையவில்லை என்ற உண்மையைத் தெளிவாகக் கூறியிருந்தார்.

இதேபோல் தான் தமிழர் விடுதலைக் கூட்டணி 1977ம் ஆண்டு ஈழப்பிரகடனம் செய்தபோது கூட்டணியினர் இளைஞர்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு நீண்டதொரு இரத்தக் களரிக்கு வழிவகுத்தார்களே தவிர அவர்கள் சாதாரண தமிழ் மக்களிடம் இருந்தோ புத்திஜீவிகளிடம் இருந்தோ ஆதரவைப் பெற்றார்களா என்பது கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.

**எம்.எம்.தயாளன், கொழும்பு**

## ஒரு திருத்தம்

**சென்ற இதழில் ''மாணிக்கதாசனின் புலம்பல்'' என்ற தலைப்பில் வெளியான குறிப்பில் அவரை பாராளுமன்ற உறுப்பினர் என்று தவறுதலாக குறிப்பிடப் பட்டு விட்டது. அதை மாநகரசபை உறுப்பினர் என்று திருத்தி வாசிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம். சிரமத்திற்கு வருந்துகிறோம்.**

(ஆ-ர்)

# எங்களை...

காலை 4 மணிக்கு அந்தப் பகுதியில் தொடங்கிய இந்த களேபரம் ஏறத்தாழ 8 மணிவரை நிகழ்ந்தது. சுரேஷை ஜீப்பில் போட்டுக்கொண்டு சென்றது ஜீப். கண் முன்னே கண்ட அவலம்அத்துடன் முடிந்து விட்டதென எண்ணிக்கொண்டிருக்கையில் மீண்டும் அன்று மாலை மூன்றரை மணியளவில் குற்றுயிராகக் கொண்டு வந்தனர் சுரேஷை. மீண்டும் பழைய கேள்விகள். "குணா எங்கே...? சமான்களை எங்கு மறைத்து வைத்திருக்கிறாய்...? எங்கே பார்சல்" என்ற கேள்விகளைக் கேட்டு வீதியின் மத்தியில் பலர் சூழ்ந்திருக்க தாக்கினர். அவரது தாயார் உறவினர்கள் கத்தி கதறினார்கள். ஏறத்தாழ 5 மணிவரை அங்கு அந்தக் கொடுமை நடந்தது. பின்னர் மீண்டும் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு சென்றனர்.

வந்தவர்கள் யார்? அவர்கள் எதனைத் தேடி வந்தார்கள்? திடீரென்று வந்து அந்தப் பகுதியையே உலுக்கி விட்டுச் சென்றதன் பின்னணியின் உள்நோக்கம் என்ன? புகைக்குண்டு என்ற ஒன்றை எடுத்திருப்பதாகக் கூறுகிறார்களே? அது எப்படி முளைத்தது? திட்டமிட்டு? கொண்டு வந்து போடப்பட்டதாயின் அதற்கான காரணமென்ன? ஏன் சுரேஷை இம்முறைத் தேடி வந்து சித்திரவதை செய்தார்கள்? சுரேஷை எங்கு தான் கொண்டு போய் வைத்திருக்கிறார்கள்? இந்த வினாக்கள் அந்தப்பகுதியில் பொதுவாக நிலவியது?

சுரேஷை எங்கு கொண்டு போய் வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய முடியாமல் ஆரம்பத்தில் பல பொலிஸ் நிலையங்களுக்கு போய் தேடியலைந்திருக்கிறார்கள். பின்னர் தான் வந்தவர்கள் நாக்கொட்டி (Narcotics)ஐச் (நாக்கொட்டி என்பது போதைவஸ்து குற்றத்தடுப்புப்பிரிவு) சேர்ந்தவர்கள் என்பதும் அதன் தலைமையகமான "3ஆம் மாடி"யில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை அறிந்து பார்க்கச் சென்றனர். இந்தக் குறிப்பிட்ட தினத்துக்கு முதல் வாரம் அதாவது கடந்த 13ஆம் திகதியன்று சுரேஷின் கடையில் வைத்து மருதானை பொலிஸார் சுரேஷைக் கைது செய்து பின்னர் அடுத்த நாள் விடுதலை செய்திருந்தனர்.

தற்போது சுரேஷ் மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை ஒரு சம்பவத்தோடு குறுக்கி விடாமல் இதுவே ஒரு போக்காக தொடர்ந்து வருவதை இனங்காண முடிந்தால், இது ஒரு சம்பவமாக மட்டும் இராது.

மாகாண சபைத் தேர்தலுக்கான ஆயத்தங்கள் நடந்து வருகின்றன. சார்க் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடந்து வருகின்றன. இந்த நிலையில் அரசின் கையாலாகாத்தனத்தை மூடி மறைக்கும் முயற்சியாக படையினர் உஷாராக இருப்பதாக அவ்வப்போது காட்ட இந்தக் கைதுகள், போலிக் குற்றச்சாட்டுகள், சோடனை செய்த வழக்கு விசாரணைகள் தான் உதவுகின்றன. அந்த வரிசையிலும் இந்த சம்பவத்தைப் பார்க்கலாம்.

# பழம்...

லும் சுட்டுக் கொன்றார்களா? நாகர்கோயிலில் வாழ்ந்த முஸ்லிம்களை கச்சைத் துண்டுடன் திருப்பி அனுப்பினார்களா?

ஆனாலும், விரைவில் பண்டிதர் தமிழ் நாட்டுக்கு ஒருமுறை சென்று வந்தால் நலம். கோயம்புத்தூர் தொடக்கம் சென்னை ஜக்கரியா காலனிவரை என்ன மாற்றம் நடந்திருக்கிறது என்பதை அறிவதற்கு.

***பழம்பண்டிதர்*** *- 'தேசியம் உங்களைக் காக்கவில்லை. உலக பலம் உங்கள் துயர் ஓட்டவில்லை.*

**அபூநிதால்**- நாங்களும் மாறி பந்தை அடிக்கலாமே. ஆனால் இது பட்டிமன்றமல்லவே. இதுவொரு இனத்தின்/ தேசத்தின் அரசியலுடன் சம்பந்தப்பட்டது. தேசியம் ஒருநாள் தமிழர்களைக் காக்கும். உலக பலம் தமிழர்களின் நீண்டகால கண்ணீரைத் துடைக்கும் இது தான் எங்கள் அரசியல். இது தான் எங்கள் பார்வை.

***பழம்பண்டிதர்*** *- இன்றைய சூழ்நிலையில் ''இடம்பிடிப்போம் வருக' என அழைக்கும் குரல்களை நினையுங்கள்.*

**அபூநிதால்**- ஏன் இடம்பிடிப்போம் என்ற வாசகம், யாழ்ப்பாணத்திற்கு முஸ்லிம்கள் படை திரட்டியா போகப் போகிறார்கள்? யாழ்ப்பாணத்திலிருந்த முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் தொடக்கம் வீடுகள், வர்த்தக நிலையங்கள் வரை முள்ளும் முறியாமல் இருந்தது இருந்த மாதிரியே பாதுகாத்துத் தானே வைத்திருப்பார்கள்.

பண்டிதர் 'இடம் பிடிக்க வரவேண்டாம் என்பதற்கு முன்னே யாழ்ப்பாணத்திற்கு இராணுவம். சென்ற கணத்திலிருந்தே ''வந்து குடியேறுங்கள்'' என்ற வார்த்தைக்கு விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையேயான யுத்தம் சுமூக நிலைக்குத் திரும்பாமல் விடுதலைப் புலிகள் அழைக்காமல் திரும்பி வரமாட்டோமென வடக்கு முஸ்லிம்களின் அமைப்புக்கள் உரத்துச் சொல்லிவிட்டனவே.

***பழம்பண்டிதர்*** *- இந்த நிலைப்பாடு உணர்வு நிலையில் எங்களை விட்டு உங்களை வெகுதூரம் மனத்தளவில் கொண்டு போயிற்று. பின் இடத்தளவிலும் அது நிகழ்ந்து போயிற்று.''*

**அபூநிதால்**- நன்று. சிங்கள இனவாதிகளும் ஜூலை 1983இல் இதைத் தான் உங்களுக்குச் சொல்லியிருப்பார்களேயானால், அது நியாயமான செயலாகுமா? இன்று தென்னிலங்கையில் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து அவர்களை வெளியேற்ற சிங்களவர்கள் இப்படி காரணம் கூறினால் நீங்கள் கூட அதனை ஏற்பீர்களா? என்ன கதை ஐயா!

***பழம்பண்டிதர்*** *- 'யாழ்ப்பாணத்தில் 'சோனகத்தெரு' எனத் தனித்தெரு இல்லாமல் எல்லாத் தெருக்களிலும் நீங்கள் கலந்திருக்கவேண்டும்.''*

**அபூநிதால்**- நல்ல நேரம் ''சோனகத் தெரு'' விடயத்துடன் மட்டும் நின்று கொண்டீர்கள். யாழ்ப்பாணத்திற்கு மீள இடம்பிடிக்க வருவதானால் எங்களுடன் கலப்பதற்கு உங்கள் இசுலாமியப் பெயர்களையும் மாற்றி ஜெயராஜ், சுப்புராஜ், என வைக்க வேண்டும் என சொல்லாது விட்டீர்களே.

பிரபாகரன் கூட மீண்டும் குடியேற இந்நிபந்தனையை இன்னும் விதிக்கவில்லை. நல்ல நேரம் பண்டிதர் அரசியல் இராணுவ சக்திபடைத்த படைத் தலைவனாக இல்லாதிருப்பது.

இக்கடிதம் பிரசுரமானதன்பின் தமிழ் முற்போக்கு சக்திகள், புத்திஜீவிகள் இக்கடிதம் தொடர்பாக தங்களது மனவேதனையையும், எதிர்ப்பையும் என்னிடம் பரவலாக தெரிவித்தனர். இது தமிழ் தேசியத்தின் மீது முஸ்லிம் மக்கள் இன்னும் தமது நம்பிக்கையை இழக்க நியாயமில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. நம்பிக்கை தரும் மானிட வாழ்வுக்கு இரு இனங்களின் சமத்துவமான அரசியல் சமூக வேலைத்திட்டங்களும் உடனடியாக இணைந்து முன்னெடுக்கப்படுவது அவசியமாகிறது.

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.

தொலைபேசி : 593615, 584380.

தொலை மடல் : 594229.


## பத்திரிகையாளர்கள் எங்கே?

கடந்த இரு வாரங்களுக்குள் இரண்டு தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இருவரும் வீரகேசரி பத்திரிகையைச் சேர்ந்தவர்கள். ஒருவர் பத்திரிகையின் உதவி ஆசிரியர்களில் ஒருவர். மற்றையவர் வவுனியா பிரதேச செய்தியாளர். இருவரும் பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்தைச் (Terrorism Investigation Department) சார்ந்த பொலிஸாரினாலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீரகேசரி அலுவலகச் செய்தியாளர் ஸ்ரீ கஜன் கைது செய்யப்பட்டு கொழும்பிலுள்ள இந்தத் திணைக்களத்தில் விசாரிக்கப்பட்ட பின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். மற்றையவரான மூத்த பத்திரிகையாளர் மாணிக்கவாசகம் அவர்கள் வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார். இவர் வீரகேசரிக்கு மட்டுமல்லாமல் வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களான ராய்டர், பி.பி.சி. என்பவற்றினதும் நிருபரும் கூட.

இந்த இருவரும் கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. பயங்கரவாதச் சம்பவங்களுடன் இவர்களுக்குத் தொடர்பு இருக்கலாம் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆயினும் உத்தியோகபூர்வமாக இதுவரை காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்த இருவரது கைதுகளும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழேயே செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஒரு நீதிபதியின் முன் நிறுத்தப்படுவதற்கான அவசியமோ, கைது செய்யப்படுவதற்கான பிடியாணையைக் கொண்டிருப்பதோ அவசியம் இல்லாமல் ஒருவரை கைது செய்ய வசதி செய்யும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் தொடர்பூடகவியலாளர்கள் மீது தொடர்ச்சியாக பல தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வந்திருக்கின்றன. நேரடியாக பொலிஸாரோ, அல்லது படையினரோ சம்பந்தப்பட்ட சம்பவங்கள் மட்டுமல்லாமல், இனந்தெரியாத கூலிப்படைகள் மூலமான தாக்குதல்களும் கூட கடந்த நான்காண்டுகளாக இடம்பெற்று வந்திருக்கின்றன.

சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் தாக்கப்பட்டது, சண்டே ரைம்ஸ் பத்திரிகை ஆசிரியர் மீது குற்றவியல் வழக்கு தொடரப்பட்டமை, சண்டே ரைம்ஸ் பத்திரிகையாளர் இக்பால் அத்தாசுக்கு தொடர்ச்சியாக மிரட்டல்கள் விடுக்கப்பட்டமை, அவரது வீட்டில் புகுந்து காடைத்தனம் செய்தமை, ரீ.என்.எல். தொலைக்காட்சி நிறுவன இயக்குனர் இஷினி விக்கிரமசிங்க திடீரெனக்கைது செய்யப்பட்டமை, அண்மையில் சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் வீட்டில் காடைத்தனமான தாக்குதல் நடாத்தப்பட்டு அவரது வாகனமும் சேதத்துக்குள்ளாக்கப்பட்டமை என்று இது ஒரு நீண்ட தொடர்கதையாகத் தொடர்கிறது.

ஆனால் இவை எல்லாவற்றிற்கும் வித்தியாசமானது இப்போது கைது செய்யப்பட்ட தமிழ்ப்பத்திரிகையாளர் இருவரதும் நிலை.

இதற்கு ஒரு காரணம், இவர்கள் இருவரும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் என்பதால் இலகுவாகவே இவர்களைப் புலிகளுடன் சம்பந்தப்படுத்திவிடலாம் என்பது.

இரண்டாவது இவர்கள் இருவரும் வேலை செய்வது ஒரு தமிழ்ப்பத்திரிகையில்.

மூன்றாவது, தொடர்புசாதனவியலாளர்கள் யார் கைது செய்யப்பட்டாலும், ஓங்கிக் கண்டனக் குரல் எழுப்பும் பத்திரிகையாளர்களது "உரிமை" நிறுவனங்களும் "பயங்கரவாத தொடர்பு" என்ற அரசாங்கத்தின் அறிக்கைக்குப் பின்னால் தம்மை வசதியாக மறைத்துக் கொண்டு அடக்கி வாசிக்கிறார்கள்.

பத்திரிகைத் தொழிலுடன் சம்பந்தப்படுத்தப்பட்டு அவர்கள் கைது செய்யப்படவில்லை என்றும் வேறு விசாரணைகள் தொடர்பாகவே அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் அரசாங்கம் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொண்டுவிட இவர்களுக்கு முடிந்துவிடுகிறது.

இந்த அரச தரப்பு இது மாதிரி விடயங்களில் எவ்வாறெல்லாம் பொய் உரைக்கும் என்பதற்கு கடந்த மூன்றாண்டு அனுபவங்களே சான்று.

ஆயினும், அரச தரப்பு அறிவிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழும் கைது செய்யப்பட்டவர் கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள் அவரது குடும்பத்தினருக்கு 24 மணி நேரத்துள் தெரிவிக்கப்பட வேண்டும்.

ஆனால் நடக்கவில்லை! அவர்களது உறவினர்கள் அவர்களைப் பார்க்க அனுமதிக்கப்படவும் இல்லை. அப்படியும் இது தான் நிலை!

குற்றச்சாட்டுக்கள் எதுவுமின்றி கைது செய்து வருடக் கணக்காக தடுத்து வைத்திருந்து விட்டு, எந்த குற்றச்சாட்டையும் சுமத்த முடியாமல் பலர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்றும் பலர் விசாரிக்கப்படாமலேயே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவையெல்லாம் தெரிந்தும், இப்பத்திரிகையாளர்களின் கைதுக்கு எதிராக உரத்துக் குரல் எழுப்ப, அவர்கள் வேலை பார்த்த பத்திரிகை கூட முயலவில்லை!

ஆக இது தான் இந்தத் தமிழ்ப் பத்திரிகையாளர்களின் நிலைமை!

இது தான் நிலைமை என்றால், சுதந்திரமான தொடர்பு சாதனத்துறை பற்றி அலங்காரமாக அறிக்கை விடும் தொடர்பு சாதனத்துறை அமைச்சரின் அறிக்கைக்கு என்ன அர்த்தம்?

அல்லது தமிழ்ப் பத்திரிகையாளர் என்றால் இந்த "சுதந்திரம்" எல்லாம் அவர்களுக்கு கிடையாது என்பதுதான் அவரது கோட்பாடா?

இல்லையென்றால் இவ்விரு பத்திரிகையாளர்களும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்!

அல்லது விசாரணை என்ற பெயரில் அவர்கள் தடுத்து வைக்கப்படுவதை நிறுத்தி, அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் முன்பாக, அவர்கள் கைது செய்யப்பட்டதற்கான காரணமும், அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற தகவலும் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.

சரிநிகர் இவர்கள் இருவரதும் தடுத்து வைப்பு குறித்து தனது பலத்த கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது!

# பத்திரிகையாளர் கழுத்தின் மேலே கத்தி!



ஸ்ரீ கஜன்



பி. மாணிக்கவாசகம்

சரிநிகரை ஆரம்பித்து சிறிது காலத்துக்குள்ளேயே குகமூர்த்தி என்கிற எமது சக பத்திரிகையாளரை நாம் இழந்தோம். காணாமல் போன குகமூர்த்தியைத் தேடி அலைந்த எமக்கு அவன் என்ன ஆனான் என்பது இன்று வரை தெரிய வரவேயில்லை.

நாங்கள் குகமூர்த்தியை இழந்தோம்!

இதேபோல் றிச்சர்ட் டி.சொய்சா கடற்கரையில் பிணமாய் ஒதுங்கினான்.

தொடர்ந்து அன்றைய பிரேமதாச அரசின் படுகொலை அரசியலுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள் கடும் தாக்குதலுக்கு உள்ளானார்கள், கைது செய்யப்பட்டார்கள் கடத்தப்பட்டார்கள், காணாமல் போயினர்.

பத்திரிகையாளர்களுக்கும், ஏனைய தொடர்பு சாதனவியலாளர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளுக்கு எதிரான கொதிப்பு மெல்ல மெல்ல எழுந்து வந்து சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கம் தோன்றக் காரணமாயிற்று.

92 மே 2ம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திர மறுப்புக்கு எதிராகவும், பத்திரிகைச் சுதந்திரத்திற்கு ஏற்பட்ட அச்சுறுத்தலுக்கு எதிராகவும், பத்திரிகையாளர் மீதான தாக்குதல், வழக்கு ஆகியவற்றைக் கண்டித்தும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கம்.

பழம் பெரும் பத்திரிகையாளர் சிறிலால் கொடிகார தலைமையில் இலங்கையின் முக்கியமான 14 பத்திரிகையாளர்கள் அங்கு குழுமியிருந்த நூற்றுக் கணக்கான மக்கள் மத்தியில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் தொடர்பான ஏழு தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

அந்த ஏழு தீர்மானங்களும் வாசிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதை எல்லோரும் எழுந்து நின்று கையுயர்த்தி ஆமோதித்தார்கள். அவ்வாறு ஆமோதித்தவர்களில் மூவர் அரசியல்வாதிகள். ஒருவர் காமினி திசநாயக்கா. அவர் இன்று உயிருடன் இல்லை. மற்றைய இருவரும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகவும், அவருடைய மந்திரிசபை உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவும் ஆவர்.

சரியாக ஐந்து வருடங்களில் நிலைமை எவ்வளவு தலை கீழாகி விட்டது பாருங்கள்.

நேற்று மாலை (ஜுலை 20) வவுனியாவிலிருந்து ஒரு தகவல் கிடைத்தது. வீரகேசரியின் வவுனியாச் செய்தியாளர் பி.மாணிக்கவாசகம் கைது செய்யப்பட்டார் என்று.

மதியம் இரண்டு மணிபோல் வவுனியா நகரசபைக்கு அண்மையிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார் விசாணைக்காக வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு கூறி அழைத்துச் சென்றனர். மாலை 5 மணியளவில் அவரை வீட்டுக்கு அழைத்து வந்த பொலிசார் மேல் விசாரணைக்காக மாணிக்கவாசகரை கொழும்புக்கு அனுப்பும்படி பாதுகாப்பு அமைச்சிலிருந்து உத்தரவு வந்ததாகக் கூறி பாதுகாப்பு அமைச்சினால் கைது செய்யப்பட்டோர் பற்றிய பற்றுச் சீட்டினை (பற்றுச் சீட்டு இல: 003995) அவரது மனைவியிடம் வழங்கி விட்டு கொழும்புக்கு அழைத்து வந்திருக்கிறார்கள்.

இதற்கு முன்னதாக ஜுலை 16ம் திகதி வீரகேசரியின் உதவி ஆசிரியர்களுள் ஒருவரான எஸ்.ஸ்ரீகஜனும் இவ்வாறு கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஜுலை 16ம் திகதி இரவு எட்டு மணியளவில் வீரகேசரி வாசலில் வைத்தே ஸ்ரீகஜன் கைது செய்யப்பட்டிருக்கிறார். கூடவிருந்த பத்திரிகையாளர்கள் இக் கைது குறித்து விசனம் தெரிவித்ததால் இரவு பன்னிரண்டரை மணியளவில் வந்து கைது செய்ததற்கான பற்றுச் சீட்டை வழங்கிச் சென்றிருக்கிறார்கள் பொலிஸார்.

கஜனுடன் சேர்த்து அவருடன் வசித்து வந்த இரண்டு சிறிய தாயார்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் ஆசிரியை, மற்றவர் விவசாயத் திணைக்களத்தில் கடமை புரிகிறார்.

வவுனியாவில் இருந்த கஜனின் தந்தையார் தகவல் அறிந்து கொழும்புக்கு வந்து சேர்ந்த போதும், இன்று வரை அவரால் மகனைப் பார்க்க முடியவில்லை. மகன் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்றும் அறிய முடியவில்லை. ஏன் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று தெரிந்து கொள்ளவும் முடியவில்லை.

இதே நிலைதான் மாணிக்கவாசகரின் மனைவிக்கும். அவர் ஏன் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்? எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று அவருக்குத் தெரிவிக்கப்படவுமில்லை.

சரிநிகருக்குக் கிடைத்த வேறு தகவல்கள் இவர்கள் இருவரும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் (T.I.D) கைது செய்யப்பட்டு பழைய சைத்திய வீதியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவாதாகத் தெரிவிக்கின்றன.

இவ்விருவருடைய கைது தொடர்பாகவும், வீரகேசரி நிறுவனத்துடன் தொடர்பு கொண்ட போது, 'இவர்கள் ஏன் கைது செய்யப்பட்டார்கள் எனத் தமக்குத் தெரியவில்லை என்றும், தாங்களும் இக் கைதுகள் தொடர்பாக அமைச்சர்கள், பா.உறுப்பினர்கள் ஆகியோருக்கும், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் அறியத் தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சரிநிகர் இது குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டதில், இவ்விரு கைதுகள் தொடர்பாகவும் தமக்கு வீரகேசரியிடமிருந்து எந்த வகையான முறைப்பாடும் இதுவரை சிடைக்கவில்லையென அது தெரிவித்தது.

சுதந்திரப் பத்திரிகையாளர் இயக்கமும் , பிரஜாதந்திரவாதய என்ற அமைப்பும், பத்திரிகையாளர் என்பதற்காக அல்ல பயங்கரவாதத் தொர்பு காரணமாகவே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று அரச படையினர் சொன்னதை நம்பிக் கொண்டிருப்பது அவர்களது அறிக்கையில் வெளிப்படுகிறது.

ரி.என்.எல்.ஐச் சேர்ந்த இஷினி விக்ரமசிங்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட போது அச்சட்டத்தையே நீக்கக் கோரிப் போராட்டம் நடாத்தியவர்களை, இரண்டு தமிழ்ப் பத்திரிகையாளர்கள் அதே சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட போது இன்னமும் தேடிக் கொண்டிருக்க வேண்டியது தான் இலங்கை அரசியலின் துரதிர்ஷ்டம் என்கிறார் ஒரு மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர்.

79 ஜுலை 15இல் யாழ்ப்பாணத்தில் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்ட பின்னர் முதன் முதலாக ஈழநாடு பத்திரிகையாளரான கந்தசாமி அநுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்ட போதும், யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான சற்றடே றிவியூ மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் எழாத எதிர்ப்புக் குரல் இப்போது எழும் என்று எதிர்பார்ப்பது மடமையல்லவா என்றும் அவர் கேட்கிறார்.

காலவரையறையற்ற செய்தித் தணிக்கை அமுலில் இருக்கிறது. யுத்தத்தைச் செம்மையாக நடாத்தக் கோரும் இக்பால் அத்தாஸிலிருந்து லசந்த விக்ரமதுங்க வரை தாக்கப்பட்ட , மிரட்டப்பட்ட பத்திரிகையாளர் பட்டியல் நீள்கிறது. பத்திரிகையாளர் கழுத்தில் கத்தி இருக்கிறது.

இன்ரநஷனல் பீஸ் பிரிகேட்டும், இன்ரநஷனல் அலேட்டும் நாட்டை விட்டு வெளியேற்றப்படுகையில் இது ஒன்றும் ஆச்சரியப்படத்தக்கதல்ல என்கிறார் மனித உரிமைகள் நிறுவனப் பிரதிநிதி ஒருவர். 1985 இல் கல்முனை பிரஜைகள் குழுத் தலைவராக இருந்த போல் நல்லநாயகம் நற்பிட்டிமுனைப் படுகொலைகளை அம்பலப்படுத்தி பி.பி.சிக்கு தகவல் கொடுத்ததன் காரணமாக மாதக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டார் அன்றைய அரசாங்கத்தினால்.

சார்க் மாநாடு நடைபெறவுள்ள தருணத்தில் வடக்கு கிழக்கில் புலிகள் நடாத்தும் தாக்குதல்கள், நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் வெளிவராமல் தடுப்பதற்கு முன் கூட்டியே அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளுள் ஒன்று தான் இதுவும் என்கிறார் அவர்.

ஐந்தாண்டுகளுக்கு முன் சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பாதுகாக்க எழுந்து நின்று முஷ்டியை உயர்த்திய சந்திரிகா ஞாபகத்துக்கு வந்து தொலைக்கிறார். பிறகு அவரும் அவருடைய கட்சியும், அனுதாபிகளும் தேசிய கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரக் கோட்பாடும் ஞாபகத்துக்கு வருகிறது. தமிழ் பத்திரிகையாளர்களின் கழுத்துக்கு மேலே கத்தி தொங்க விடப்பட்டிருப்பது அச்சத்தைத் தருகிறது!

அச்சந் தவிர்!

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02. அலோ சாலை. கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிறின்ற் இன். இல. 07. கெகடிய இடம். சிறிமல் உயன. இரத்மலானை. 21.07.1998.